
Koviloor Digital Library

மணிமொழி

ஆசிரியர் வி. கிருஷ்ணன்

10-7-54



ACC.NO.45787

சிறப்பு இதழ்

Koviloor Digital Library

Koviloor Digital Library

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. 45787

பரிபூரணனுக்கு அடிமை செய்வோம்



உலகியல் மனிதனை தவறான பாதையில்தான் கொண்டுசெல்லும், ஆகவே இன்று மக்கள் தவறான பாதையில் செல்லுகிறார்கள் என்றால் மக்கள் உலகியலில் அதிகம் அழுந்தி விட்டார்களென்று தான் கூறவேண்டும்.

இன்று உலகில் செயல் திறமை குறைந்து விட்டதாக எண்ணப்படுகிறது. அது தவறு. செயல்நடை பெற்றுக் கொண்டுதான் இருக்கிறது. ஆனால் இன்று நடைபெறுகின்ற கெட்ட செயல்கள் திருத்தி அமைக்கப்படவேண்டுமென்பது தான் என்னுடைய கருத்து. இன்றைய உலகம் அடிமைப்பட்டுவிட்டதாகவும், பணக்காரன் ஏழையை அடிமையாக்கிக் கொண்டுவிட்டதாகவும், ஆஸ்திகனை நாஸ்திகன் அடிமைப்படுத்திக்கொண்டதாகவும் பேசப்படுகிறது. இது தவறான கருத்து. அடிமையென்ற சொல்லில் பாதகமில்லை. மஹாகவி பாரதியார் கூட நாட்டின் சுதந்திரத்தைக் கற்பனைசெய்து சுதந்திரப்பள்ளு எப்படி கொண்டாடலாம் என்று பாடுகையில் "பூமியில் எவர்க்கும் இனி யடிமை செய்யோம்" என பூமியிலுள்ள மனிதருக்கு அடிமைப் படக்கூடாது என்று கூறிவிட்டு, "பரிபூரணனுக்கே அடிமை செய்துவாழ்வோம்" என்கிறார்.

— குன்றக்குடி அடிகளார்.

விலை அணா 8

Koviloor Digital Library



உள்ளுறை....

மணிமொழி வாசகர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும் எங்கள் வணக்கங்கள். "மணிமொழி" இதழ் துவங்கி ஐந்து மாதங்களே ஆகின்றன. இந்த ஐந்து மாதத்தில் "மணிமொழி சிறப்பிதழ்" வெளிவருவதென்றால் அதற்கு உங்களின் ஆதரவும் தவம் செய்த தவத்தால் வந்த அடிகளாரின் ஆசியும்தான் காரணம்.

இந்தச் சிறப்பிதழில் திருப்பெருந்திரு குன்றக்குடி அடிகளாரின் பொன் மொழிகள் மிகுதியாக ஆங்காங்கே சிதறிக் கிடக்கின்றன. மற்றும் வாழ்வில் மதத்தின் முக்கியம் பற்றி ராஜாஜியும், ஆடும் அழகுப்பெருமாள் பற்றி வித்வான் சுப்புரெட்டியாரும், பண்பட்ட உள்ளம் பற்றிய சிந்தனையை க. தேசிகனும், இலஞ்சி வள்ளல் பற்றி எஸ். என். ஏ. அவர்களும், குழந்தைகள் தரும் இன்பம் பற்றி கவிஞர் சாமி பழனியப்பனும், தற்கால மாணவர்களின் சிந்தனை பற்றி பாடலிங்கம் அவர்களும், தமிழரசில் அருள்நெறி பற்றி அழகர்சாமி அவர்களும் உலக மகா கவி தாகூரின் கீதாஞ்சலியை நமக்கென்று பிரத்யேகமாக மொழிபெயர்த்துதவிய பெரியார் வி. ஆர். எம் செட்டியார் அவர்களும், எங்கே கடவுள் என்பவர்களின் ஐயம் நீங்க விசுவநாதன் அவர்களும், உளங்கனிந்த பிரார்த்தனை பற்றி ஐ. ஏ. எஸ். அவர்களும், நல்லன செய்வது பற்றி மருள்நீக்கி அவர்களும், சமய வாழ்வு பற்றி சிவக்கொழுந்து அவர்களும், இறைத் தன்மை பற்றி வித்வான் சிதம்பரம் அவர்களும், இருளும் ஒளியும் பற்றி வி. திருநாவுக்கரசு அவர்களும், அன்றும் இன்றும் என்ற தலைப்பில் "இளைஞன்" ஆசிரியர் நடராசன் அவர்களும் விரிவான கட்டுரைகளை எழுதியுள்ளார்கள்.

அழகான கதைகளும் இந்த மலரில் இடம்பெற்றுள்ளன. அம்பிகையின் அருள், ஒட்டு மாம்பழம், உள்ளமே பேசு என்பவைகள் அவைகள். அத்துடன் தமிழ் நீதி மன்றத்தின் முன்னேற்றம் வித்வான் தி. கி. சுந்தரமூர்த்தியால் ஒத்திகை காட்டப் படுகின்றன. "அறம் வென்றது" என்ற தலைப்பில் வித்வான் தமிழன்னல் டால்ஸ்டாயை மொழிபெயர்த்துத் தந்துள்ளார்.

கவிதைகள் உள்ளத்துக்கு உவகையூட்டும்; கருத்துக்கு விருந்தளிக்கும். டாக்டர் மு. வ. அவர்களின் "உழவாரம்" உங்கள் உள்ளத்தைக் கொள்ளைகொள்ளும். அன்பு கருணையானந்தா அவர்களின் 'கும்மி", கவிஞர் கா. சீ. திருவாழ்மார்பன் அவர்களின் "பாடுக" என்ற கவிதை, பாரதி வகுத்த பாதை பற்றிய "வீரைக் கவிஞரின்" விரக் கவிதையும், குன்றக்குடியான் பற்றிய "சா. க" அவர்களின் கவிதையும் மற்றும் பல தலைப்புக்களிலே கவிஞர் முடியரசனின் எழிலோட்டமுள்ள கவிதைகளும், கி. வா. ஜகந்நாதனின் அருள்நெறி வாழ்த்தும், புலவர் முத்து வேங்கடாசலத்தின் அருள்நெறிக் கவிதையும் மலரின் முக்கிய பகுதிகளாக விளங்குகின்றன.

மற்றும் மூவ— அட்டை, உள்ளே பல உயர்ந்த படங்கள் இவைகளுடன் இந்த இதழ் அருள்நெறி மாநில மாநாட்டில் வெளிவருகின்றது.

அருள்நெறி தந்த அடிகளாரின் பொன்னார் திருவடிகட்கு
இந்த இதழை சமர்ப்பணம் செய்கின்றோம்.

Koviloor Digital Library

மணிமொழி

'பரிபூரணனுக்கே அடிமைசெய்து வாழ்வோம்''

-பாரதி

மணி 1] 10—7—54 [ஒலி 10

நல்லன தருக

தமிழகம் தெய்வமணங் கமழும் திருநாடு. இறைமணங் கமழும் இன்பத் திருநாடு. அருள்நெறி நின்று அன்பைப் பெருக்கி, அறம்பல வளர்த்த பெருமை நமக்குண்டு. காலப்போக்கில் அருள்நெறிக்கு மாறுபட்ட மருள்நெறிஇயக்கங்கள் தமிழகத்தில் தலைகாட்டத் தொடங்கின. இந்த சூழ்நிலை தமிழகத்தில் மீண்டும் அருள்நெறி இயக்கம் புத்துணர்ச்சியோடு பரவத் தொடங்கியதன் எதிரொலியே தேவகோட்டையில் நடைபெறும் மாநிலமாநாடு. கடந்த 2 ஆண்டுகளில் சென்ற காலத்தில் அருள்நெறித் திருக்கூட்டம் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் தலைமையின்படி நின்று சாதித்துள்ள சாதனைகள் உண்மையிலேயே மகிழ்ச்சிக்குரியனவாம். இன்று பல்லாயிரக்கணக்கான மக்கள் அருள்நெறிப் பாதையில் அடிவைத்துச் செல்கின்றனர். ஊர்தொறும் பொதுப் பிரார்த்தனைகள், கூட்டு வழிபாடுகள் சீரிய முறையில் நடந்து வருகின்றன. நூற்றுக் கணக்கான தன்னலமற்ற தொண்டர்கள் அருநெறியின் வளர்ச்சியிலேயே கருத்தைச் செலுத்தி காலம் முழுதும் உழைக்கின்றனர். அருள்நெறிப் பாதையினின்று விலகிச் சென்ற இளைஞர் சமுதாயம் இன்று பரிபூரணமாக அருள்நெறிப் பணியில் ஆர்வத்தோடு ஈடுபட்டுள்ளது. இத்தகு வளர்ச்சிக்கு அருள்பாலித்த திருவருளுக்கும், நல்லன்பர்களுடைய சிந்தைக்கும் தமிழகம் கடமைபட்டுள்ளது.

தவப்புதல்வரும், அருள்நெறிச் செல்வருமாகிய ராஜாஜி அவர்கள் நம்மிடையே இன்று இருப்பது பெரும் பேறுகும். அவர்களுடைய அனுபவ உள்ளத்திலிருந்து வரும் நல்லுரைகள் அருள்நெறித் திருக்கூட்டத்தினரின் ஆக்கப் பணிகளுக்கும், வளர்ச்சிக்கும் அடிகோலும் என்பது நாடறிந்த உண்மை. இன்னும் பல புலமைச் செல்வர்களும், தளராத சிந்தையோடு திருத்தொண்டில் ஈடுபட்டுள்ள பல தொண்டர்களும் மாநாட்டில் கலந்து கொள்கின்றனர். பணி துறைமுறைகளை வகுத்து திறம்படச் செயலாற்ற வேண்டும் என்ற எண்ணம் திருக்கூட்டத்தினருக்கு இருப்பதை மாநாட்டின் நிகழ்ச்சியே காட்டுகிறது. அதற்கென்று ஒருநாள் தனியே ஒதுக்கியுள்ளனர். நல்ல திட்டங்களை வகுத்துக்கொண்டு, அன்புநிறைந்த ஆர்வம் பொருந்திய உணர்ச்சியோடு திறம்படப் பணிகளைச்செய்து அருள்நெறியை வளர்த்து மக்களினத்துக்கு நல்லன தருவார்களாக. *




'மணிமொழி' ஆசிரியர் V. கிருஷ்ணன்



அருள்நெறித் திருக்கூட்ட மாநில மாநாட்டினைச் சிறப்புறச் செய்யும் செம்மல் D. R. அருணாசலம் அவர்கள் தேவகோட்டை.

தமிழ்நாடு அருள்நெறித் திருக்கூட்டப் பொதுச்செயலாளர்கள்

Koviloor Digital Library



உயர்திரு. சா. கணேசன் அவர்கள்
காரைக்குடி.



உயர்திரு. எஸ். மீனுட்சிசுந்தரனர், B. A., L. T.
ஈரோடை.

Koviloor Digital Library

நேம் அன் டிசைன்
ரிஜிஸ்டர்டு நிர். 143106

(ஸ்தாபிதம் 1926)

போன் நிர் 334

ராஜாபார்லி பிஸ்கட்ஸ்

ASP தயாரிப்பு

ராஜாகுளுகோ பிஸ்கட்ஸ்

கிளைகள்: டவுன்ஹால்ரோடு, மதுரை.

115 திண்டுக்கல்ரோடு, மதுரை.

மெயின்ரோடு, திண்டுக்கல்.

★

படிக்கவோ, அன்றி பரிசளிக்கவோ

எல்லா வகையான புத்தகங்களும்

எப்பொழுதும் கிடைக்கும் இடம்:

நவயுகப் புத்தகாலயம்

கல்லுக்கட்டி :: காரைக்குடி

★

MALLIKA மல்லிகை SCENTED MALLIKA BETEL NUT POWDER

மல்லிகா

ஸ்டோர்ஸ்

வாசனைப் பாக்குத்தூள் &
டிரைபுரூட்ஸ் வியாபாரம்
கல்லுக்கட்டி கிழ்கரை
காரைக்குடி.

★

V.P. சுவாமிகம்பெனி
பிளாக்மேக்கர்ஸ்



போட்டோ, லைன், கலர் பிளாக்குகள்,
ரப்பர்ஸ்டாம்புகள், சினிமாசிலைடுகள்,
அரக்கு சீல்கள் செய்யுமிடம்.

24, மேலக்கோபுர தெரு, மதுரை.

★

Koviloor Digital Library

இங்கரில்:-

திருப்பூர் அசல் கதர் ரகங்களும் ஈரோடு, சேலம் கைத்தறி ஜவுளிகளும் மீனுக்ஷி டெக்ஸ்டைல் கைத்தறி ஜவுளிகளும் மொத்தமாகவும், சில்லரையாகவும் குறைந்த விலைக்கு கிடைக்கும்.

திருப்பூர் ஜவுளி ஸ்டோர்ஸ்

No. 4 பிருந்தாவனம் பில்டிங் செக்காலை ரோடு, காரைக்குடி

பிராஞ்சுகள்: அறந்தாங்கி, அருப்புக்கோட்டை

நியூ சந்திரா சோப்

கைத்தொழிலை ஆதரியுங்கள்
உயர்தர ரசாயன முறையில்
தயாரிக்கப்பட்ட எமது

நியூ சந்திரா சோப்புகள்

எல்லாவிதமான ஆடைகளின்
அழுக்கையும் அகற்றத்
திறமையுள்ளது.

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்

தயாரிப்பவர்:

நியூ சந்திரா சோப் கம்பெனி,

P. B. No. 18. காரைக்குடி

K. R. துரைராஜ் நாடார்

வர்ணம், இரும்பு வியாபாரம்
No. 3. பிருந்தாவனம் பில்டிங்ஸ்,
செக்காலை ரோடு,
காரைக்குடி.

எங்களிடம்:-

கட்டிடங்களுக்கு வேண்டிய சகல இரும்புச் சாமான்களும், வர்ணம் வார்னிஷ் & எனுமல்களும் விலை சகாயமாய்க் கிடைக்கும்.

<u>எமது வேண்டுகோள்</u>

மணிமொழிப் பத்திரிகையின் ஜூலை 15 தேதி இதழை மாநில மாநாட்டை ஒட்டி சிறப்பிதழாக வெளியிட்டிருக்கிறோம்.

அறிவிற்கு உவகையூட்டுவது "மணிமொழி"ப் பதிப்பக வெளியீடுகளே ! இன்றே வாங்கிப் படியுங்கள்.

Koviloor Digital Library

வாழ்க்கையில் மதம்

சி. ராஜகோபாலாச்சாரியார் அவர்கள்



நம் நாட்டுக்கு எது தேவை? மூலதனம் தான் என்கின்றனர் சிலர். மற்றும் பலர் வேறு என்னவோ தேவை என்கின்றனர். நான் கூறுகிறேன்நேர்மைதான் தேவை என்று. அது நம்மிடமிருந்தால் எவ்வளவோ சாதித்துவிடலாம்.

நம் நாட்டின் செல்வத்தைச் சரியாக விநியோகித்தால் எல்லாப் பிரச்சனைகளும் தீர்ந்து விடுமென்று சிலர் கூறுகின்றனர். இது சரியான பரிகாரமல்ல. நமக்குத் தேவையானது சம விநியோகமல்ல. செல்வத்தை அதிகமாக உற்பத்தி செய்வதே நம் நாட்டின் தேவை. தேசபக்தியால் செல்வத்தை உற்பத்தி செய்துவிடலாம் எனச் சிலர் நினைக்கின்றனர்.

நமது தேசம் மகத்தான தேசம் என்றும், பண்டைய பெருமையை மீண்டும் நிலைநாட்டவேண்டும் என்றும், அதற்காகக் கடுமையாக உழைக்கவேண்டுமென்றும் கூறினால், ஜனங்கள் சரியென்று ஒப்புக்கொள்வார்கள். ஆனால் சரியாகச்சிந்திப்பது ஒருவிஷயம். உழைப்பது வேறு விஷயம். உழைப்பினால் தனக்கு ஏதாவது கிடைக்குமா வென்பதை மனிதன் யோசிக்கிறான். ஆகவே ஊக்கம்-வருமான எண்ணம் அவசியமாகிறது. விஷயத்தை தீர்க்கமாகப் பரிசிலனை செய்தால் நேர்மை என்ற நிரந்தரப் பண்பாட்டைச் சிருஷ்டிப்பதைத் தவிர வேறு வழியில்லை என்பது புலனாகிறது. இதற்கு நாம் மதம் அல்லது ஆரம்பகால குடும்பப் பழக்கத்தை அல்லது கல்வி பழக்கத்தையே நம்பவேண்டி இருக்கிறது. எப்படி-எதற்காக என்று காரணம் கேட்காமலேயே சரியான காரியங்களைச் செய்யவும், சரியான முறையில் சிந்திக்கவும் பேசவும் இயற்கையாக உணர்ச்சி ஏற்படவேண்டும். ஏன் நேர்மையாக நடக்கவேண்டும். என்றெல்லாம் பலர் கேட்கின்றனர். இம்மாதிரி கேட்க ஆரம்பித்தால் நாம் அழிவோம். கேள்வி கேட்காமலேயே, சரியான முறையில் நடந்து கொள்ள வேண்டும் என்ற உணர்ச்சியை வளர்த்தால் தான் நாம் நம்மைக் காப்பாற்றிக் கொள்ள முடியும்.

ஒவ்வொருவரும் அவரது மதம் எதுவாயினும் சரி. குழந்தைகளிடம் மற்றும் தம்மைச் சுற்றியுள்ளவர்களிடமும் சென்று அவருடைய சொந்த மதத்தில் பற்றுவைக்கவேண்டிய அவசியத்தை வற்புறுத்தவேண்டும். எந்த மதமும் சிறந்தது தான். இந்தியாவில் எல்லாமதங்களும் இருக்கின்றன.

மாணவர்கள் மனதில் மதப்பற்றை ஏற்படுத்தலாம் இளம் மனதில் இவ்வுணர்ச்சியைப் புகுத்துவது சுலபம். அன்றாட வாழ்க்கையில் மதத்தின் அவசியத்தைக் குறைக்கும் காரியங்களை ஆசிரியர்கள் செய்வதோ விஷயங்களைப் பேசுவதோ கூடாது. பூராவும் மதம் வழியதாக இருக்கவேண்டுமென்று மகாத்மாஜீ உபதேசித்த தத்துவத்தை ஒவ்வொருவரும் பின்பற்றுவது மிக அவசியம் வாழ்க்கையின் சகல அம்சங்களிலும் மதம் இடம்பெறவேண்டும்.

Koviloor Digital Library



ஆடும் பெருமாள்

வித்துவான் N. சுப்பு ரெட்டியார், M. A., B. Sc, L. T.,

பாடுவதையே பணியாகக்கொண்டு பகவான் மீது பக்தி செலுத்தியவர்களில் தமிழ்க் கவிஞர்கள் தலைசிறந்தவர்கள். 'முத்தமிழால் வைதாரையும் வாழவைப் போனுகிய' முருகப்பெருமானைக் கவிதை மலர்களால் வழிபாடு செய்த அருணகிரியார் கூட,

''பாடும் பணியே பணியா வருள்வாய்''

என்று ஆண்டவனிடம் முறையிட்டார் என்பதை நாம் படிக்கும்போது அவருக்குப் பாடல்களால் பக்தி செலுத்துவதில் எவ்வளவு ஆர்வம் இருந்திருக்கவேண்டும் என்பதை ஒருவாறு அறியமுடிகிறது.

தமிழ்நாட்டிலே பக்திமணம் கமழச் செய்த பெரியோர்களில் நாயன்மார்களும் ஆழ்வார்களும் சிறந்து விளங்குகிருர்கள். சைவமும் வைணவமும் செழித்த காலத்தில் பக்திமணங்கமழும் கடவுட் பாடல்கள் தமிழ் இலக்கியச் செல்வத்தைப் பெருக்கின. தமிழின் சமய வேட்கையால் தமிழ் இலக்கிய உலகம் பெற்ற பாக்கியம் இவ்வளவு அவ்வளவு என்று சொல்லமுடியாது. இவைகள் இயற்றப்பெருமல் இருந்திருந்தால் தமிழ் இலக்கியக் கருவூலம் எவ்வளவு குறைவுபட்டிருக்கும் என்பதை எண்ணிப்பார்த்தால் இவைகளின் ஒப்பற்ற பெருமை நன்கு விளங்கும்.

சைவ சமயக் குரவர்களாகிய அப்பர், ஞானசம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர், போன்ருர் ஏராளமான பக்திப்பாடல்களைப் பாடியுள்ளார்கள்; இவர்களைப்போலவே ஆழ்வார்களும் ஏராளமாகப் பாடியுள்ளார்கள். தமிழ்க் கவிதையில் உள்ளத்தை உருக்கக்கூடிய ஒரு தனிச்சிறப்பு ஆழ்வார் பாசுரங்களுக்கு உண்டு. தமிழ்நாட்டில் பக்தி மார்க்கம் பரவுவதற்கு ஈடும் எடுப்பும் அற்ற இனிமைத் தமிழ் ஒரு சிறந்த கருவியாக இருந்து வருகிறது. மக்களைத் தன் இனிமையால் தன்பால் ஈர்க்கும் தன்னேரில்லாத் தமிழ் ஆண்டவனையும் ஈர்த்திருக்கிறது. திருமால் அன்பர்களின் தமிழுக்கு வசமாகி அவர் பின்சென்ற கதை தமிழர்களின் இதயத்தைக் கொள்ளை கொண்டிருக்கிறது. முருகக் கடவுளின் அருள்பெற்றுப் பாடிய குமரகுருபர சுவாமிகள்,

'பழமறைகள் முறையிடப்
பைந்தமிழ்ப் பின்சென்ற
பச்சைப் பசுங்கொண்டலே'

என்று பாடியுள்ளதை நாம் படிக்கும் போது இவ்வுண்மை நமக்கு நன்கு தெளிவாகிறது.

தமிழர்கள் ஆண்டவனைப் பலவிதமாகத் தொழுது பரவியிருக்கிருர்கள்; தங்கள் தங்கள் மனேபாவத்திற்குத் தக்கபடியெல்லாம் கவிதைகளால் பாடிப்போற்றியிருக்கிருர்கள். தமிழின்பால் ஏக்கங்கொண்டு சென்ற திருமால் வேங்கடத்தில் நின்ற கோலத்தையும், திருவரங்கத்தில் அறிதுயில்கொண்டுள்ள வண்ணத்தையும் பாடிப் பரவிய பக்தர்கள் அவர் ஊஞ்சலில் ஆடிய கோலத்தையும் பாடியிருக்கிருர்கள்.

சாதாரணமாகத் திருமணக் காலத்தில் பெண்ணையும் மாப்பிள்ளையையும் பலவித கோலங்களில் கண்டுகளிக்கும் பெற்ருேர்கள் அவர்களை ஊஞ்சலில் ஏற்றியும் மகிழ்வதை இன்றும் நாம் காணலாம். நலங்கு முதலிய நிகழ்ச்சிகளையெல்லாம் ஏற்படுத்தி,மணமக்களைப்பலர்முன்பாகச் சிறு விளையாட்டுகள் விடுவதெல்லாம் பெற்ருேர் தம் மக்கள்பால் வைத்திருக்கும்

Koviloor Digital Library

அன்பையே காட்டுகிறது. இம்மாதிரியாக ஊஞ்சலில் உட்காரவைத்துக் கண்டுகளிக்கும் வழக்கத்தையுடைய மக்கள் ஆண்டவனையும் அவ்வாறு வைத்துக் கண்டுகளித்து வருகிறார்கள். தமக்குப் பிரியமாகவுள்ளவையெல்லாம் ஆண்டவனுக்கும பிரியமானவையென்று கொண்டுள்ள படியால்தானே, இன்று கோவிலில் பலவித அபிஷேகங்கள், நைவேத்தியங்கள், ஆராதனைகள், முதலியவற்றைச் செய்து வருகிறார்கள்?

பிற்காலத்தில் கவிஞர்கள் ஊசலை ஒரு தனிப் பிரபந்தமாகவும் செய்துள்ளார்கள். சில கவிஞர்கள் கலம்பகத்தில் இதை ஒரு உறுப்பாக வைத்து மிக அழகாகப் பாடியுள்ளார்கள். தாய்மார்கள் குழந்தையை ஊஞ்சலில் வைத்து ஆட்டி இன்பம் அடைவதைப் போலவும், பெற்றோர்கள் திருமண காலத்தில் மணமக்களை ஊஞ்சலில் உட்காரவைத்து இன்பம் பெறுவதைப் போலவும் கவிஞர்களும் பக்தர்களும் ஆண்டவனை ஊஞ்சலில்வைத்து பாடிப் பேரின்பத்தைப் பெற்றிருக்கிறார்கள். இப்பாடல்களைப் படிக்கும் நாமும் பரவசப்படுகின்றோம்; பேரானந்தத்தை அடைகின்றோம்.

'ஆடிரூசல்', 'ஆடாமோஊசல்', 'ஆடுக ஊசல்' என ஏதாவதொன்றால் முடிவு பெறுமாறு ஆசிரிய விருத்தத்தாலாவது கலித்தாழிசையாலாவது பாடப்படுவதை ஊசல் என்று இலக்கண ஆசிரியர்கள் கூறுவார்கள். வச்சணந்திமாலை என்னும் பாட்டியல் நூல் இதனை,

'ஆங்கவிருத் தத்தால்
அறைந்தகலித் தாழிசையால்
ஓங்கியசுற் றத்தளவாய் ஊசலாம்'

என்று கூறுகிறது, இலக்கண விளக்கம் என்னும் நூல்.

அகவல் விருத்தம் கலித்தா ழிசையால்
பொலிதரு கிளையாடும் புகலுவ தூசல்

என்று இதற்கு விளக்கம் தெரிவிக்கிறது.

திருமால் ஆடிய ஊசலை கவிஞரொருவர் மிக அழகாக வருணித்திருக்கிறார்.

உயரவிட்ட கற்பகப்பூம் பந்தர் நீழல்
ஒண்பவளக் கால்நிறுவி ஊடு போட்ட
வயிரவிட்டத்(து)ஆடகச்சங் கிலிகள் நாற்றி
மரகதத்தால் பலகைதைத்த ஊசல்மீதே

[உயரஇட்ட - உயரமாகச் சமைத்த; ஒண்பவளம் - ஒளியுள்ள பவளம்; ஊடு போட்ட-இரண்டிற்கும் நடுவில் அமைத்த; ஆடகச் சங்கிலிகள்-பொன்னாலாகிய சங்கிலிகள்; நாற்றி-தொங்கவிட்டு]

பெருமாள் இருந்து ஆடுகிறார் என்று காட்டுகிறார்.

கவிஞர் காட்டும் ஊசல் மிக அழகானதொரு ஊசல். கற்பகச்சோலைபோன்று மிக உயரமானதொரு பூப்பந்தலின் நிழலில் பவளக் கால்கள் நிறுத்தப்பெற்று அவற்றின் நடுவில் வயிரத்தாலான விட்டம் போடப்பட்டிருக்கிறது. அவ்விட்டத்தில் பொற்சங்கிலிகளை மாட்டி அச்சங்கிலிகளில் பச்சைக் கல்லால் செய்யப்பட்ட ஊசல் பலகை தொங்கவிடப்பட்டிருக்கிறது. அத்தகைய ஊஞ்சலில் உட்கார்ந்துகொண்டு பெருமாள் ஊஞ்சல் ஆடுகிறார்.

ஊஞ்சலின்மேல் அமைக்கப்பெற்றிருக்கும் விமானம் நீலப்பட்டால் வேயப்பட்டு அதில் முத்துக்கள் பதிக்கப்பெற்றிருக்கின்றன. அது நட்சத்திரங்கள் ஒளிக்கும் நீலவானம்போல் காட்சியளிக்கிறது. பெருமாளுக்குமேல் விளங்கும் வெண்கொற்றக் குடையோ ஆகாயத்தில் தோன்றும் முழுமதியம்போல் காட்சியளிக்கிறது. அவருக்கு இரண்டு பக்கத்திலுமிருந்து வீசப்படும் வெண்சாமரங்கள் சந்திரனுடைய கிரணங்கள்போல் காணப்படுகின்றன.

அந்தணர்களும், அரசர்களும், தேவர்களும் அவர்கள் துணைவியரும், தேவேந்திரனும், பிரமதேவனும், பரமசிவனும் பெருமாளைச் சேவிப்பதற்காகச் சமயம் பார்த்துக்கொண்டு காத்திருக்கிறார்கள். தக்கசமயம் வந்ததும் பெருமாளைக் கண்டு வணங்குகிறார்கள். வந்திருந்தவர்கள் பெருமாளின் ஊஞ்சலைப் பிடித்து ஆட்டுகிறார்கள்.

மலைமகளும் அரனும்ஒரு
வடந்தொட் டாட்ட
வாசவனும் சசியும்ஒரு
வடந்தொட் டாட்ட
கலைமகளும் அயனும்ஒரு
வடந்தொட் டாட்ட
கந்தனும்வள் ளியும்கலந்தோர்
வடந்தொட் டாட்ட

Koviloor Digital Library

[மலைகள்-பார்வதி; அரன்-சிவபிரான்; வடம்-சங்கிலி; சசி-இந்திராணி; வாசவன்-இந்திரன்; கலைமகள்-சரசுவதி; அயன்-பிரமன்; கந்தன்-முருகன்]

பெருமாள் ஊஞ்சல் ஆடுகிறார். கணவனும் மனைவியுமாக ஜோடியாக இருந்து கொண்டு.ஒவ்வொரு ஜோடியும் ஒவ்வொரு சங்கிலியாகப் பிடித்து ஆட்டக்கூடிய ஊஞ்சல் ஆட்டம், பார்ப்போர்களுக்கு ஒரு பெரிய விருந்துபோல் இருக்குமல்லவா?

ஊஞ்சல் ஆடும்போது பாட்டுப்பாட வேண்டுமல்லவா? பகவான் திருமுன்னர் பாடப்படும் பாடல்கள் இக்காலத்தில் சினிமாப்படங்களில் கேட்கப்பெறும் பாடல்களைப்போல் இருக்கலாமா? பாடும் பாடகர்கட்டும் உயர்ந்த அந்தஸ்து வேண்டாமா? ஆகவே, நம்மாழ்வார், பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசைப்பிரான், குலசேகரப் பெருமாள், பட்டர்பிரானாகிய பெரியாழ்வார், தொண்டரடிப் பொடியாழ்வார், பாண்பெருமாளாகிய திருப்பாணாழ்வார், திருமங்கையாழ்வார், மதுரகவியாழ்வார், நாதமுனிகள், பெரிய நம்பி ஆகியவர்கள் திருவாய் மலர்ந்தருளிய தெய்வப் பாடல்களை - திவ்யப் பிரபந்தங்களை-பாகவதசிரோமணிகள் பாடுகிறார்கள். ~~இவ்வேளையில்~~ தும்புருவும் நாரதரும் இன்னிசைப் பாடல்களைப் பாடுகிறார்கள். சில அடியார்கள் தமிழ் வேதங்களையும் சில அடியார்கள் வடமொழி வேதங்களையும் ஓதி நிற்கிறார்கள், இன்னும் ஒரு கூட்டம் இராமானுசரது வெற்றியினையும், கூரத்தாழ்வாரது சிறப்புக்களையும், முதலியாண்டானுடைய கருணைத் திறத்தையும் பாடிக்கொண்டிருக்கிறது. இன்னும், திருக்கலியனாலுக்கர், திருப்பணி செய் அன்பர் முதலிய பக்தகோடிகள் தொழுது வழிபாடு செய்து நிற்கிறார்கள். ஆகவே, ஆடும் பெருமாள் முன்னர் ஒரு பக்தர்கள் 'கூட்டம் இருந்துகொண்டு தெய்வப்பாடல்களை இசைத்து நிற்கிற காட்சியை நாம் காண்கிறோம்.

இத்தகைய ஒரு பெரிய சபையின் முன்னர் ஊஞ்சல் ஆடும்பெருமாள்,

"கான்பூத்த தனிச்செல்வன்
சிலையுண் மின்னற்
கருமுகில்போல் கணமணிவா
சிகைபி னுப்பண்
தேன்பூத்த தாமரையாள்
மார்பில் ஆடக்"

[கான்பூத்த தனி செல்வன் - இந்திரன்; கான்-கற்பகக் காடு; சிலை-வில்; கருமுகில்-கரிய மேகம்; கணம்-கூட்டம்; வாசிகை-மாலை; நாப்பண்-நடுவில்; தேன் பூத்த தாமரையாள்-இலக்குமி.]

காட்சியளிக்கிறார். இந்திரதனுசின் நடுவில் தோன்றும் காளமேகத்து மின்னற் கொடிபோல, நீலமேக சாமள வர்ணனை திருமாலின் மார்பிலே, நவரத்தினங்களாலியன்ற மாலையினிடையே, இலக்குமி தேவி பெருமாள் ஆடும்போது அசைந்து நிற்கும் காட்சி நம் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுகிறதல்லவா?

மேலே கூறிய கவிஞர் இலக்குமிக்கும் திருமாலுக்கும் ஒருவமை காட்டியதுடன் நின்றுவிட்டார். இன்னொரு கவிஞர் கூறுவதைக் காண்போம். இலக்குமியைத் தன் மார்பகத்தே கொண்டு ஊசல் ஆடும் திருமாலைக்கண்டதும் அவர் கண்முன் பல காட்சிகள் தோன்றுகின்றன. நறுமணங் கமழும் காயா மாமும் அதில் ஏறி உட்கார்ந்திருக்கும் மயிலும், பச்சிலை மரச் சோலையும் அதில் பொருந்திய அழகிய கிளியும், நீலநிறத்துடன் காட்சியளிக்கும் மலையும் அதில் ஓடி விளையாடும் இளைய பெண்மான் கன்றும் நீலக்கடலும் அதில் படர்ந்து விளங்கும் பவளக் கொடியும், காளமேகமும் அதில் தேன்றி விளங்கும் மின்னற்கொடியும், 'சான்றோர் கவி'போல் கிடக்கும் யமுனைநதியும் அதில் வாசஞ்செய்யும் அன்னப் பேடும் அவர் கண் முன் காட்சியளிக்கின்றன. அவை மட்டுமா? மூன்றுலகும் ஈன்றானைப் பெற்றெடுத்த கோசலையின் கண்மணியாகிய இராமனும், வட மதுரையில் தேவகி ஈன்றெடுத்து ஆயர்பாடியில் யசோதை தேவியால் வளர்க்கப்பெற்ற கண்ணனும், கவிஞருடைய மனக்கண்முன் தோன்றுகிறார்கள். இராமனும் கண்ணனும் அவரவர் தாய்மார் கண்ணினுள் பாவைகளாகத் தோன்றும் காட்சியையும் காண்கிறார் கவிஞர். இடத்தாலும் காலத்தாலும் சேய்மையில் ஞானக் கண்ணால் கண்ட காட்சிகளும் பெருமாள் இலக்குமியுடன் வீற்றிருந்து ஊஞ்சலாடும் காட்சியும் ஒன்று சேர்ந்து ஓர் அழகிய சொற்

Koviloor Digital Library

சித்திரமாக வடிவெடுக்கின்றன. இதோ அக் கவிஞரின் சொற்சித்திரம்.

மணங்கமழ் பூவையும்
மயிலும் தமாலக்காடும்
வண்கிளியும் நீலவெற்பும்
மடமான் கன்றும்

இணங்குகட லுந்துகிரும்
காரும் மின்னும்
யமுனையெனும் திருநதியும்
எகினப் பேடும்

கணங்குழைய கோசலை
தேவகி யசோதை
கண்மணியும் பாவை
யும்போல் கமலவீட்டில்

அணங்கரசி னுடன்குலவி
ஆடிர் ஊசல்!
அலங்கார மாயவரே
ஆடிர் ஊசல்!!

[பூவை-காயாமரம்; தமாலக்காடு-பச்சிலைக் காடு; வெற்பு-மலை; மடமான்-இளைய பெண்மான்; இணங்கு-விளங்கும்; துகிர் பவளக்கொடி; கார்-மேகம்; மின்-மின்னல்; எகினப்பேடு-அன்னப்பேடை; கணங்குழைய-பலவாய்த் திரண்ட குழையெனும் காதணிகளையுடைய; பாவை-கண்ணினுள் தோன்றும் உருவம்; கமலவீடு-தாமரை மலராகிய இருப்பிடம்; அணங்கு அரசி-தெய்வமகளிர்க்குத் தலைமையான இலக்குமி; குலவி-பொருந்தி]

காயாமரம், பச்சிலைக்காடு, நீலவெற்பு, கடல், மேகம், யமுனை நதி, கண்மணி இவற்றை நிறத்தால் பெருமாளுக்கும், மயில், கிளி, மான், பவளக்கொடி, மின்னல், அன்னப்பறவை, பாவை இவற்றை இயல்பாலும் தன்மையாலும் இலக்குமிக்கும் உவமையளித்த கவிஞரின் திறமையை உன்னுந்தோறும் உவகை பொங்குகிறதல்லவா? இதில் உள்ள இன்னொரு நயமும் கருதத்தக்கது. திருமால் மார்பில் இலக்குமி இருத்தல்போலவே, ஒவ்வொரு இடமும் அவ்விடத்திலிருக்கும் பொருளும் ஜோடி ஜோடியாகச் சேர்த்துக் காட்டிய விசேடமும் இவ்விடத்தில் எண்ணி மகிழ்தற்குரியது.

பெருமாள் ஊஞ்சலில் ஆடும்போது அவருடன் சேர்ந்து வேறு சிலவும் ஆடுகிறதாகக் கவிஞர் கூறுகிறார்:

ஆரணங்கள் ஒருநான்கும்
அன்பர் நெஞ்சும்
அணிசிலம்பும் அசைவிடா(து)
ஊசல் ஆட;
வாரணங்கு முலைமடவார்
கண்ணும் தோண்டும்
வண்டுளவும் புரளம்விடா(து)
ஊசல் ஆட;

[ஆரணங்கள்-வேதங்கள்; வார்-கச்சு; தனங்களின் மீது அணியப்பெறுவது; வண்டுளவு-வண் + துளவு-வளப்பமான திருத்துளாய் மாலை]

என்று காட்டுகிறார். பெருமாள் ஆடும்போது அவருடைய திருவடிகளில் விளங்குகின்ற நான்கு வேதங்களும் சேர்ந்து ஆடுகின்றனவாம். கடவுளையே தியானித்துக் கொண்டு தம்மனத்தை ஆண்டவன் திருவடிபால் செலுத்திக்கொண்டுள்ள எண்ணிறந்த அடியார்களுடைய மனங்களும் பெருமாளின் திருவடிகளுடன் சேர்ந்து ஆடுகின்றன. கச்சணிந்த மாதர்கள் எம்பெருமானுடைய தோள் அழகில் ஈடுபட்டு அவற்றையே கண்டுகொண்டு நிற்றலால் அவர்கள் கண்களும் அப்புயங்களுடன் சேர்ந்து ஆடுகின்றனவாம். திருத்துழாய் மலர் மாலையில் மொய்த்துக்கொண்டிருக்கும் வண்டுகளும் ஆடுகின்றன.

இவற்றைத் தவிர பெருமாள் அணிந்துள்ள எல்லா ஆபரணங்களும் ஆடுகின்றன என்பதைக் காட்டுந்திறன் படித்து இன்புறத்தக்கது. ஆண்டவனது திருவடிகளில் அணியப்பெற்ற கிண்கிணிகளும் பாத தண்டைகளும் ஆடுகின்றன. அவருடைய மார்பிலுள்ள கௌஸ்துபரத்தினம் ஆடுகிறது; இலக்குமி அசைந்தாடுகிறாள். இரத்தின ஆரமும் திருத்துழாய் மாலையும் தோள்களில் அசைந்தாடுகின்றன. ஒரு கையிலுள்ள சங்கும், மற்றொரு கையிலுள்ள சக்கரமும் அசைந்தாடுகின்றன. திருமுடியிலுள்ள கருங்குழல்முடியும் அதில் அணியப்பெற்றுள்ள மலர்க்கண்ணியில் மொய்க்கும் வண்டுகளும் ஆடுகின்றன. பூர்ண சந்திரனைப்போன்ற திருமுக மண்டலத்தில் சிறுத்து அரும்பும் வியர்வைத்துளிகளும் காதுகளில் அணிந்துள்ள காதணிகளும் ஆடுகின்றன. இடுப்பில் கட்டியுள்ள அரைஞாணும் திருப்பரியட்டமும் அசைந்தாடுகின்றன. இவற்றைக் கவிஞர்,

Koviloor Digital Library

அடித்தலத்திற் பரிபுரமும்
சிலம்பும் ஆட
அணிமார்பிற் கௌத்துவமும்
திருவும் ஆடத்

தொடித்தலத்தின் மணிவடமும்
துளவும் ஆடத்
துணைக்கரத்திற் சக்கரமும்
சங்கும் ஆட

முடித்தலத்திற் கருங்குழலும்
சுரும்பும் ஆட
முகமதியிற் குறுவேர்வும்
குழையும் ஆடக்

கடித்தலத்தில் அரைநாணும்
கலையும் ஆட

என்று காட்டுகிறார்.

[அடித்தலம் - திருவடி; பரிபுரம் - கிண்கிணி; சிலம்பு-பாத தண்டை; கௌத்துவம் கௌஸ்துவரத்தினம்; திரு - இலக்குமி; தொடித்தலம்-தோள்; மணிவடம்-இரத்தின ஆரம், துளவு-திருத்துழாய் மாலை; துணைக்கரம்-இரண்டு கரம்; .முடிதலம்-தலை; குழல்-உரோமம்; சுரும்பு-வண்டு; முகமதி-பூர்ணசந்திரன் போன்ற முகம்; குறுவேர்வு-சிறுத்து அரும்பும் வியர்வைத் துளிகள்; குழை-காதணி; கடிதலம்-இடுப்பு; கலை-திருப்பரியட்டம்]

இவ்வாறு ஆண்டவன் ஊஞ்சல் ஆடுவதைப் பலவிதமாகப் பாராட்டிப் பாடும் பக்தரின் தத்துவம்தான் என்ன என்று தெரிந்துகொள்ள எவரும் விரும்புவர். இதனை விளக்கும் தனிப்பாடல் ஒன்று "தனியன்" — இத்தத்துவத்தை — உட்பொருளை—நன்கு விளக்கி நிற்கிறது.

அண்டப்பந் தரிற்பற்றுக்
கால்க ளாக
அறிவுவிட்டங் கரணஞ்சங்
கிலிக ளாக


கொண்டபிறப் பேபலகை
வினைய சைப்போர்
கொடுநரக சுவர்க்கப்பூ
வெளிகள் தம்மில்

தண்டலிலேற் றம்மிறக்கந்
தங்க லாகத்
தடுமாறி யிடருழக்கும்
ஊசல் மாற

[அண்டம்-உலகம்; விட்டம்-உத்தாம்; கரணம் - இந்திரியங்கள்; பிறப்பு - பிறவி; வினை - இருவினைகள்; அசைப்போர்-ஆட்டுபவர்; பூ-பூமி; வெளிகள்-வெளியிடங்கள்; இறக்கம்-இறங்குதல்; தண்டல் இல் ஏற்றம்-தடையின்றி ஏறுதல்; தங்கல்-நிலை பெறுதல்; தடுமாறி-அலைந்து; இடர் உழக்கும்-துன்பம் அனுபவிக்கும்; மாற-நீங்கும்படி]

ஊசல் பிரபந்தம் பாடப்படுகிறது என்பதாக விளக்கப்படுகிறது இத் தத்துவம்.

ஒரு பெரிய பந்தல் போன்ற இவ்வுலகில் மக்கள் எடுக்கும் பிறவி ஓர் ஊஞ்சல்போன்றது. பிறவி ஊஞ்சல் பலகைக்கு ஒப்பிடப்பட்டிருக்கிறது. மக்களுடைய இந்திரியங்கள் ஊஞ்சற் பலகையிலுள்ள சங்கிலிகளைப் போன்றவை, மக்கள் பெற்றுள்ள அறிவு ஊஞ்சற் சங்கிலிகளை மாட்டுவதற்குரிய விட்டம் போன்றது. இந்த விட்டத்தை மக்கள் உலக விவகாரங்களில் கொண்டுள்ள பற்று-பாசம்-தூண்களாக நின்று தாங்குகிறது. பிறவி தோறும் மக்கள் சம்பாதிக்கும் நல்வினை, தீவினை ஆகிய இரண்டுவினைகளும் ஊஞ்சலை ஆட்டுபவராக இருந்து ஆட்டுவிக்கின்றன. இவ்வினைப்பயன்களுக்குத் தக்கவாறு மக்கள் கொடிய நரகமாகிய வெளியில் இறங்குகிறார்கள்; சிறிதும் தடையின்றி சுவர்க்கத்திற்கும் ஏறுகிறார்கள்; இப் பூவுலகில் தங்கவும் செய்கிறார்கள். இவ்வாறு ஆன்மாக்கள் பல பிறவிகளால் தடுமாறித் துன்பம் அனுபவிக்கும் இவ் வூசலாட்டம் நீங்கி சாயுச்சிய பதவியை அடைவதாகப் பக்தர்கள் பகவானை ஊசல்பாடியிருக்கிறார்கள் என்பது இத் தத்துவம். இவ்வாறுகொள்வதில் தவறுஇல்லையல்லவா? இத்தகைய நம்பிக்கையை ஒவ்வொருவரும் ஆன்ம வளர்ச்சிக்கு அவசியமாகக் கொள்ளவேண்டும் என்பதில் என்ன தடை?



Koviloor Digital Library

பண்பட்ட உள்ளம்

வித்வான் க. தேசிகன்

[மனத்தின் முடிவை மாற்ற முடியுமா? மகிழ்வூட்டும் அதை இகழத்தான் கூடுமா? அறிவுக்குப் பொருந்தாது என்று ஆர்ப்பரிக்க முடியுமா? ... இந்தச் சிக்கலைத் தீர்ப்பது இந்தக் கட்டுரை]

✳

மனங் கொண்டது மாளிகை — என்பது பழமொழி. சிறுகுடிசைக்குள் நுழைந்ததும் மனத்திற்குப் பிடித்தம் ஏற்படுமானல் அதனை மாளிகை என்பதில் தடையென்ன. ஒருவன் 'மனசுக்குப் பிடிக்கவில்லை' என்பானேல் அவனிடம் மன்ருடிப் பயனில்லை. இப்படிப்பட்ட மனம் இடைவிடாத சங்கல்பத்தினல் வைராக்கியப்பட்டு விட்டால் அதனை அந்நிலையினின்று மாற்றவோ எதிர்க்கவோ யாராலும் ஆகாது.

பக்தனெருவன் கல்லை நடுகிருன். நட்ட கல்லைத் தெய்வமாகப் பாவிக்கிருன், அதன் மீது தெய்வ உரு ஏற்றுகிருன்; அஃதாவது மனத்தால் அதனைத் தெய்வமாக சங்கல்பம் செய்கிருன். அவ்வளவுதான் அது, கோயிலாகிவிடுகிறது. அதற்கு 'நாலுபுஷ்பம்' சாத்தத் தொடங்கிவிடுகிருன். இனி, நட்டகல் நட்டகல்லாகக் காட்சியளிக்கப் போவதில்லை அவனுக்கு. ஒருமுறை தெய்வம் ஆக மாறியது மறுபடி பூர்வபக்ஷத்தையடைவதில்லை. மறுபடியும் அது கல்லாக அவன் மனவெளியில் மாறித்தென்படுமானல் அவன் அந்தத் துறையில் சுக்கல் சுக்கலாகச் சிதறிவிட்டான் என்பதுதான் பொருள்.

பக்தி மார்க்கத்தில் மாத்திரமன்று உலக நடப்புக்கு அமைந்த செயல்கள் ஒவ்வொன்றிலும் இத்தகைய சங்கல்பம் தொடர்ந்து உயிரூட்டிக் கொண்டேயுள்ளது. சங்கல்பம் அளித்த நன்கொடையே வாழ்வு ஆகும். இக்கருத்துக்கு ஊற்றுக் கேணியான தொடராக 'எண்ணிய எண்ணியாங்கு எய்துப'-என்று வள்ளுவப் பெருந்தகை அருளியுள்ள தெடர் நோக்குக்கு உரியது. உலக வாழ்வில் வெறியை நீக்கி நெறியை வளர்ப்பதும் அதுவே மனைவி, அண்ணி, தங்கை, தமக்கை, தாய்-என்ற பாகுபாடுகளை உண்டாக்கி வளர்த்து வரன்முறையானது தடம் புரளாதபடி காத்து வருகிறது. இக்காவல் நெறியே 'தெய்வநெறி' என்றும் 'நாகரிகத்தின் இமயம்' என்றும் போற்றப்பட்டு மனிதத்தன்மை என்னும் பண்பாட்டை இயக்கி வருகிறது.

மனிதப் பண்பாடு-மானிடசாதி முழுமைக்கும் பொதுவாயினும் இதன் சிகரத்தை எட்டிப் பிடித்தவர் ஒரு சிலரேயாக விளங்குகிருர்கள். மிகமிகச் சின்ன விஷயம் என்று நம்மில் பலர் நினைக்கும் விஷயமே இந்தப் பண்பாட்டின் உச்சியில்-ஏறமுடியாத உச்சியில் ஏற்றிவிடும் பொருளாகவும் விளங்கலாம். ஞானி, யோகி, துறவி, தியாகி-ஆகியவர்கள் ஏறிக்கொண்டிருக்கும் போதே, குடும்பநினைவால் உழலும் எளியவன் ஒருவன் இவர்கட்குப் பின்னல் தொடங்கி இவர்கட்கு முன்னல் அந்த உச்சியில் ஏறிவிடவுங்கூடும். இது இந்த நாட்டு உண்மையாகும். இத்தகைய உண்மைகளின் கொலுமண்டபமே சங்கப்பாடல்கள் ஆகும். ஒன்று காண்போம்.

சின்னஞ்சிறு வயதுடைய பெண் ஒருத்தி, தன்தோழியோடு கடற்கரைத் தோட்டத்து மனற்பரப்பில் விளையாடிக் கொண்டிருக்கிருள் இவர்கள் விளையாடலுக்கு உரிய பொருள் புன்னைக்கொட்டையாகும். ஒருத்தி, மற்றவள் அறியாமல் புதைத்தும், மற்றவள் அதனை ஓடியாடிக் கண்டுபிடித்து எடுப்பதுந்தான் அந்த விளையாட்டின் முறைமையாகும். இத்தகைய விளையாட்டின்படி ஒருத்தி புன்னைக் கொட்டையை மணலுள் புதைத்துவிட்டாள். நெடுநேரம் முயன்று பார்த்தும் மற்றவளால் அதனைத்தேடி எடுக்க முடியவில்லை. மணலுள் புதைத்த சிறுமியாவது அதனைக் கண்டுபிடித்து எடுக்க வேண்டுமே! அவளுக்கும் இடம் மறந்து போயிற்று. "இனிதேடிப் பயனில்லை; புன்னைக் கொட்டையைக் கைவிட்டு விடுவோம்"-என்று வீட்டுக்குப் போய்விட்டார்கள்.

Koviloor Digital Library

நாட்கள் பல கடந்தன. சிறுமி தன் தோழியோடு முன்விளையாடிய பக்கமாகப் போய்க்கொண்டிருந்தாள். அங்கு, புதிதாக ஒரு செடி கிளம்பியிருந்தது. அது இவர்கள் பார்வையில்பட்டுவிட்டது. ஓடிப்போய்ப் பார்க்க அது புன்னைச் செடியாகவும் இருந்து. உடனே சிறுமிக்குச் சரேலென ஞாபகம் வந்துவிட்டது. "மண்ணில் புதைத்து மறந்துபோன புன்னைக்கொட்டையல்லவா! இது!!" என்று மகிழ்ச்சி பொங்கக்கூவினாள். அச்செடியைக் கண்ட நாள்முதல் தானும் தோழியுமாகப் பாதுகாத்து வளர்க்கத் தொடங்கிவிட்டாள். அச்செடியைக் காணக்காண அதன்பால் நேயம் பெருக்கெடுத்தது அச்சிறுமிக்கு. இப்படி நாள்தோறும் வளர்ந்து வந்த நேயத்தை அறிந்துகொண்ட அவள்தாய் அவ்வுணர்வு தன்மகள் உள்ளத்தே நன்கு ஊன்றிக் கொள்ளவேண்டும் என்றும் தீர்க்கபுத்தியோடு - தோன்றிய நல்லுணர்வைத் தொலையாப்பேருணர்வாக மாற்றிவிடவேண்டும் என்னும்எண்ணத்தால் தன் மகளைப் பார்த்துச் சொல்கிறாள்:-

"அந்தப் புன்னைச் செடி உங்களோடு உடன் பிறந்த தங்கை ஆகும். அது பேச அறியாது. இடம் விட்டுப் பெயர்ந்து தவழும் ஆற்றல் அதற்கு இல்லை. உங்களைக் காட்டிலும் ஒருபடி மேலாக அதை நடத்துங்கள்; சிறப்புக்கொடுங்கள்" என்றெல்லாம் ஊக்கிவிட்டாள். இப்படியாக, தாய் ஊட்டிய முறையுணர்ச்சியும் ஏற்கனவே தாங்கள் கொண்டிருந்த நேய உணர்வும் கலந்து அப்புன்னை மரத்தைக் காணும் போதெல்லாம் உடன் பிறந்தாளாகவே காணத் தொடங்கினாள். இக்காட்சியில் மரம் மறைந்துவிடும்; மங்கையுணர்வே பொங்கி எழும் இதேபோக்கில் உருவாகிப் பண்பட்டுவிட்டது அவள் உள்ளம்.

காலப்போக்கில் சிறுமி பெரிய பெண் ஆயினள். கட்டழகன் ஒருவன்பால் காதல் கொண்டனள். ஊரும் உறவும் உணராதபடி அவனைச் சந்தித்து வரல் ஆயினள். இம்மரபு தப்பாமல் தன் காதலன் வரவை ஒருநாள் எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள் இன்ப வெறியோடு. குறித்த நேரம் தப்பாமல் அவனும் வந்தடைந்தான். பின்னர் இருவருமாக மணல் பரப்பில் மெய்ய நடந்து சென்று மரத்தடியில் ஒதுங்கினின்றனர். காதல் கனிவால் தேன் சொட்டப் பேசலாயினன் தலைவன். இங்கிலையில் என்றுமில்லா நாணம் தலைவியைக் கௌவிக்கொண்டது. பதில் சொற்கள் வாயினின்று வரவில்லை. இன்ப வெறியினின்று சடக்கெனத் தெளிவுற்றது அவள் உள்ளம். இப்பொழுது வெறியடங்கி நெறியறிந்து பேசலானாள்.

"தலைவ! உம்மொடு சிரித்து விளையாட நாணப்படுகிறேன். இதோ! இங்கு நிற்பது என் தங்கை. அவள் அண்மையில் இருக்க நான் எவ்விதம் நாணமின்றி நடந்துகொள்ளமுடியும்"

என்று புன்னை மரத்தைச் சுட்டிக்காட்டி அதன் காரணகாரியத்தைக் கூறிய பின் தலைவனை வேறு நிழலுக்கு அழைத்துச் சென்றாள்.

பக்கத்தில் நிற்பது மரமே - அதனாலென்ன? தலைவிக்கோ அது மங்கை மாத்திரமன்று உயிர்த் தங்கையும் ஆகும். மரத்தை மங்கையாகக் கருதுவது மடமையாகப்படலாம் நமக்கு. ஆனால் தலைவிக்கு அது மங்கைத் தோற்றமல்லவா' இந்த முறையை ஒரு முறை கற்பிக்கப்பட்டவுடனேயே அதற்கு உள்ளடங்கி நாணப்படும் பண்பை நாகரிகத்தை - நெறிப்பட்ட நினைவை ஒரு சிறிதாவது கற்பனை செய்து பார்த்தால்தான் அதிலடங்கிய பண்பாட்டை நாம் உணர முடியும். மேற்போக்காகப் பார்த்தால் அற்ப விஷயந்தான். ஆயினும் அதனுள் அடங்கிய ஆற்றலோ தெய்வத்தையும் ஏவல் சொள்ளக்கூடியதாகும். இவளைத் தீண்டும் தீமையெல்லாம் தீய்ந்து சாம்பலாகிவிடும். இத்தகைய தபோபலம் எங்கிருந்து வந்தது. எல்லாம் 'தடம்புரளாத வரம்பில்' அடங்கும் அடக்கத்தினின்றே வந்ததாகும். புன்னையைத்தங்கையாகக் கருதி அதனை நிரூபித்துக் காட்டிய அந்தப் பண்பாட்டிலிருந்து வெளிப்பட்ட சக்திவெள்ளமே அது. இது அற்பவிஷயமாகுமா? அன்னை கஸ்தூரிபாய் அவர்கள் தமக்கு நியாயம் என்று மனத்திற்படும் திட்டங்கட்குத்தான் அடங்குவார்கள். காந்தியடிகளின்வற்புறுத்தல்கட்கெல்லாம் இணங்கிப் போவதில்லை. இந்த அடங்காமையியல்பினின்றே உலகத்தை ஆட்டிப்படைத்த சத்தியாக்கிரகத் தத்துவத்தை மகாத்மா தரிசித்தார்கள்.


Koviloor Digital Library

மேலோட்டாகப் பார்க்கும்பொழுது அற்பமாகக் காணப்பட்டாலும் அப்படி அற்பமாகத் தோற்றும் பொருளில்தான் அளவற்ற சக்தி அடங்கலும் செறிந்து கிடக்கக் காண்கிறோம். இந்தத் தத்துவமே தலைவி சுட்டிக்காட்டிய புன்னை மரத்தின் மூலம் பேசப்படுகிறது. இதோ அந்த மந்திரப் பாடல்.

விளையாடு ஆயமொடு
வெண்மணல் அழுத்தி
மறந்தனம் துறந்த
காழ்முளை, அகைய
நெய்பெய் தீம்பால் பெய்து
இனிது வளர்ப்ப
" நும்மினும் சிறந்தது;
நுவ்வை ஆகும்" என்று
அன்னை கூறினள்
புன்னையது சிறப்பே.
அம்ம! நாணுதும்
நும்மொடு நகையே.
விருந்தின் பாணர்
விளர் இசை கடுப்ப
வலம்புரி வான்கோடு
நரலும்; இலங்குநீர்த்
துறைகெழு கொண்க!
நீ நல்கின்,
நிறைபடு நீழல்
பிறவுமார் உளவே.

[ஆயம்-தோழியினம்; காழ்முளை-(புன்னையின்) கொட்டை; அகைய-முளைக்க; நுவ்வை - உங்கள் தங்கை; விருந்தின் பாணர்-புதிதாகக் கற்கும் பாடகர்; விளரிசை - (கமக வேலைப்பாடற்ற) மெல்லிய ராகம்; கடுப்ப-போல; வலம்புரி வான்கோடு நரலும்-வலம்புரியாகிய வெண்சங்கு ஒலிக்கும்; மெல்லிசை இன்பத்தைத் தூண்டும். அதில் சங்கீத நுட்பவேலைகள் காட்டப்படாமல் இருந்தால்தான் இன்பக் காலத்துக்குச் சிறப்பு. இத்தகைய ஓசை சங்குகளின் வாய்வழியே காற்றுப் புகுந்து வெளியேறும்போது தொடர்ந்து உண்டாகி இன்பத்துறைக்குப் பின்னணி இசையாக அமைகிறது இக்குறிப்பெல்லாம் - 'விளரிசை'- என்னும் தொடரிலிருந்து புலனாகின்றது. நல்கின்-(நீ) மனம் வைத்தால்; நிறைபடு நீழல்-பிறர் அறியாதபடி மறைக்கின்ற அளவு பொருந்தி நிழல்தரும் மரங்கள்; பிறவும் (மார்) உள - வேறுபல உள்ளன.]

இப்பாடலால் தமிழ் நாட்டில் வாழ்ந்த பெண்டிரின் சீலமும் நாகரிகமும் எத்துணை மேலோங்கியிருந்தன என்பது புலனாகின்றது. இம் மனப்பண்பு ஏறக்குறைய ஈராயிரம் ஆண்டுகட்கும் முந்தியது-என்பதை நினைத்துப்பார்க்கும் நாம், இன்று நாம் எங்கிருக்கிறோம் என்பதையும் நினைத்துப் பார்ப்போமாக!



★
பிரான்மலையில் உள்ள சிவன் கோவிலில் 23-5-54 தேதி குடமுழுக்கு விழா நிகழ்ந்தது. அதோ படத்தில் பாருங்கள் குடமுழுக்கு நிகழ்வதை
★

Koviloor Digital Library

இன்சொற் செல்வர் இலஞ்சி வள்ளல்

......எஸ். என். அம்பலவாண பிள்ளை......

[நல்லனவே நினைத்து நல்லனவே செய்யும் நல்லவர். நற்றமிழ் பரப்ப நற்றொண்டு செய்பவர். படித்துப் பட்டம்பெற்றதுடன் அமையாது பண்பொடு தொண்டுசெய்யும் பண்பாளர் ஐ. ஏ. சிதம்பரம் பிள்ளையின் வாழ்வைச் சித்தரிப்பது இது]

முற்காலத்தில் திகழ்ந்த வள்ளலாகிய குமணன், நளன், சிசுபாலன், கன்னன், பாரி முதலியோரைப் பண்டைத் தமிழ் நூல்கள் நமக்கு அறிமுகப்படுத்துகின்றன. தற்காலவள்ளல்களாகிய இரக்கபாலர் (Roctfeler) கார்நாகர் (Carnagie) நப்பாலர் (Nuffielr) ராஜா அண்ணாமலை, டாக்டர் அழகப்பா பாரிஸ்டர் எதிராஜ் முதலிய பெருமக்களை நாம் அறிவோம். கல்வி, விஞ்ஞானம் சமுதாய நன்மைகளுக்காகப் பொருளை அள்ளி வாரிக்கொடுத்துப் பெரு நன்மைகள் புரிந்த பெரியார்கள் இவர்கள்.

பொன்னிலஞ்சி, தென்னிலஞ்சி யென்று புலவர் புகழ்வதும் நீர்நிலம் மலைவளங்களை யொப்ப கல்வி, செல்வம் நாகரிகவளங்களில் சிறந்ததும், திருக்குமரன் திருத்தலமுமாகிய இலஞ்சி யென்னுஞ் சிறிய ஊரில் பரம்பரைப் பெரிய வேலாளர் குலத்தில் தோன்றிய நமது செல்வரும், வள்ளலுமாகிய திரு. I. A. சிதம்பரம் பிள்ளையவர்கள் சமய சமுதாய உலகங்களுக்கு ஓர் திலகமாயும், எடுத்துக்காட்டாகவும் விளங்குகிறார்கள். ஒழுக்கம், அடக்கம், பொறை பரந்தநோக்கம், தயாளமனம், ஈகை இத்தகைய அரிய குணங்கள் இவர்களை அலங்கரிக்கின்றன. பெருஞ் செல்வமும் ஆங்கிலத்தில் எம். ஏ. (M. A.) பட்டமும் பெற்ற போதிலும் செல்வச் செருக்கும் கல்வித் தருக்கமும் சற்றுமின்றி யாவருடனும் இனிமையாய்ப் பழகும் பண்புடையவர்கள். தன்னிடம் வந்தவர்களை முகமர்ச்சியுடன் வரவேற்று இன்சொற்கூறி உபசரிப்பது இவர்கள் வழக்கம்.

இன்சொற்கள் ஒருவனிடம் இயற்கையாய் அமைவது அரிது. ஆயின் இவர்களிடம் இச்செல்வம் கருவிலே தோன்றி பொருட்செல்வத்துடன் கூடிப் பெருமையளிக்கின்றது. உயர்வு, தாழ்வு, வறுமை செல்வம் சாதி மதம் பாராது யார்மாட்டும் எவ்விடத்தும் எந்நிலையிலும் இன்புறும் இன்சொல்லென்றால் இவர்கள் அஃதின் உருண்டதிரண்ட ஓர் உருவமென்பதற்கையமில்லை. யாவர்க்குமாம் பிறர்க்கு ஓர் இன்றுரை என்பது இவர்கள் திருமந்திரம்.

திருஞானசம்பந்த சுவாமிகள் வேலாள மக்களை வள்ளன்மையால்மிக்கிருக்குந் தாளாளர் என்று சிறப்பித்திருக்கின்றார். இச்சிறப்புக்குரிய நமது செல்வர் செய்து வரும் சமய சமுதாயப்பணிகள் பலப்பல. தென்காசி உயர்நிலைப் பள்ளிக்குத் தகுதியாய் ஓர் கட்டடம் அமைக்கப் போதிய அளவு பண உதவி அரசாங்கத்தார் அளிக்க முன்வராததால் கட்டடத் திட்டம் வீழும் நிலையிலிருக்க, நீர்மூழ்கியவனுக்கு ஓர் கைஉதவி உயிர் கொடுத்தது போன்று ரூ 25000 நன்கொடையாய் அளித்தார்கள். பள்ளிபிழைத்தது. கட்டடம் அடிகோலிற்று. குடிதண்ணீர் வசதிக்காக ரூ. 1500 செலவில் ஓர் குழாய்க்கிணறும் அமைக்கப்பட்டிருக்கிறது. இலஞ்சியில் பெண்களுக்கென ஓர் ஆரம்பப்பாடசாலை வைத்து இலவசக் கல்வி வழங்கப்படுகிறது. எத்தனை மாணவர்கள் அவ்வப்போது சம்பள உதவிகளும் மற்ற உதவிகளும் பெற்று படிப்பைக்கெடுக்கும் மனக்கவலை ஒழிந்து நிம்மதியாய்க்கற்று வருகின்றனர்! எத்தனை கழகங்கள் சங்கங்கள் மகாநாடுகள் தனிமனிதர்கள் இவர்கள் ஆதரவை நாடிப்பயனடைந்திருக்கின்றனர்! இன்மையாற் சென்றிறந்தார்க்கு இல்லை யென்னுது ஈந்துவக்கும் ஈரமுடைய செல்வர் நமது பிள்ளையவர்கள்.

மாணவர் உடல் நலம் பேணி இலஞ்சி, தென்காசி, கடையநல்லூர் உயர்நிலைப் பள்ளிகளில் விளையாட்டுப் போட்டியில் முதன்மையாய் வருபவர்களுக்குக் கேடயங்களும், கோப்பைகளும் வழங்கி அவர்களை ஊக்கப்படுத்தி யிருக்கின்றனர். இக் கேடயங்களும் கோப்பைகளும் ஒவ்வொரு வருடமும் போட்டியில் முதன்மை பெற்றவர்களிடையே சுற்றிக்கொண்டே வரும்.

Koviloor Digital Library

செல்விருந்தோம்பி வருவிருந்து பார்க்கும் பண்பும் நமது செல்வரிடம் ஓர் அரிய குணம். கற்றோர் கழிபசி தீர்க்கு முறையாள் நாடோறும் சில ஏழை மக்களுக்கு உணவளித்து அவர்களை மகிழ்விக்கின்றனர்.

தன் முன்னோர்க்குத் தன் நன்றி காட்டும் பான்மையில் தென்காசி உயர்நிலைப்பள்ளியின் தெற்கு எல்லையில் தன் அருமை மனைவியாரின் தந்தையும், தன் மாமனாரும், ஜில்லா பிரமுகருமான I. C. ஈஸ்வரன் பிள்ளையவர்கள் பெயரிட்டு ஓர் நினைவு வளைவு ரூ. 7000 செலவிற் கட்டியிருக்கிறார்கள். இவ் வளைவு கம்பீரமாக நின்று பள்ளியை அழகுபடுத்துகின்றது.

உழைப்பாளிகளும் ஏனையோருமாக வேலைகளில் சற்றே களைப்பாறி உல்லாசமாய்ப் பொழுதுபோக்க தென்காசி வ. உ. சி. பூங்காவில் ஓர் வானொலி நிலையமும், திருக்குற்றாலத்தில் சாரல்மழையனுபவிக்க மாகாணத்தின் பல பாகங்களிலிருந்தும் வருபவர்கள் உல்லாசமாயிருக்கவும் பந்து விளையாடவும் அங்கே பூங்காவும் பந்தடி மேடையும் அமைத்துக் கொடுத்திருக்கிறார்கள்.

சமயத்துறையில் இவர்கள் பற்றுதலும் பணியும் மிக்க பாராட்டுக்குரியன. ஆங்கிலப்பட்டம் எய்தியும் தன் பழமை நாகரிகத்தை மறவாது நித்திய கருமங்களை நியமப்படி முடித்த பின்பே மற்ற காரியங்களைக் கவனிப்பது இவர்கள் அன்றாடக வாழ்க்கைத் திட்டம். அறிஞர்களுடனும், தவத்திரு குன்றக்குடி அடிகளார் போன்ற உத்தம சமயத் தலைவர்களிடமும் நெருங்கிய தொடர்புவைத்து சமயதத்துவங்களை அறிந்து அவ்வறிவின் பயனை மக்களுக்குப் பல மேடைகளினின்றும் இதர வழிகளிலும் புகட்டி வருகின்றார்கள். நாத்திகம் பரவிய இந்நாளில் மெய்வருத்தம் பாராது கண் துஞ்சாது, பசி நோக்காது, கருமமே கண்ணாய்த் தன் செயலில் ஊர் ஊராய்ச் சென்று மக்களைத் தட்டி எழுப்பி அருள் நெறித் திருக்கூட்டங்களைத் தோற்றுவித்துத் தானும் ஜில்லா அருள்நெறித் திருக்கூட்டத் தலைவராய் அமர்ந்து அரிய பணிகள் ஆற்றி வருவது ஆங்கிலக் கல்வி நிரம்பிய இவர்களுக்கு ஓர் தனிச் சிறப்பு. இவர்களுடைய பணிகளையும் பற்றுதலையும் மெச்சி குன்றக்குடி அடிகளார் இவர்களுக்குப்பொன்னாடை போர்த்திப் பொதுமக்கள் மதிப்பை நன்கு வெளியிட்டார்கள்.

தன் அறவினைகளால் நட்புலகம் விரியுமாயினும் யாவரையும் ஒப்ப நினைத்து நடுவுநிலைமை கோடாது நிற்றல் இவர்கள் பெருமையை அதிகப்படுத்துகின்றது. இவ்வாறு தன்னலமற்றுப் பிறர் நலம் பேணி இராப்பகல் கருதாது உடல்நலம் பேணாது மின்னல் வேகத்தில் ஓடிஓடிப் பொதுப் பணி செய்துவரும் ஆற்றலின் அருமையும் ஆர்வமும் வியக்கத் தகுந்தன. தன்னறிவு இச்சீரிய வழியில் பயன்படுகின்றது. திருவும் இப்பணிக்குத் துணையாய் நிற்கின்றது. ஆகையால் சேரலைவாய்-சிராப்பள்ளி குற்றாலம்-குன்றக்குடி எங்கும் இவர்கள் வியாபகமாயிருக்கின்றார்கள்.

இத்தனை பெருமைக்கும் மூலகாரணமாகிய இவர் மனைவியார் திருமதி அறம் வளர்த்த அம்மாளை இங்கு தனியே குறிப்பிடுவது இன்றியமையாதது. இல்லறப்பண்புகள் நிறைந்து இல்வாழ்க்கை மாண்பறிந்து நல்லறம் வளர்க்கும் நாரிமணி தன்னருமைக் கணவனுக்குக் கருத்துக்கோடாக மனமுவந்து ஒத்துழைக்கும் கிரக இலக்குமி. சமய சமுதாய நலனை விரும்பும் சாந்த குணவதி. வாழ்க.

நமது அருள்நெறிச் செல்வருக்கு வயது 45. சமய சமூக முன்னேற்றங்களை இச்சீரியர் வாயிலாய் மக்கள் எதிர்பார்ப்பது இயல்பு. குன்றா ஆயுளும் தளரா ஊக்கமும் இவர்களுக்கு அருள இறைவனை வாழ்த்துவோமாக.

அவயத்து முந்தியிருப்பச் செய்த இவர்கள் தந்தையாரும், தன்னை ஈன்ற பொழுதை நினைந்து பெரிதுவக்கும் தாயாரும், தங்கள் நன்மகனாகிய இன்சொற் செல்வர் இலஞ்சிவள்ளல் ஐ. ஏ. சிதம்பரம் பிள்ளையவர்களின் எதிர்காலப் பெருமைகளைக் கண்டு மகிழ நீடுவாழ்க.

வாழ்க ! இலஞ்சி வள்ளல் !!

Koviloor Digital Library

உழவாரம்

டாக்டர் மு. வரதராசன், M.O.L., Ph.D.

o

வாழியநீ உழவாரம்! வாழியநின்
புகழெனவே வழுத்து கின்றேன்
ஆழியினும் பேரன்பு பூண்டதிரு
நாவரசர் கையில் வாழ்ந்தோய்!
பாழியலாய்ப் பலநாளும் பொழுதுகழி
நாகரிக மாந்தர் இந்நாள்
ஊழிமலி புகழோய்நின் உண்மையுயர்
வதனைத்தான் உணரார் அந்தோ!

நெஞ்சுருக்கும் அன்புதனை நேர்பெறவே
வளர்த்திடுவாய்; நித்த நித்தம்
நஞ்செனவே வளர்செருக்கை நலிவித்தே
நன்றுணர்த்திப் பணிவை ஈவாய்;
எஞ்சாத தொண்டொன்றே எந்நாளும்
மனத்தழுக்கை அறுப்ப தென்னும்
செஞ்சொல்லை மெய்ப்படுத்திச் சேர்ந்
[தோரைப்
பண்படுத்திச் செம்மை செய்வாய்.

இக்காலத் தோங்குபல அருச்சனைகள்
அபிடேக ஆரவாரம்
தக்கார்போல் புகழ்வளர்க்கத் தனிச்சிலரின்
விளம்பரமாய்த் தாகே ஆகும்;
பொய்க்காதல் உடையார்கள் தமக்காக
எல்லாமென் றுணரும் பான்மை;
எக்காலம் இவருள்ளம் திருந்தியினி
உழவாரம் உயரும் காலம்?

திருக்கோயில் மதிற்சுவரில் செழித்துவளர்
செடிகள்பல காணும் போதே
நெருக்கியவை வேருடனே களையும்வகைத்
தொண்டாற்ற நேரா ராயின்
உருக்கோலம் உடையவராய் உடல்உடைமை
இல்லத்தை உவப்பாய்ப் போற்றல்
தருக்கேயோ? இறைவனையும் புறக்கணிக்கும்
தன்முனைப்போ? யாது சொல்லோ?

கையினால் தொண்டு செய்தல்
கருத்தினைத் திருத்தும் என்றே
மெய்யினால் உணரும் காலம்
மேவும்நாள் என்றோ அன்றே
பொய்யினால் வழிபா டாற்றும்
புன்மையும் தவிர்ந்து நன்கு
உய்யுநாள்; உழவா ரத்தின்
உயர்வினை உணரும் நாளாம்.

சாலையில் செடிகள் வைத்தும்
சார்வுறப் போற்றல் இல்லை;
மேலைநாள் வைத்த சோலை
மேன்மைசேர் காட்டை யெல்லாம்
பாலையாய்ப் போக வெட்டிப்
பணமதாய்ச் சேர்த்தல் செய்வர்;
ஆலயம் மீதில் காணும்
அழிவுகள் அகற்றார் ஏனோ?

ஊர்தோறும் கோயில் போற்றும்
உண்மையை மறந்தார் அந்தோ!
பேர்புகழ் வேண்டி எங்கோ
பெரியதோர் நகரிற் சென்றே
பாருளோர் மெச்சப் பூசை
பற்பல செய்கின் றார்கள்!
சீரிலா துள்ளூர்க் கோயில்
சிறுமையால் வாட விட்டே.

வாவல்கள் களித்து வாழ
வழியெலாம் தூறு கொள்ள
காவலில் மனையே போலக்
கண்டவர் சோம்பித் தூங்க
ஆவலாய் உள்ளே செல்வோர்
அஞ்சியே புற்றைக் காண
வீவன பலகோ யில்கள்
விதிகொலோ இவ்வா றுதல்?

இவ்வகைச் சிற்றூர்க் கோயில்
எத்தனை வாடல் அந்தோ!
ஒவ்வுமா றவற்றைக் காத்தே
ஓங்கிடத் தொண்டு செய்யார்;
எவ்வகை அன்பு தானோ?
எடுக்கின்றார் புதிய கோயில்!
கவ்வையாய்க் காசை ஈட்டிக்
கண்டவர் செய்கின் றார்கள்!

கல்லிலே பெயர்பொ றிக்கக்
கணக்கின்றிச் செலவு செய்து
சொல்லிலே மயக்கி நின்று
சொன்னவர் செய்கின் றார்கள்!

நல்லதாம் உள்ளத் தன்பு
    நாடுவா ராயின் நன்றாம்!
வல்லகைத் தொண்டு போற்றி
    வாய்மையை உணர்வார் கொல்லோ?

நூறுநாள் செய்யும் பூசை
    நுவலுநல் லபிடே கங்கள்
கூறுமிவ் வனைத்தின் நன்றாம்
    கோயிலின் தூய்மை காத்தல்;
வீறுடை மதிலின் மீதே
    வேர்கொளும் செடியைக் கொல்லல்
பேறென நம்பித் தொண்டு
    போற்றுவார் பெருகல் என்றோ?

காந்தியும் பிறந்தார் இந்நாள்;
    கருத்துடன் பலர்பின் சென்றார்;
தந்தம இல்லம் வாயில்
    தகவுறப் போற்றி வாழ்ந்து
சேர்ந்தவனர் கோயில் காலை
    செழிக்கவே அறங்கள் செய்யார்!
ஏந்தவே புகழைத் தேடி
    ஏய்க்கின்ற போக்கே போலும்!

உள்ளத்தை மதியார், கையில்
    உள்ளதை மதிப்பார் பல்லோர்
கள்ளத்தைப் போக மாற்றிக்
    கருத்துடன் தொண்டு செய்யின்
தள்ளவோர் குறையும் இன்றித்
    தழைக்குமே உலகம் எல்லாம்;
வள்ளலார் உள்ளம் போல
    வாழலாம் எந்த நாளும்!

அருட்பணிபுரியும் அன்பர்கள் காணீர்!



22–5–54ல் பிரான்மலையில் நடைபெற்ற இராமநாதபுர மாவட்ட அருள்நெறித் திருக்கூட்ட மாநாட்டில் தொண்டர்களை வரவேற்கிறார்கள்-பொதுமக்கள்.

Koviloor Digital Library



குடிசையும் ★ ★ மனிதனும்

மலையுச்சியில் குடிசை கட்டிக்கொண்டு ஒரு மனிதன் வாழ எண்ணினான். அதற்குப் பெருஞ் செலவும் பிரயாசையும் பிடித்தன,

குடிசையைக் கட்டி முடிந்தது உள்ளே நுழைந்தானே இல்லையோ, பிரமாதமான புயல் அடிக்கத் தொடங்கிவிட்டது. குடிசை முன்னும் பின்னும் கடகடவென்று ஆடிற்று. 'இதென்னடா இது! குடிசை விழுந்து விடுமோ?' என்று மனிதன் பயந்தான்.

வாயு பகவானை ஸ்மரித்து, "பகவானே, என் குடிசை நாசமாகாமல் காப்பாற்ற வேண்டும்" என்று மிக்க விநயமாகப் பிரார்த்தித்தான்; திரும்பத் திரும்பப் பிரார்த்தித்தான்.

குடிசையின் ஆட்டம் நிற்கவில்லை.

'வாயுவின் புத்திரன் ஹநுமான்' என்ற விஷயம் அவனுக்கு ஞாபகம் வந்தது "ஸ்வாமி, இது ஹநுமந்த விலாசம்; தங்கள் திருக் குமாரனை ஹநுமானுடையது இந்தக் குடிசை" என்று மனிதன் சிறிது தந்திரமாய் வேண்டினான்.

காற்று அப்படியும் கேட்கவில்லை.

"அடடா! இது ஸ்ரீ ராமபிரானின் பஜனை மடம், ஸ்வாமி. தங்கள் திருக் குமாரனின் பிரபு இல்லையா ராமன்?" என்று மறுபடியும் உருட்டி மிரட்டிப்பார்த்தான் மனிதன்.

அதுவும் பலிக்கவில்லை.

"இந்தக் குடிசை நாசமாய்ப் போகட்டும்! இதைக் காப்பாற்றுவது என் கையில் இல்லை. என் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள இப்போது சத்தியமாக முடியும்" என்று சொல்லிக்கொண்டே, குடிசையைவிட்டு மனிதன் வெகு துரிதமாய் வெளியே ஓட்டம் எடுத்தான்.

— ராமகிருஷ்ண பரமஹம்ஸர்.

Koviloor Digital Library

அருள்நெறிக் கும்மி

(-: அன்பு. கருணையானந்தா :-)

எல்லோரும் சேருங்கள் இனிய அருள்நெறி
இதயநலம் பெறுவோம்
எல்லோரும் கூறுங்கள் எவரும் நலமுறும்
இணையிலா ஓமொலியே

அருள்வளர் குன்றையன் ஆறுமுகத் தையன்
அன்பு மலர்ந்ததென்ன
இருளெலாம் நீங்கிட எழுந்தநல் லோர்சுடர்
எங்கும் ஒளிதருமே

சில்லாண்டில் மக்கட்குத் தெய்வவுளம் வரச்
செய்த தருள்நெறியே
பல்லாண்டு பாடுவோம் பக்தியாய்க் கூடுவோம்
பண்புளம் ஓங்கிடவே

தேவர்கள் கோட்டையாய் தேவகோட்டைப் பதி
திகழ்ந்திடக் காணுகின்றோம்
மூவர்கள் செய்திட்ட முதன்மைப் பணியெலாம்
முன்னின்று நாம்புரிவோம்

ஓம்எனும் பிரணவ உண்மையறி வின்பம்
உயிர்களுக்குரிய இன்பம்
ஆம்என அழைத்திடும் அருள்நெறித் திருக்கூட்ட
அருட்கொடி காணவாரீர்

பொருளெலாம் அருள்நெறிப் புண்ணியம் பெரியோரே
பொறுமையாய் உதவியுடன்
மருள்நிறை மறைவாம் மயக்கம் வருமுன்னே
மனிதராய் வாழ்ந்திடுவோம்

இயற்கைகள் மாறிலென் இன்பங்கள் நீங்கிலென்
இதயத்தில் அருளிருந்தால்
செயற்கைகட் கிங்கென்ன வேலையையா இதைத்
தெரிந்திட நாம்பிறந்தோம்

உயர்தரம் கீழ்த்தரம் உளவாகும் பேதங்கள்
உள்ளத்தின் பண்பதனால்
அயர்வற நம்மனம் அருள்நெறி கூடிடில்
அமரர்கள் நாமலமோ

மக்கட்பணி யென்று மக்களை மயக்கி
மல்கின பணிகள்பல
இக்கணம் எழுங்கள் எல்லோரும் வாழ்ந்திட
இன்பஅருள் நெறிக்கே

வாழிய அருள்நெறி வாழிய தொண்டர்கள்
வாழிய மக்களெலாம்
ஊழிவாழ் குன்றையன் உயிர்க்குயிர் அருள்நெறி
உலகெலாம் வாழியவே.

Koviloor Digital Library

குழந்தை இன்பம்

கவிஞர் சாமி பழனியப்பன்

குழந்தைகள் என்றாலே யாருக்கும் ஒரு தனி இன்பந்தான். கோதையரின் குழைவு மிக்க கனிமொழியைக்காட்டிலும் இனிமையான-ஏன்? குழலையும் யாழையும் கூடத் தோல்வியுறச் செய்யும்படியான அத்துணை இன்பந்தோய்ந்து, பொலிவுறும் மழலையும், தொட்டபோதெல்லாம் சுவையூறும் நல்லின்பச் சுரங்கமென விளங்கும் மாந்தளிர் மேனியும், எள்ளத்தனையும் மாசுபடியாத வளப்பிதயமும் எவரைத்தான் இன்ப லாகிரியில் ஆழ்த்தமாட்டா? குழந்தை சிரிக்கும் போது நாமும் சிரிக்கிறோம். குழந்தை அழும்போது நம் உள்ளத்தையும் ஏதோ ஊசி உறுத்துவதுபோன்ற ஓர் உணர்ச்சி உண்டாகிறது. குழந்தை சற்று தள்ளாடித் தளர் நடை பயிலும் போது, அடேயப்பா! அந்நடைகண்டு நாமடையும் மகிழ்ச்சிக்கு இணையும் ஏற்றமும் இல்லை என்றே சொல்லிவிடலாம். அப்பப்பா அந்தக் "குறும்புப் பார்வைதான் எத்துணை இன்பம். குழந்தையைப் பெற்றெடுக்கத் தாய் அனுபவிக்கும் துயரம் கொஞ்சமா? அவ்வளவு துன்பத்திற்கும், துயரத்திற்கும் ஆளாகிற தாயும் அந்தக் குழந்தையின் முகத்தைக்கண்டதும் எவ்வளவு சீக்கிரத்தில் தான்பட்ட துன்பத்தையும், துயரத்தையும் மறந்து, பேரின்பமுறுகிறாள்! அதிகமேன்? குழந்தைகளிடத்தில் பொதிந்து பொலிவுறும் மகத்தான காந்த சக்தியின் முன்பு நாமெல்லாம் சிறு சிறு இரும்புத் துகள்களாகவே ஆகிவிடுகிறோம். மனித இதயம் படைத்த எவருக்கும் இத்தன்மை உடன் பிறந்த தொன்றுதான்.

குழந்தைகள் மட்டும் இல்லையானால், இந்த உலகத்தால் நமக்கு எதுவுமே பயனில்லை. வானுக்கு வெண்ணிலவும், கவிஞனுக்குக்கற்பனையும், எத்துணை முக்கியமோ அத்துணை முக்கியம் இந்த வையத்திற்குக் குழந்தைகள். சுருங்கக் கூறினால் குழந்தைகள் இல்லாத இடம் சூனியந்தான். குழந்தைகள் இல்லாத வீடு, அரும்பு, மலர், காய், கனியற்ற சோலை-தாமரை பூத்து அழகு செய்யாத குளம் - தண்ணொளி பரப்பி அழகு செய்யும் திங்கள் இல்லாத மாலைக்காலம் என்கிறது "சூளாமணி" இதோ அந்தப்பாடல்:-

"தொக்கின மலர்துதை
விலாத சோலையும்
புக்கிளந் தாமரை
நகாத பொய்கையும்
மிக்கிளம் பிறைவிரி
விலாத வந்தியும்
மக்களை யிலாதோர்
மனையு மொக்குமே."

அடுத்தபடியாக,

"கல்லா மழலைக் கனியுறல்
கலந்து கொஞ்சும்
சொல்லா லுருக்கி அழுதோடித்
தொடர்ந்து பற்றி
மல்லார் புயத்தில் விளையாடு
மகிழ்ச்சி மைந்தர்
இல்லா தவர்க்கு மனைவாழ்வின்
இனிமை என்னும்?"

என்ற பாடலின் மூலம் குழந்தை இல்லாதவர்களின் மனைவாழ்வில் இனிமை இல்லை என்று உணர்த்துகிறார் வில்லிபுத்தூரார்.

இவ்வாறு "வீட்டை விளங்க வைக்கும் குழந்தை"யின் மெல்லுடலைத் தொட்டுத் துய்க்கின்ற இன்பம், நீலமணிச் சுடர் விழியின் குறும்புப்பார்வை தரும் இன்பம், முல்லை மலர்ச் சிரிப்புத் தரும் இன்பம், குருவி போன்று தத்தித் தத்திச் செல்லும் போது காண்கின்ற இன்பம், தெவிட்டாத தேனூறு போன்ற மழலை மொழி தரும் இன்பம் இவற்றின் முன்பு நூல்கள் போதிக்கின்ற நுண்ணறிவும் கூட நிமிர்ந்து நடைபோட முடியாது. ஏன்? இன்பக்கதைகள் எல்லாம் ஏடுகள் சொல்வதில்லை - குழந்தைகள் சொல்கின்றன. விளக்கை ஏற்றியதும் இருள் பறப்பது போல-சூரியனைக் கண்டதும் பனி விலகுவதுபோல - குழந்தைகளைக் கண்டதும் கவலை மறைகிறது. இன்னுஞ் சற்று விளக்கமாகக் கூறவேண்டுமானால், நரை,

Koviloor Digital Library

திரை, மூப்பை விலக்கி, இளமையுணர்வை எழுப்பி இன்பம் பயப்பது குழந்தைஎன்றே கூறிவிடலாம். ஆம். நரை, திரை, மூப்பை, உண்டாக்குவது கவலை. அந்தப் பொல்லாத கவலையைப் போக்கிவிடுகிறது குழந்தை. இதனைத்தான்,

"யாண்டுபல வாக நரையில வாகுதல்
யாங்கா கியரென வினவு திராயின்
மாண்டவென் மனைவியொடு
மக்களும் நிரம்பினர்"

என்ற, புலவர் பிசிராந்தையின் புறப்பாட்டு உணர்த்துகிறது.

"குழந்தைகள் சம்சார வெப்பத்திற்குப் பயன்படும் யுடிகோலான். மாற்றி மாற்றி அதை நெற்றியிலிட்டால் உள்ளேயிருக்கும் கொதிப்புச் சற்று அடங்கும்." என்கிறார் காண்டேகர். நாம் எவ்வளவுதான் கோபமாக இருந்தாலும், காதல் வாழ்வின் அழகுத்தத்துவமான குழந்தையைக் கண்ணுறும்போது நமது கோபம் சுக்குநூறாகி விடுகிறதல்லவா?

"காதறுந்த ஊசியும்
வாராதுகாண் கடைவழிக்கே"

என்று பாடிய பட்டினத்தடிகள்கூட

"சேய்போல் இருப்பர் கண்டீர்
உண்மைஞானந் தெளிந்தவரே"

என்று கூறுகிறார்.

குழந்தைகள் உயிரோவியங்கள்-ஆம், பேசும் பொற் சித்திரங்கள். "கண்ணம்மா என் குழந்தை" என்ற பாடலில் உயிர்க் கவி பாரதியார், குழந்தைகளை உயிரோவியமாக்கி, நம்மையும் அந்த ஓவியத்தின் பேரழகிலே-உயரிய இன்பத்திலே இலயிக்கச் செய்து விடுகிறார். இதோ பாரதியாரின் பாடலைப் பாருங்கள்:

"சின்னஞ் சிறுகிளியே - கண்ணம்மா
செல்வக் களஞ்சியமே!
என்னைக் கலிதீர்த்தே - உலகில்
ஏற்றம் புரியவந்தாய்!

பிள்ளைக் கனியமுதே-கண்ணம்மா
பேசும் பொற்சித்திரமே!
அள்ளி யணைத்திடவே-என்முன்
ஆடிவருந் தேனே!

ஓடிவருகையிலே-கண்ணம்மா
உள்ளங் குளிருதடீ;
ஆடித் திரிதல் கண்டால்-உன்னைப்போய்
ஆவி தழுவுதடீ;

உச்சிதனை முகந்தால் - கருவம்
ஓங்கி வளருதடீ;
மெச்சியுனை யூரார் - புகழ்ந்தால்
மேனி சிலிர்க்குதடீ.

கன்னத்தில் முத்தமிட்டால்-உள்ளந்தான்
கள்வெறி கொள்ளுதடீ;
உன்னைத் தழுவிடிலோ-கண்ணம்மா
உன்மத்த மாகுதடீ!

சற்றுன் முகஞ்சிவந்தால்-மனது
சஞ்சல மாகுதடீ;
நெற்றி சுருங்கக்கண்டால்-எனக்கு
நெஞ்சம் பதைக்குதடீ!

உன்கண்ணில் நீர்வடிந்தால்-என்நெஞ்சில்
உதிரம் கொட்டுதடீ;
என்கண்ணிற் பாவையன்றோ? கண்ணம்மா
என்னுயிர் நின்னதன்றோ?

சொல்லு மழலையிலே-கண்ணம்மா
துன்பங்கள் தீர்த்திடுவாய்;
முல்லைச் சிரிப்பாலே-எனது
மூர்க்கந் தவிர்த்திடுவாய்!

இன்பக்கதைகள் எல்லாம்-உன்னைப்போல்
ஏடுகள் சொல்வதுண்டோ?
அன்பு தருவதிலே-உன்னைநேர்
ஆகுமோர் தெய்வமுண்டோ?

மார்பில் அணிவதற்கே-உன்னைப்போல்
வைர மணிகள் உண்டோ?
சீர்பெற்று வாழ்வதற்கே-உன்னைப்போல்
செல்வம் பிறிதுமுண்டோ?"

குழந்தை இன்பம் பற்றிக் கவிதைமழை கொட்டுகிறார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன். நாமும் சிறிது நேரம் அந்த மழையை அனுபவிப்போம்:

"இளகிய பொன் உருக்கின்
சிற்றுடல் இரு நீலக்கண்
ஒளிபடும் பவளச் செவ்வாய்
ஒருபிடிக் கரும்பின் கைகால்
அளிதமிழ் உயிர்பெற் றாங்கே
அழகொடும் அசையும் பச்சைக்
கிளியினைக் காணப் பெற்றான்
கிடைப்பரும் செல்வம் பெற்றான்.

கரும்பட்டு மென்மயிர் போய்க்
காற்றோடும் ஆடக் கண்டோர்
விரும்பட்டும் என்று சின்ன
மின்நெற்றிக் கீழ் இரண்டு

Koviloor Digital Library

கரும்பிட்ட கருங்கண் காட்டி
எரும்புகோள் தொடர்ச்சி போலும்
அரும்பிட்ட புருவம் காட்டி
அழகு காட்டும் குழந்தை.

எள்ளிளஞ் சிறிய பூவை
எடுத்துவைத் திட்ட மூக்கும்
வள்ளச்செந் தாமரைப்பூ
இதழ்கவிர் திருந்த வாய்ப்பின்
அன் இரண் டும்சி வப்பு.
மாதுளை சிதறச் சிந்தும்
ஒள்ளிய மணிச்சி ரிப்பும்
உவப்பூட்டும் பெண் குழந்தை

• • •

உச்சி விளாம் பழத்தின்
உட்கனியும் கற்கண்டும்
பச்சை ஏலப்பொடியும்
பாங்காய்க் கலந்தள்ளி
இச்சென உண்ணும்
இன்பந்தான் நீகொடுக்கும்
பிச்சை முத்துக் கிடாமோ
என்னருமைப் பெண்ணரசே

• • •

சோலைமலரே! சுவர்ணத்தின்
வார்ப் படமே
காலை இளஞ் சூரியனைக்
காட்டும் பளிங்குருவே!
மின்னல் ஒளியே!
விலைமதியா ரத்தினமே!
கன்னல் பிழிந்து
கலந்த கனிச்சாறே!

• • •

மெல்லென அதிர்ந்த மின்னல், அந்தச்
செல்வக்குழந்தையின் சிரிப்பு! நல்ல
இன்பம் வேண்டுவோர் இங்குளோர் வாழ
அருஞ்செயல் செய்துதான்
அடைய வேண்டுமோ!

குளிர்வா ழைப்பூக் சொப்பூழ் போன்ற
ஒளி இமை விலக்கி வெளிப்படும் கண்ணால்
முதுவை யத்தின் முதுமை கண்டதோ,
என்னமோ? அதனை எவர்தாம் அறிவார்?
தங்க மாதுளைச் செங்கனி பிளந்த
மாணிக்கம அந்த மதலையின் சிரிப்பு!

வாரீர் அணைத்து மகிழவேண் டாமோ?
பாரீர் அள்ளிப் பருக வேண்டாமோ?
செம்பவ ளத்துச் சிமிழ்சாய்த்த அமுதாய்ச்
சிரித்தது; பிள்ளை சிரிக்கையில்
சிரித்தது வையம்! சிரித்தது வானமே!

ஆம்! பாரதிதாசனாரின் பாடலில் குழந்தை சிரிக்கிறது! வையம் சிரிக்கிறது! ஏன்? வானமே சிரிக்கிறதே!

அடுத்தபடியாக, கவிமணி தேசிகவிநாயகம் அவர்கள் அளிக்கும் குழந்தை இன்பத்தைச் சிறிது அனுபவிப்போம் வாரீர்!

"மாமணியோ முத்தோ
மரகதமோ மன்னவர்தம்
தாம முடிமீது
தயங்கும் வயிரமதோ
முல்லை நறுமலரோ
முருகவிழ்க்கும் தாமரையோ!
மல்லிகைப் பூவோ
மருக்கொழுந்தோ சண்பகமோ?

• • •

"கண்ணே மணியே முத்தந்தா
கட்டிக் கரும்பே முத்தந்தா
வண்ணக் கிளியே முத்தந்தா
வாசக் கொழுந்தே முத்தந்தா
தேனே பாலே முத்தந்தா
தெவிட்டாக் கனியே முத்தந்தா
மானே மயிலே முத்தந்தா
மடியில் வந்து முத்தந்தா"

இனி, கவிஞர் பெ. தூரன் அவர்கள் சில சொற்களால் 'பச்சைக் குழந்தை'யை நம்மோடு கொஞ்சிவிளையாடச் செய்து, நம்மையெல்லாம் இன்பப் போதையிலே ஆழ்த்துகிறார் பாருங்கள்:

பச்சைக் குழந்தையென்றால்-எனக்கொரு
பாசம் பிறக்குதம்மா-அதன்
கொச்சை மழலையிலே-உளந்தான்
கொஞ்சிக் களிக்குதம்மா!
சின்னஞ் சிறுசிரிப்பால்-கவலைகள்
தேய்ந்துமடியுதம்மா-அதன்
மின்னும் உடல்வளைவில்-அமுதின்
விண்சுவை ஏறுதம்மா!

உலகப்பொது நூலாகிய திருக்குறளை இயற்றியருளிய திருவள்ளுவர், தம் திருக்குறளில் "புதல்வரைப் பெறுதல்" என்ற ஒரு தனி அதிகாரத்தையே வைத்துள்ளார். குழந்தையின்பம் பற்றியும், மக்கட் பேறு பற்றியும் அவ்வதிகாரத்தில் மிகத் தெளிவாகச் சித்திரிக்கப்பட்டிருக்கிறது. "ஒருவன் தான் பெறவேண்டிய பேறுகள் பலவற்றுள்ளும் அறியவேண்டியனவற்றை அறியுந் திறனுடைய சிறந்த மக்களைப்

Koviloor Digital Library

பெறுவதே சிறப்புடையது-மதிக்கத்தக்கது'' என்ற கருத்துடைய,

''பெறுமவற்றுள் யாமறிவ
தில்லை யறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற''

என்ற குறளும், ''பெற்றோர்க்குத் தம் மக்கள் தங்கள் பிஞ்சு விரல்களால் அளைந்த-பிசைந்த சோறு அமிழ்தினும் இனிமையுடையதாகப் படும்'' என்ற கருத்தினை யுடைய,

''அமிழ்தினு மாற்ற
வினிதேதம் மக்கள்
சிறுகை யளாவிய கூழ்''

என்ற குறளும், ''ஒருவனது உடலுக்கு இன்பமளிப்பது, தான் பெற்ற இன்பக் குழந்தையின் மெல்லுடலை வாரியள்ளி மார்போடணைத்துக் கொள்ளுதலும், செவிக்கு இன்பம் பயப்பது அந்தக் குழந்தையின் மழலைச் சொற்களைக் கேட்டலுமாம்'' என்ற கருத்துக்களையுடைய,

''மக்கள்மெய் தீண்டல்
உடற்கின்பம் மற்றுஅவர்
சொற்கேட்டல் இன்பம் செவிக்கு''

என்ற குறளும், ''தம் மக்களின் மழலைச் சொற்களைக் கேட்டறியாதவரே குழலும் யாழும் இனிதெனப் பாராட்டுவர்'' என்ற கருத்துடைய,

''குழலினிது யாழினிது என்பர்தம் மக்கள்
மழலைச்சொற் கேளா தவர்''

என்ற குறளும், எவ்வளவு சிறப்பாக அமைந்திருக்கின்றன பாருங்கள்.

* * *

மக்கட்பேறு பற்றியும், குழந்தை இன்பம் பற்றியும் மிக அழகாகச் சித்திரித்துக் காட்டும் அருமையான பாடல் ஒன்றுள்ளது புறநானூற்றிலே.

இந்த உலகிலே, வாழ்க்கைக்குத் தேவையான செல்வங்கள் யாவையும் பெற்றுச் செல்வராகப் பலர் விளங்கக்கூடும். ஆனாலும், சாவா மருந்தெனச் சாற்றப்பெறுகிற அமிழ்தமே கிடைப்பதாக இருந்தாலும், கிடைத்தற்கரியதொன்று கிடைத்துவிட்டதெனத் தனியே எடுத்துக்கொண்டு சென்று விருந்தினரை யொதுக்கித் தனியிருந்து உண்ணுவதைக் கனவிலுங் கருதாத தமிழினத்தின் சிறப்பியல்பிற்கேற்ப பலருடன் கூடவிருந்து உண்ணுகின்ற பேறு எல்லோருக்கும் கிடைத்துவிடும் என்று கூறுவதற்கில்லை. அவ்வாய்ப்புக் கிடைக்க அறிவு, குணம்போன்ற பிறவும் வாய்க்கப் பெற வேண்டும்.

மேலும் ஒருவரிடத்திலே பொருள் மிகுந்துவிட்டதாலேயே அவரைச் செல்வரென்றோ, அச் செல்வம் அவரது உடைமை என்றோ கூறிவிடுதல் இயலாது. அதற்கேற்ப அறிவு, குணம் போன்ற பிற நல்லியல்புகளும் வாய்க்கப் பெற்று அச் செல்வத்தினை ஒரு சிறிதும் பிறவழிகளில் செலவழிக்காமல் அற வழிகளிலேயே பயன்படுத்தும்போதுதான் அவர் செல்வராகிறார்-அப்பெருஞ் செல்வமும் அவர்க்கு உடைமையாகிறது என்னலாம். இவ்வாறு, பெருஞ் செல்வத்தையும் பெற்றுப் பலருடனே கூடவிருந்து உண்ணுகின்ற சிறந்த வாய்ப்பினையும் பெற்று வாழ்கின்ற வாழ்வே வாழ்வாகும். இந்த வாழ்வுங்கூட நிறைவுடைய வாழ்வாகாது-பூரணத்துவம் பெறாத வாழ்வேயாம். இந்த வாழ்வு எப்பொழுது நிறைவுடைய வாழ்வாகிறது? இந்தக் கேள்விக்குப் பதில் கூறும் முறையிலே தான் புறநானூற்றிலேயுள்ள பாண்டியன் அறிவுடை நம்பியின் பாடல் அமைந்திருக்கிறது. ஆம்.

''தமது குறுகிய கால்களால் குறுகக் குறுக நடை பயின்று, கலத்தில் இடப்பெற்ற சோற்றினைப் பிஞ்சுக்கரங்களால் அள்ளித் தரையிலே சிந்தியும், சிறிய-மெல்லிய-அழகிய விரல்களால் கூடப் பிசைந்து அதனைத் தோண்டியும், வாயிற் கவ்வியும், வாயிற் கவ்வியதை விரல்களால் துளாவியும், நெய்யிட்டுப் பிசையப்பெற்ற அந்தச் சோற்றின் அருமையை உணராது அதனை உடம்பிலே படுமாறு சிதறியும் இம்முறையிலே அறிவை இன்பத்தால் மயக்குகின்ற 'குழந்தைப் பேறு' பெற்றிருந்தால்தான், படைப்புப் பல படைத்துப் பலரோடு உண்ணும் உடைப் பெருஞ் செல்வரின் வாழ்வும், நிறைபெற்ற பெருவாழ்வாக அமைகிறது'' என்கிறார் அவர். இதனை மிகத் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டும் அந்தப் புறநானூற்றுப் பாடலைப் பாருங்கள்:

''படைப்புப் பலபடைத்துப் பலரோடுண்ணும்
உடைப்பெருஞ் செல்வ ராயினு மிடைப்படக்

குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டுந் தொட்டுங் கவ்வியுந் துழந்தும்
நெய்யுடை யடிசில் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை இல்லோர்க்குப்
பயக்குறை இல்லைத் தாம்வாழு நாளே"

* * *

அளவற்ற பற்றும் பாசமும் கொண்டு "மண வாழ்வு" மேற் கொண்டவர்கள் கூட, ஒரு குழந்தை பெற்றதும் இருவரின் அன்பையும் ஒருங்கே யந்தக் குழந்தையிடங் காட்டத் தலைப்பட்டுவிடுகிறார்கள். அந்தக் குழந்தையின் பொருட்டே தங்கள் வாழ்வு என்று கூடக் கருதுகிறார்கள். இன்பப் பெட்டகமாக விளங்கிய தன் இன்ப மனையாளின் மோகனலாகிரியே ஒன்றிரண்டு அந்தக் குழந்தையாக உருப்பெற்றுவிட்டதாகத் தலைவன் கருதுகின்றான்; தன் தலைவன் தனக்களித்த சலியாத இன்பமும், அவன் தன்பால் காட்டும் பேரன்புமே இவ்வாறு குழந்தையாக உருப்பெற்றுவிட்டதாகத் தலைவி எண்ணுகிறாள். இவ்வாறு இருவரும் எண்ணுவதாலேயே இருவரின் மனமும் பள்ளத்திற் பாயும் சிற்றாறு போல ஒருங்கே குழந்தையிடஞ் சென்று இலயித்துவிடுகிறது. இவ்வாறிருக்கும்போது, தலைவி தலைவனின் இன்ப வாழ்க்கைக்கு உயிரளிப்பதே "குழந்தை இன்பம்" தான் என்று கூறுவதில் என்ன தவறு? இதற்குத் தமிழ் இலக்கியங்களில் இருந்து எவ்வளவோ சான்றுகள் காட்டமுடியும்.

தலைவன் வேற்றூர் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டுவிடுகிறது. இதனைத் தன் காதலிபால் அறிவித்தால் பெரிதும் துயரடைவாள் என்றெண்ணி மறைத்தே வைத்திருந்தான். எப்படியோ இந்த இரகசியத்தை அவள் அறிந்துகொண்டுவிட்டாள். பெரிதும் வருத்தமுறுகிறாள். ஆனால் நீங்கள் என்னைப் பிரிந்து செல்லக் கூடாது; நான் தனித்திருக்க மாட்டேன் என்று அவள் நேரிடையாகக் கூறிவிடவில்லை. என்ன செய்தாள்? வேறு யாரிடமாவது கூறிப் பயணத்தைத் தடைப்படுத்தினாளா? இல்லை. அதற்கு அவள் கையாண்ட முறைதான் அப்பப்பா எவ்வளவு பண்பாடுடையதாக அமைந்திருக்கிறது பாருங்கள்:

கண்களில் நீர்ததும்ப அவள் முன்வந்து நின்றாள். அவள் மட்டுமா? இல்லை. பொங்கிவழியும் கண்ணீரை மறைப்பாள் போல, அவளது சிறு குழந்தையையும் வாரியணைத்துக்கொண்டுவந்து நின்றாள். குழந்தையின் தலையில், அன்றலர்ந்து தளதள வென்றிருந்த நறுமலர் சூடப்பெற்றிருந்தது. அவள் குழந்தையை இறுக அணைத்து உச்சிமோந்தாள். அடேயப்பா! அந்த மூச்சிலேதான் எவ்வளவு வெப்பம்! ஆம். குழந்தையின் தலையில் சூடப்பெற்றிருந்த அன்றலர்ந்த அந்தப் புது மலர்கள் அவளது மூச்சுப்பட்ட மாத்திரத்தில் அழகிழந்து வாடிவிட்டன. தலைவன் இதைக்கண்டான். அவனென்ன ஒன்றுந் தெரியாதவனா? இல்லையே! விஷயத்தைப் புரிந்து கொண்டான். அப்புறமென்ன? பயணம் தடைப்பட்டுவிட்டது. இதனைத் தலைவன் கூறுவதாக உள்ள அகநானூற்றுப் பாடலைப் பாருங்கள்.

"ஒவச் செய்தியின் ஒன்றுநினைந் தேற்றிப்
பாவை மாய்த்த பனிநீர் நோக்கமோ
டாகத் தொடுக்கிய புதல்வன் புன்றலைத்
தூநீர் பயந்த துணையமை பிணையல்
மோயினள் உயிர்த்த காலை மாமலர்
மணியுரு இழந்த அணியழி தோற்றம்
கண்டே கடிந்தனம் செலவே......"

* * *

அடுத்தபடியாக, குறுந்தொகைப் பாடலொன்று தலைவி-தலைவன் காதலுக்குக் குழந்தை ஜீவனளிப்பதைச் சித்திரிக்கிறது பாருங்கள்.

தலைவன் வேற்றூர் போயிருந்தான். தலைவியிடம், திரும்பி வந்துவிடுவதாகக் கூறிப்போன அந்தக் குறித்த காலத்தில் அவன் திரும்பி வராமல் சிலகாலம் தாமதித்து வந்தான். காதல் தலைவனின் வருகையை எதிர்பார்த்து எதிர்பார்த்து ஏமாற்றமுற்ற தலைவி பெரிதும் சினமுற்றிருக்கின்றாள்-திரும்பி வந்த தலைவனோடு முகம் கொடுத்துப்பேச அவள் விரும்பவில்லை தலைவன் எவ்வளவோ சமாதானங் கூறிப்பார்த்துவிட்டான். ஏதும் பலிக்கவில்லை. அவர்களுக்கிடையே ஏற்பட்டுள்ள ஊடல் தணிந்தபாடில்லை.

(தொடர்ச்சி 46ம் பக்கம்)

Koviloor Digital Library

* அம்பிகையின் சன்னிதியில் சந்தித்தனர் அவளும் அவனும் இருவரும் எப்படிச் சந்தித்தார்கள். அவர்களை சன்னிதியில் சந்திக்கவைத்தது எது? அந்த சந்திப்பில் ஏற்பட்ட பலன் என்ன? .... படித்தால் தெரியும். [ஆ-ர்.]

அம்பிகையின் அருள்

கிருட்டிணன்

நாள் தவறினாலும் சிங்காரம் நெல்லையப்பர் கோவிலுக்குப் போவது தவறாது. வழக்கமாகப் போவதைவிட அன்று சற்றுத் தாமதமாகவே அவன் கோயிலுக்குச் சென்றான்.

வெள்ளிக்கிழமை என்றாலும் வெகுநேரம் ஆகிவிட்டதால் கோவிலில் அதிக ஜனக் கூட்டம் இல்லை. சுவாமிக்கு அர்ச்சனையை முடித்துவிட்டு அம்மன் சன்னதிக்கு பிரகாரத்தைச் சுற்றிக்கொண்டு வந்தான். ஏதோ ஒரு பாட்டை அவன் வாய் முணுமுணுத்துக் கொண்டிருந்தது.

அம்மன் சன்னதிக்கு வரும் வழியில் அர்ச்சனைச் சீட்டு வாங்குவதற்காக ஒரு ரூபாய் நோட்டை எடுத்து சீட்டுக்கொடுக்கும் கணக்குப் பிள்ளையிடம் நீட்டினான்.

“என்ன அம்மாவுக்கும் சேர்த்துத்தானே?” என்று கேட்டார் கணக்குப் பிள்ளை.

சிங்காரத்துக்குத் தூக்கி வாரிப்போட்டது. பின்னால் திரும்பிப் பார்த்தான். இத்தனை நேரம் அவன் பின்னாலேயே வந்துகொண்டிருந்த அந்தப் பெண்ணை அப்பொழுதுதான் கவனித்தான். விஷயம் விளங்க வெகு நேரம் ஆகவில்லை. “இரண்டுபேரும் சேர்ந்தார் போல் வந்ததைப் பார்த்து அந்தக் கணக்குப் பிள்ளை எங்களைத் தம்பதிகள் என்று எண்ணிவிட்டார் போலும்” என்று எண்ணிக் கொண்டிருக்கும் பொழுதே, அந்தப் பெண் தன் கையில் உள்ள தட்டில் பரபரப்புடன் எதோ தேடுவதும், ஏமாற்றமடைந்த முகத்துடன் நின்றுகொண்டிருப்பதையும் கவனித்தான்.

“சரிதான் சில்லரை கொண்டுவர மறந்துவிட்டாள், அதுதான் இப்படி விழிக்கிறாள். கோவிலுக்கு வந்து ஏமாந்து திருமபுவானேன்” என்று கணக்குப் பிள்ளை கேட்டமாதிரியே இரண்டு சீட்டு வாங்கிக்கொண்டேன்.

பிறகு ஒரு சீட்டை அவள் கையிலுள்ள தட்டில் வைத்துவிட்டு “சில்லரை எடுத்து வர மறந்துவிட்டாய் போலிருக்கு...அதுக்கென்ன நான் சீட்டு வாங்கிவிட்டேன்” என்றான்.

எதிர்பாராத இந்தச் செய்கை அந்தப் பெண்ணுக்கு மிகுந்த திகைப்பை மூட்டியது. அவனைப் பார்ப்பதற்கே அவளுக்கு வெட்கமாகிவிட்டது. வாஸ்தவமாகவே அவள் அர்ச்சனைக்குச் சில்லரை கொண்டு வர மறந்துதான் போயிருந்தாள். அதனால் அவன் செய்கையைத் தப்பிதமாக எடுத்துக்கொள்ளாமல், தன்னை ஒருவாறு சமாளித்துக்கொண்டு அம்மன கோவிலின் உட்புறம் சென்று விட்டாள். சிங்காரம் அவளைப் பின்தொடர்ந்து சென்றான்.

இருவரும் எதிர் எதிராக அங்கே நின்று கொண்டிருந்தனர். அர்ச்சகர் இருதட்டுக்களையும் வாங்கிக்கொண்டு, பெயர், நக்ஷத்திரம் கேட்டுவிட்டு அர்ச்சனைசெய்ய ஆரம்பித்தார்.

அந்தப் பெண் உள்ளே இருக்கும் அம்பிகையைப் பார்த்தவண்ணம் நின்று கொண்டிருக்கையில், சிங்காரம் ஆடாமல் அசையாமல் தன் எதிரே நிற்கும் அம்பிகையைப் பார்த்துக்கொண்டு நின்றான்!

இரண்டு அர்ச்சனைகளும் முடிந்து சூடம் கொளுத்தி மணி அடித்த சத்தம் கேட்ட பொழுதுதான் சிங்காரத்துக்கு கோவில் அம்மன் ஞாபகம் வந்தது.

கற்பூரத்தைக் கண்களில் ஒற்றிக்கொண்டவாறே மெதுவாக அவள் அவனை ஏறிட்டுப் பார்த்தாள். அவனும் தன்னையே நோக்கிய வண்ணமிருப்பதைக் கண்டதும் நாணத்தால் தலையைக் கவிழ்த்துக்கொண்டாள்.

Koviloor Digital Library

பிரசாதத் தட்டுகள் இரண்டையும் எடுத்துவந்த அர்ச்சகர் இரண்டு தட்டுக்களையுமே சிங்காரத்திடம் நீட்டினர்.

"அட ஈஸ்வரா! இவளுமா அப்படி நினைத்துக்கொள்ள வேணும்" என்று நினைத்துக்கொண்டே தட்டுக்கள் இரண்டையும் வாங்கிக் கண்களிலே ஒற்றிக்கொண்டான். பிறகு அந்தப் பெண்ணிடம் அவளுடைய தட்டை மெதுவாக நீட்டினன். குனிந்தவாறே சிரித்துக்கொண்டு கைநீட்டி அதை வாங்கிக்கொண்டாள்.

வெளிப்பிரகாரத்திற்கு வந்ததும் மெதுவான குரலில் அவளைப்பார்த்து "நல்ல வேடிக்கை" என்றான்.

அவளும் இலேசாகச் சிரித்துக் கொண்டே "ஆமாம். எல்லாம் என்னாலேதான். சில்லரை எடுத்து வைத்துக் வைத்துக்கொண்ட ஞாபகத்திலே வந்து விட்டேன. இங்கு வந்தபிறகுதான் மறந்து விட்டது தெரிந்தது. அதுவும் இன்றைக்கு என் ஜன்மநக்ஷத்திரம்......"என்ருள்.

"அதனல் என்ன இப்போ. எப்படியும் வந்த காரியம் ஆச்சு"

"உங்களுக்கு என்னுலே இரண்டணு நஷ்டம்......நாளைக்கு ஆத்துக்கு வந்தேள்னு......"

"சே சே இரண்டு அணுவுக்காக"

"அப்படி இல்லே. டவுன் தெப்பக்குளத் தெரு மகாதேவய்யர்ன்னு விசாரிச்சா எவ்காத்தைக் காட்டுவா......அவசியம் வரணும்" என்று சொல்லிவிட்டு விடுவிடு என நகர்ந்து விட்டாள்.

"ஆமாம் இவள் வீட்டைத் தேடி இந்த இரண்டணுவுக்காகப் போகவேணுமா" என்று அலுத்துக் கொண்டான். அவள் சொல்லிவிட்டுப்போன விலாசத்தை மட்டும் மனதில் உருப்போய்டுக் கொண்டான்!

அவனுடைய மனது முழுவதும் அவளைபற்றிய நினைப்பிலே சுற்றிக்கொண்டிருந்தது. மறுபடியும் அவளைப்பார்க்க ஆசை எழுந்தது. "எதற்கும நாளைக்கு அந்தத் தெருப்பக்கமாகப் போய் விட்டைத்தான் தெரிந்து வைத்துக்கொள்வோம்" என்று முடிவு செய்துகொண்டே விடுவந்து சேர்ந்தான்.

மறுநாள் மாலே திட்டமிட்டபடி டவுன் தெப்பக்குளத் தெருவழியாக, தெருவின் இரு வரிசைகளையும திருமபிப் பார்த்துக் கொண்டே போனுன்.

யாரையோ எதிர்பார்த்து நிற்பவள் போல் ஒரு வீட்டு வாசலில் நின்றுகொண்டிருந்தாள அந்தப்பெண். இவனைக் கண்டதும் அவள் புன்முறுவல் செய்து கொண்டே வீட்டினுள் போய்விட்டாள்.

பதிலுக்குத் தானும் முறுவல் செய்துவிட்டுத் தெருவின் மறுகோடிக்குப் போய் விட்டான்.

பிறகு சொல்வானேன். தினமும் மாலே அந்தத் தெருவழியாகப் போகாமல் இருக்க மாட்டான். அப் பெண்ணும் இவனைப் போல் வீட்டு வாசலிலே வந்து இவன் வருகைக்காக நின்றுகொண்டிருப்பாள். இவ்விதமே இரண்டுபேர் உள்ளங்களும் கண்கள் வழியாகவே பேசிப்பேசி காதலாகக் கனிந்து நின்றது.

இதே சமயத்தில் பலபேர் பெண் கொடுக்க முயற்சி செய்துகொண்டு இருந்தார்கள். பல வரன்கள் வந்தன. ஆனல் அந்த இடத்தையெல்லாம் தட்டிக்கழித்துக்கொண்டே வந்தான்.

ஒருநாள் அவன் தகப்பனர் அவனைக் கூப்பிட்டு "டேய் இந்த உதவாக்கரை சாக்குப்போக்குச் சொல்லித் தட்டிக்கழிக்க விடமாட்டேன். இதோபாரு இப்போ ஒரு ஜாதகம் வந்திருக்கு, சகலவிதத்திலும் பொருத்தமாயிருக்கு நாளைக்கே உன் அம்மாவையும் கூடக் கூட்டிக்கொண்டுபோய் பெண்ணைப் பார்த்துவிட்டுவா. அடுத்த மாதமே முகூர்த்தம் நடத்திவிடலாம்" என்ருர்.

சிங்காரத்திற்கு திடீரென்று இடிமின்னுடன் வானம் கருத்துவிட்டதுபோல் கண்கள் இருள ஆரம்பித்தன. "அட கடவுளே அம்பிகை சன்னதியிலே எங்களுக்குள் அணையாத ஆசையை உண்டு பண்ணிவிட்டு, இப்போது வேடிக்கையா பார்க்கிருய்" என்று அவன் மனம் குழம்பிக்கொண்டு நின்ருன்.

Koviloor Digital Library

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
Acc. No. 45787

அய்யருக்குப் பிள்ளையின் மௌனம் விளங்கவில்லை. "இனிமேல் என்னடா யோசனை.........உம்.........ஏன் ஏதாவது காதல் பித்து உனக்கும் பிடித்துவிட்டதா? நீ கொஞ்ச நாளாய் "டீக்காய்" டிரஸ் பண்ணிக்கொண்டு வெளியேபோய் வரதைப் பார்த்தால் சந்தேகமாகத்தான் இருக்கு.........சொல்லுடா அப்படி ஏதாவது உண்டா?" என்று கேட்டார்.

கொஞ்சம் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு "சொன்னால் கோபித்துக் கொள்ளமாட்டேளே என்று கேட்டான்.

"சொல்லேன்டா எந்த ரம்பையடா அவள்" என்ருர் ஆவலுடன்.

"டவுன் தெப்பக்குளத் தெருவிலே...... மகாதேவய்யர்னு.........ஒருத்தர் இருக்கார்......அவருடைய பெண்........"

"கமலா தேவியிடம் காதல்கொண்டு விட்டீர் அப்படித்தானே" என்று சொல்லி கடகட வென சிரித்தார்,

அவனுக்கு ஒரு வெடிகுண்டு வெடித்த அதிர்ச்சி ஏற்பட்டது. "அப்பாவுக்கு எப்படி தெரிந்தது இவ்வளவும்" என்று எண்ணிக்கொண்டிருக்கும்பொழுதே.

"ஏண்டா அசடே! அந்தப் பெண்ணைப் பத்தித்தாண்டா இப்போது நான் சொல்லிக்கொண்டிருந்தேன்!...............ஆமாம், உனக்கெப்படி அவளைத் தெரியும்?"

சந்தோஷத்தால் துள்ளிக் குதித்தது அவன் உள்ளம். அன்று கோவிலில் நடந்த சம்பவங்களைச் சிரிக்கச் சிரிக்கத் தகப்பனரிடம் சொன்னன்.

"அடடே அர்பிகைக்கு முன்னலேயே நீங்கள் ஒருவரையொருவர் வரித்துக் கொண்டாச்சா! பேஷ்! இனிமேல் எனக்கென்ன கவலை!" என்று சொல்லிச் சிரித்தார்.

மறுமாதமே சிங்காரம் கமலா கல்யாணம் இனிது நடந்தேரியது.

இப்போது இருவருமே சேர்ந்து நெல்லையப்பர் கோவிலுக்குப் போவது தவறுவதில்லை.

*

மணிமொழிகள்

பேசத்தெரியாத மனிதன் எழுதப்பட்ட சித்திரம், நிலைதவறிய மிருகம்.

குறிவைத்து எறியும் அம்புகளைப்போல வார்த்தைகளை பிரயோகி.

ஈட்டியை விட கூறிய நுனியை உடையது நாக்கு.

முட்டாளின் நாக்கு அவனது மரணத்திற்குத் திறவுகோல்!

மனம் நாவின் பொக்கிஷம், நாக்கு மனிதனின் வியாக்கியானி.

நாக்கு ஒரு காட்டு மிருகம்; அதன் போக்கில் விட்டால் ஆபத்துத்தான்!

கால் இடறினல் காயம் ஏற்படும்; வார்த்தை தவறினல் வம்பு ஏற்படும்.

பேசுபவரைக் கவனிக்காதே; பேச்சைக் கவனி.

முட்டாள் இரண்டு சந்தர்ப்பங்களில், தான் முட்டாள் என்பதை காட்டிக்கொள்கிருன்.

1. தான் அறியாததுபற்றி பேசும் போது,

2. கேட்கப்படுமுன் பதில் கூறும் போது,

பேச்சு மருந்தைப் போன்றது. அளவுப்படி உபயோகித்தால் பயன் உண்டு. அளவுக்கு மிஞ்சினல் ஆபத்துத்தான்!

நீண்ட நேரம் பேசுதல், பேச்சுக்கு விஷம் ஆகும்.

தவறுகளுக்கும், வெறுப்புக்கும் காரணமான வீண் பேச்சை விட்டொழியுங்கள்.

நீ ஒரு கற்றறிந்த சிறந்த பேச்சாளனுக இல்லாவிடினும், கூர்ந்து கேட்பவனுக இரு.

சாதாரண மனிதன் என்ற காரணத்தால் எவருடைய நல்ல கருத்துக்களையும குறைவாக எண்ணவேண்டாம்.

— ஹஜரத் அலி (ரலி)

*

Koviloor Digital Library

★ சிந்தனை சிறப்புப் பெற்றது. சிறப்பற்ற சிந்தனையால் சீரழியும் உலகம். மாணவர்கள், நம் இளைஞர்கள் இவர்களின் சிந்தனை எப்படி இருக்கவேண்டும்? எதுவாக இருக்கவேண்டும்? .... அதைப் பாடலிங்கம் சொல்லுகிறர் படியுங்கள். [ஆ-ர்.]

சிறிது சிந்தியுங்கள்!

அரி. சி. பாடகலிங்கம்

அன்பர்களே! இன்றைய இளைஞர் உலகை, சீர்குலைந்த சமுதாயப் பாழ் வழிக்கு இட்டுச் செல்லக்கூடிய ஒரு சில நூல்கள், பத்திரிக்கைகள், நம் நாட்டிலே தோன்றியுள்ளன, "இலக்கியம்" என்ற போர்வைக்குள் புகுந்து தீய சக்திகளையும், மாறுபட்ட துவேஷக் கருத்துக்களையும், மாணவ—இளைஞர்—உள்ளங்களிலே புகுத்தும் அளவுக்கு அவை வேலைசெய்துவருகின்றன. நம காசைக் கொடுத்து அத்த வெளியிடுகளை வாங்கி, நம் அறிவைப் பாழ்படுத்திக்கொள்ளவேண்டுமா?

இன்றைய இளைஞர்கள்தான் நாளை இந் நாட்டின் பிரதிநிதிகளாகப்போகிறுர்கள். இளைஞர் உள்ளம் தூய்மையானது; களங்கமற்றது. இந்தத் தூய உள்ளங்கள் இத்தகைய நூல்களையும், இலக்கியங்களையும் வெளியிடுவோரின் எண்ணந்தான் என்ன? இன்றைய இளைஞருலகை எதிர்காலத்தில் அதியுன்னத நிலைக்கு உயர்த்திவிடவேண்டும் என்ற உயரிய நினைப்பா? இல்லை, சிந்தனையா? அதுவல்ல அவர்கள் நோக்கம்! பின என்ன? எத்தகைய எண்ணங்களை எழுச்சிகளை, கிளர்ச்சிகளை அவர்களிடை புகுத்தினல், எத்தகைய சூழ்நிலைக்கு அவர்களைத் தயார்செய்தால் நம்முடைய வெளியீடுகள், பிரசுரங்கள், விற்பனையாகி பணம் நம் கைக்கு வந்து சேரும்? என்ற ஒரே சுயநல நோக்கமேயன்றி வேறென்றும் கிடையாது. அவர்களது சுயநல வேட்டைக்கு நம அறிவு, பணம், சிந்தனை, அத்தனையும் பாழாகவேண்டுமா? இதுவா நம் தலை எழுத்து? சிறிது சிந்தித்துப்பாருங்கள்! நம் மதியைச் சிதற அடிக்கும் அவர்கள் திருப்பணிக்கு, நம் கைப்பணம் காணிக்கையா?

இத்தகைய இழிநிலை—ஆபாச—அபத்த—பிரசுரங்களை எல்லாம் சர்க்கார் தலையிட்டு, தணிக்கை போர்டு நிறுவி வெளியிடு முன்னரே தடுத்து விட்டால் மிக நலமாக இருக்கும். அரசியலார் முனைந்து, ஆவன செய்யும் வரை நாம் வாழாவிருப்பதா? கூடாது. என் செய்தல் வேண்டும்?

உன்னத லட்சிய சமுதாயத்தை உருவாக்காத-நாட்டிற்கு நல்லதொரு இலக்கியத்தை வாரிவழங்காத-சிந்தனைச் சுழலிலே, உண்மைக் கருத்தை உருவாக்க இயலாத-மனித மனத்தை மன்பதையிலே மாண்புற வைக்கத் தகுதியற்ற போலி நூல்கள், வெளியிடுகளை எல்லாம் நம் காசைக்கொட்டி வாங்கி, கருத்தைப் பாழாக்கமாட்டோம்! என்ற வீர வைராக்கியம்,-மனே உறுதி, மாணவரிடையே, இளைஞரிடையே, முகிழ்தல் வேண்டும்; செயலாகப் பரிணமித்தல் வேண்டும்.

எத்தனை மாணவர் வாழ்வைப் பாழ்படுத்தி இருக்கிறது? எத்தனை இளைஞர் உள்ளத்தை 'சூன்ய' மாக்கியிருக்கிறது? எத்தனை பேருடைய குடும்ப ஒற்றுமைக்கு, உலை' வைத்திருக்கிறது? எண்ணத் தொலையா! எட்டில் அடங்கா!! இவைகளைப்பற்றி எல்லாம் நீங்கள் சிந்தித்தீர்களா? யோசித்தீர்களா? இளைவல்களே! மாணவர்களே! பெற்றோர்களே! முன்வந்து சிந்திக்கத் தயாராகுங்கள்.

'இளைதாக முள்மரங் கொல்க; களையுநர் கைகொல்லுங் காழ்த்த விடத்து' என்ற வள்ளுவன் வாக்கை நினைந்து பாருங்கள். உண்மை விளங்கும்.

ஏன் இன்று இளைஞர்களைப்பற்றி, மாணவர்கள் குறித்து இவ்வளவு கருத்து; சிந்தனை; என்கிறீர்களா! ஏன்? அவர்கள் தான் வருங்கால நவ இந்தியாவை-உருவாக்க-வாழ்விக்க-ஆளப்-போகின்றவர்கள். முஸோலினி என்ற கர்ம வீரன் இளைஞர்களைப்பற்றி என்ன கூறிச் சென்ருர்? "இளைஞர்களே! நீங்கள்தான் வாழ்வின் உதயம்; நாட்டின் நம்பிக்கை; நாளைய சேனு பலம்" என்று.

இத்தகைய எதிர்கால, உலகை ஆளும் சக்தி படைத்த இளைஞருலகம், இன்று எவ்வழியில் எத்திசைநோக்கிச் செல்கின்றது? என்பதை நாம் சிந்திப்பதோடு, அவர்களையும் சிந்திக்கத் தூண்ட வேண்டாமா? இளைஞர்களே! மாணவர்களே! சற்றே சிந்தியுங்கள்! வணக்கம்.

★

Koviloor Digital Library

ஒட்டு மாம்பழம்

ஞானகிகணபதி

* கலப்பிலே இன்பங்காண அவன் நினைத்தான். அதை அவன் குடும்பம் ஏற்கவில்லை. சாதியிலே சாத்திர, கோத்திரக் குப்பையிலே விழுந்தோர் விழித்துப் பார்த்தனர். அவன் வாழ்வின் பாதையிலே தொல்லை. கை கொடுப்பது தாய்மை. இதை விளக்கும் ஓர் வினோதம்.

"எதற்கு வீடு அதிரக் கத்திண்டிருக்கேள்" என்று கேட்டுக்கொண்டே அங்கு வந்தாள் விசாலாக்ஷி அம்மாள்.

"கேட்க வந்துட்டியே.............உன் பிள்ளை அழகை நீயே அவன்கிட்டே கேளு,, என்று சீறி விழுந்தார் மகாதேவ அய்யர்.

"ஆமாமா அவன் அழகுக்கு இப்போ என்ன குறைச்சலிப்போ. ராஜா மாதிரி இருக்கானே" என்றாள்.

"இந்த ராஜா நாளைக்கு ஒரு ராணியைப் பிடிச்சுண்டு வரப்போகிறான். அவளையும் கூடவைத்து வேணு அழகுபாரு. நன்னா இருக்கும்."

"அப்படி என்ன செய்துவிட்டான். விபரமாகத்தான் சொல்லுங்களேன்.

"உனக்கு வயதாகிவிட்டதோ இல்லையோ அதுனாலே உனக்கு ஒத்தாசைக்குப் பிள்ளையாண்டான் மாட்டுப் பெண்ணை அழைச்சிண்டு வரப்போகிறான். நமக்கு வரன் தேடுகிற சிரமமும் இல்லையே" என்று உரக்கக் கத்திவிட்டு வெளியே போய்விட்டார்.

எதிரே நின்றுகொண்டிருந்த கிருஷ்ணமூர்த்தியை ஏறிட்டுப்பார்த்தாள விசாலாக்ஷி அம்மாள். குற்றம் செய்துவிட்டு தண்டனையை எதிர்பார்க்கும் குற்றவாளி போல் தலையைக் கவிழ்ந்துகொண்டு நின்றான். அவன் கண்ணீர் நிர்மலக்கிக் கட்டி நின்றது.

விஷயம் என்னவென்று விளங்காத விசாலாக்ஷி அம்மாள் "என்னடா அம்பி என்ன விஷயம்" என்று கேட்டாள்.

அப்பாவிடம் சொன்னதும் இத்தனைக் கோபத்துக்கு ஆளானவன், அம்மாவிடம் சொன்னால் எங்கே அவனுக்கு அநுசரணையாகப் பதில் கிடைக்குமென்று எண்ணினாலும் எப்படியும் அவனால் விஷயத்தைச் சொல்லாமலிருக்க முடியவில்லை.

கிருஷ்ணமூர்த்தியுடன் காலேஜில் படிப்பவள் மாலதி. அவள் ஒரு வடக்கத்தியப் பெண். தாய் தந்தையர்களைச் சில வருஷங்களுக்கு முன்னால் வகுப்புக் கலவரத்தில் பறிகொடுத்தவள். அகதிப் பெண்ணாகச் சென்னையை அடைந்த அவள், இப்பொழுது இரண்டு வருடங்களாக அரசாங்கத்தின் உதவியில் படித்துக்கொண்டிருந்தாள்.

அகதிப் பெண் என்ற ஒரே காரணத்துக்காகவே அவளிடம் இரக்கம் கொண்டு அவ்வப்பொழுது ஏதாவது உதவி செய்யும், பொருட்டு அவளிடம் பழகிவந்தான் கிருஷ்ணசாமி. ஆனால் நாளடைவில் அவர்களது சிநேகிதம் அணையாத அன்பாக மாறிற்று. இருவரும் ஒருவரையொருவர் விரும்பினர். படிப்பு முடிந்ததும் அவளையே மணம் செய்துகொள்வதாக வாக்குறுதி செய்து கொடுத்துவிட்டான்.

இந்தக் கதையைக் கேட்ட அவன் தாய் இடிவிழுந்தவள்போல் உட்கார்ந்திருந்தாள். 'என்னடா இப்படிச் செய்தே. அனாதைதானேடா. இந்தச் சீமையிலே கிடைக்காத பெண்ணாடா உனக்கு? முன்னப்பின்னே எங்களுக்கெல்லாம் தெரியாமல், குலம் கோத்திரம் ஒன்றுமில்லாமல், ஒரு பெண்ணைக் கல்யாணம் செய்து வைக்க இதென்ன வேடிக்கையா விளையாட்டா? மரமா? செடியா? ஒண்ணோடு ஒண்ணு சேர்த்து ஒட்டுப்போடுவதற்கு.

ஆயிரம் காலத்துப் பயிர். ஆலோசியாமல் செய்துவிட்டாய்? நீ சொல்கிற விஷயம் நன்னாவேயில்லை. பேசாமே அவளே மரம்

துடு. நான் கொண்டுவருகிறேன் இனி மாதிரி பெண். என்று மகனிடம் சொல்லி சமாதானப்படுத்த முயன்றாள்.

கிருஷ்ண மூர்த்தியின் மனதில் எண்ணங்கள் அலையலையாக வந்துகொண்டிருந்தது. மாலதியும்; அவளுக்குக் கொடுத்த வாக்கும், தாயும் அவள் பாசமும் மாறி மாறி போராடிக்கொண்டிருந்தது. தான் கட்டியிருந்த மனக்கோட்டைகளெல்லாம் இடிந்து சரிவதுபோலத் தோன்றியது காதலும், பெற்றோர்க்குத் தான் கீழ்ப்படிந்து நடக்கவேண்டிய கடமையும், ஒன்றையொன்று போட்டியிட்டன.

முடிவாக மாலதியை மறக்கவோ, அவளைப் பிரிந்து வாழவோ அவன் மனம் இடங்கொடுக்கவில்லை. அதன் முடிவு அன்றிரவே ஒருவரிடமும் சொல்லிக்கொள்ளாமல் வீட்டை விட்டு ஓடி பட்டணம் போய் விட்டான்.

பிள்ளை வீட்டை விட்டுப் போனதிலிருந்து விசாலாக்ஷி அம்மாள் ஊணும், உறக்கமும் இன்றி அரை உடம்பாகி விட்டாள். "மலைபோல பிள்ளையை என்ன மாயமோ செய்து மயக்கிவிட்டாளே" என்று உயிருடன் பிள்ளையைப் பறிகொடுத்து விட்டதாகத் தவித்துக்கொண்டிருந்தாள்.

மகாதேவ அய்யருக்கும் மகன் செய்கையில் வருத்தமிருந்தாலும், தன் சொற்களை கேளாத பிள்ளை இருந்தென்ன போயென்ன என்று இருந்துவிட்டார். அவனைத்தேடித் திரும்ப அழைத்துத் தனது குடும்ப கௌரவத்திற்கு இழுக்கு ஏற்படுத்திக் கொள்ள விரும்ப வில்லை.

மெள்ள மெள்ள இரண்டு வருடங்கள் ஓடிவிட்டன. மகாதேவ அய்யருக்கு தற்போது மகனைப்பற்றிய எண்ணம் அனேகமாக மறந்துவிடும் தருவாயிலிருந்தது.

இந்த சமயத்தில் ஒருநாள் "திருடு போன பொருள் திரும்பக் கிடைப்பது போன்ற தகவல் கிடைத்தது அய்யருக்கு. தன் மகன் இப்போது திருச்சியில் இருப்பதாகவும், அவன் மனைவி நிறைமாத கர்ப்பிணியாக இருப்பதாகவும் கேள்விப்பட்டார்.

தன் மனைவியிடம் அவர் இதைச் சொன்னபோது விசாலாக்ஷி அம்மாளுக்குக் கையும் காலும் நிலைகொள்ளாமல் தடுமாறிற்று. மறந்துபோன விஷயங்கள் மறுபடியும் மனதிலே முளைத்தெழுந்தன.

பிள்ளைப் பாசம் அவளைச் சும்மா விடவில்லை. "பூர்ண கர்ப்பிணியுடன் ஒருவர் உதவி இல்லாது கஷ்டப்பட்டுக்கொண்டு மகன் காலம் கழிப்பதும், பிறக்க விருக்கும் தன் பேரக்குழந்தையை அணைப்பார் யாருமில்லாது அநாதையாகக் கிடக்கப்போவதையும் நினைத்ததும் அவள் பெற்ற மனம் நெகிழ்ந்துவிட்டது.

பேரனது பொக்கைவாய்ச் சிரிப்பிலே பேரானந்தம் காண மனம் துடித்தது,

"என்ன இன்னும் சும்ம இருக்கேள் போனது போகட்டும். எனக்கு இப்போ அவளைப் பார்க்கவேணும் போலிருக்கு பாவம், நிறைமாத கர்ப்பிணியுடன் என்ன பண்ணிக் கொண்டிருக்கிறானோ? என் மனசை என்னவோ செய்கிறது. இன்னிக்கு இராத்திரி வண்டிக்குப் புறப்படுவோம்" என்று கணவனிடம் கண்ணீர் விட்டுக்கொண்டே சொன்னாள்.

அய்யருடைய மனதும் இந்தச் சமயத்தில் இதே சூழ்நிலையில்தான் இருந்தது. ஜாதி, மதம், ஆசாரம், அந்தஸ்தெல்லாம் இமைப் பொழுதில் மறந்து, ஒட்டுச் செடியிலே உயர்ந்ததொரு கனி தோன்றப்போவதை நினைத்து அவர் உள்ளம் பூரித்துக்கொண்டிருந்தது.

அன்றிரவே இருவரும் திருச்சிக்குப் புறப்பட்டு மகனிடம்போய்ச் சேர்ந்துவிட்டார்கள். பிரிந்தவர்கள் மறுபடியும் இணைந்து விட்டார்கள்.

இப்பொழுதெல்லாம், "அடி கட்டிச் சமத்தே, ஒட்டுமாம்பழமே" என்று தன் பேரனிடம் கொஞ்சிக்கொண்டிருக்கிறார்கள் விசாலாக்ஷி அம்மாளும், மகாதேவ அய்யரும்.

★

Koviloor Digital Library

நாடகம் :

தமிழ் நீதிமன்றம்

வித்துவான் தி. பி. சுந்தரமூர்த்தி

[நீதிமன்றத்தின் கூண்டிலே நேர்மை தவறியவர் மூவர். ஆசிரியரின் அபார மான சிந்தனையிலே அவதரித்த அருந் தமிழ் நாடகம்] ஆ-ர்.

நாடக உறுப்பினர் :-

நடுவர் (நீதிபதி) — திருவள்ளுவர்

வழக்குரைஞர் — நக்கீரர், தமிழவேள் கம்பர்

காவற்காரன் — வீரணன்

குற்றவாளிகள் — மகாதேவக்கவி
என். கே. சாமி
இராமசாமி

இடம் :- நீதி மன்றம்

நடுவர் அமர்ந்திருக்க இருமருங்கிலும் வழக் குரைஞர் உட்கார்ந்திருக்கின்றனர். காவற் காரன் நிற்கிறான்.

1

நடுவர்:- அன்பர்களே! செந்தமிழ்த் தாய் நாட்டிலே, நம் தமிழ்மொழியை இன்று பலர் பலவாறு சித்திரவதை செய்து வருவ தாகக் குற்றம் சாட்டப்பட்டிருக்கின்றனர். அவர்களை இப்பொழுது விசாரித்துத் தக்க தண்டனை விதிப்பது எனது கடமை யாக இருக்கிறது. என் தாய்மொழி தமிழ் என்ற காரணத்தால் அதற்காகப் பரிந்து நடு நிலைமையான நீதி வழங்குவதிலிருந்து தவறிவிட மாட்டேன் என்று உங்களுக்கு உறுதி கூறுகிறேன். இனி விசாரணை தொடங்கலாம். தமிழ் வீரம் நிறைந்த நக் கீரரே! குற்றவாளியை அழைத்து விசாரி யுங்கள்.

நக்கீரர்:- மகாதேவக்கவி.

வீரணன்:- மகாதேவக்கவி.........மகா தேவக்கவி..........மகாதேவக்கவி (கவி வருகிறார்)

நக்கீரர்:- நீர்தானோ மகாதேவக்கவி ?

மகா:- ஆம். நான்தான் வரகவி மகா தேவக்கவி.

நக்:- உமது தற்காலத் தொழில் ?

மகா:- தமிழ்ப் பேசும் படங்களுக்குப் பாட்டுகள் எழுதிக்கொடுப்பது எனது தற் கால வேலை.

நக்:- நீர் பாட்டிலக்கணம் பயின்ற துண்டா? எதுகை, மோனை, சீர், தளை முதலியவற்றில் கவனம் செலுத்துவ துண்டா?

மகா:. இல்லை. எனது சுய அனுபவத் தைக் கொண்டுதான் பாடல்கள் எழுது வது வழக்கம். டாக்கி முதலாளிகள் இந் துஸ்தானி மெட்டுகளில் அமைக்கும் பாட் டுக்களையே விரும்புகிறார்கள். ஆதலால் அம்மெட்டுக்களிலேயே நான் பாட்டுக் கட் டுவது வழக்கம். எதுகையாவது-மோக னையாவது-அதெல்லாம் யார் கண்டார்?

நக்:- நீர் எட்டடி உள்ள பாட்டை எழு தத் தொடங்கிப் பாதிப் பாட்டிலேயே அதை முடித்ததுண்டா ?

மகா:- சொல்லவேண்டிய விஷயம் பாதிப் பாட்டிலேயே முடிந்து விட்டபடி யால், பாதியிலேயே முடித்து விட்டேன். அவ்வளவுதான் அங்கு வேண்டிய பாட்டு. பாட்டு எப்படி இருந்தபோதிலும் எங்களைக் கேட்பார் இல்லை, நாங்கள் எழுதுவதெல் லாம் பாட்டுத்தான். இதில் என்ன குற்றம்?

நக்:- பெருமைமிக்க நடுவர் அவர்களே! பாட்டிலக்கணம் பயிலாது கண்டபடி பாடு வது மொழிக்குச் செய்யும் பெருந்தீங்கா கும். இப்படியே இது வளருமானால் பாடல் களின் பெருமையை மக்கள் அறியமுடி யாது போய்விடும். பொருளற்ற அடிகள் எல்லாம் பாடப்படுகின்றன. மக்களைத் தெட்டுவதற்கு அறிவில்லாக் கவிகள் தோன்றிவிட்டனர். தண்டிக்கத் தமிழ்ச் சான்றோர் இல்லை என்ற எண்ணம் சிலர் பால் வளர்ந்து வருகிறது. 'தமிழ்ப்பற்று மிக்க எம்போன்ற வழக்குரைஞர்களும் தமிழ்நாட்டில் இருக்கின்றனர் என்பதைப் பொருளற்ற பாடல்கள் தீட்டும் கவிகள்

Koviloor Digital Library

மறந்துவிட்டனர் போலும். இக்காலம் மேலும் நீடிக்காது விடக்கூடாது. எனவே, மகாதேவக் கவிக்குத் தக்க தண்டனை அளிப்பது தங்கள் கடமை என்பதை நினைவு படுத்துகிறேன்.

நடுவர் தீர்ப்பு:- மகாதேவக்கவி! நீர் யாப்பிலக்கணத்திலும், பொருளமைப்புத் திறமையிலும் தேர்ச்சி பெறும் வரையில், உமது பாடல்களை ஏற்றுக்கொள்ள எந்தப் பட முதலாளியும் முன்வரக்கூடாது எனத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது. செல்லலாம்.

2

நடுவர்:- தமிழவேள் அவர்களே! இரண்டாவது குற்றவாளியை அழைத்து விசாரியுங்கள்.

தமிழவேள்:- என். கே. சாமி;

வீரணன்:- என். கே. சாமி;......என். கே. சாமி......என். கே. சாமி;......(சாமி வருதல்)

த-வே:- நீர்தானே என். கே. சாமி.

என்-கே-சாமி:- ஆம்.

த-வே:- உமது முழுப்பெயரென்ன?

சாமி:- நா. கிருஷ்ணசாமி.

த-வே:- கண்ணனது அழகிய பெயரை வெட்டிச் சுருக்கி வைத்துககொள்ள நீர் யாரிடம் உத்தரவு பெற்றீர்?

சாமி:- என்னுடைய 'நேமை' என் இஷ்டப்படி வைத்துக்கொள்ள எனக்கு 'லிபர்ட்டி' இல்லையா என்ன?

த-வே:- இருக்கட்டும்! தெள்ளுற்ற தமிழுநிலே பிற மொழிகளைக் கலந்து செந்தமிழின் இனிமையைக் கொலை செய்ததாக நீர் குற்றம் சாட்டபபட்டிருக்கிறீர். இக்கொடிய குற்றததைச் செய்ய நீர் மனந் துணிந்த காரணம் என்ன?

சாமி:- நான் 'டமிலை மர்டர்' பண்ணினவன்? நோ, நோ, இது சுத்த ஹம்பக். எனக்கு மதர் லாங்வேஜில் சாஸ்தி 'ரிகார்டு' உண்டு. எங்கள் 'காலேஜ் ஸ்டுடன்ஸ்' களுக்குள் 'டமிள் பிராக்டிசை இன்க்ரீஸ்' பண்றத்துக்காக 'டமிலியன் சொஸைட்டி' ஒண்ணு 'ஸ்டாட்' பண்ணி இருக்கிறோம். அதற்கு நான்தான் 'செகரட்டரி' ஒரு 'லாங்வேஜிலே' 'பாரின் லாங்க்வேஜ் வேர்ட்ஸ்' வந்து மிக்ஸ் ஆக ஆக அதன் வேல்யூ இன்க்ரீஸ் ஆகுமே தவிர எந்தவிதத்திலும் மட்டு ஆகாது. அந்தக் காலத்து 'டிசென்சி'க்குத் தகுந்தபடி நேஷன் லாங்க்வேஜையும் சேஞ்ச் பண்ணிக்கவேண்டியது தான் இம்பார்ட்டெண்டாகும். இது என் ஐடியா.

த-வே:- சிறப்புமிக்க நடுவர் அவர்களே! குற்றவாளியின் ஆங்கிலத் தமிழ் வாக்கு மூலத்தைக் கேட்டீர்களா? இப்படியே ஒவ்வொருவரும் பேசிக்கொண்டும், தம் பெயரைச் சுருக்கி வைத்துக்கொண்டும்போனால் மொழி கெடுவதோடல்லாமல் பெயர்களும் கெட்டுவிடும். சீமைக்குச் சென்ற செங்கல்வராயன் சி. கே. ராயனாகத் திரும்பிவந்தானும். நடராசன் என்ற பெயரை என். ஆர். சன் ஆக மாற்றிவிடுகின்றனர். இப்படியே விட்டுவிட்டால் அழகிய தமிழ்ப் பெயர்கள் கெட்டுவிடும். இதற்குத் தக்க நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும், பழந் தமிழ்ப் பெயர்கள் மக்களுக்கு சூட்டப்பட வேண்டும். எனவே பெயரைச் சிதைத்து வைத்துக்கொண்ட நா. கிருஷ்ணசாமி குற்றவாளியாகிறார். தக்க தண்டனை அளிப்பது தங்கள் கடமை என்பதைத் தெரியப்படுத்துகிறேன்.

நடுவர் தீர்ப்பு:- கிருஷ்ணசாமி! இன்று முதல் உன் பெயரைச் சுருக்கி எழுதவோ சொல்லவோ கூடாது. பிறமொழி மோகம் தீர்ந்து செந்தமிழ்ப் பற்று ஏற்படும்வரை உமக்கு எங்கும் எவ்வித வேலையும் கிடைக்காதபடி உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. போகலாம்.

3

நடுவர்:- கம்பரே! மூன்றாவது குற்றவாளியை அழைத்து விசாரியுங்கள்.

கம்பர்:- இராமசாமி.

வீரணன்:- இராமசாமி......இராமசாமி இராமசாமி. (இராமசாமி வந்து நிற்கிறார்)

Koviloor Digital Library

கம்பர்:- உமது பெயர் இராமசாமி தானே!

இராமசாமி:- ஆமாம். கம்பராமாயணப் பிரசங்கி அட்டாவதான-மகாவித்துவான் 'இராமசாமி என்று அடியேனை அழைப்பது வழக்கம்.

கம்பர்:- (சிரித்து) இருக்கட்டும். நீர் எவ்வளவு காலமாக இராமாயணப் பிரசங்கம் நடத்தி வருகிறீர்? ஆசிரியரிடம் எவ்வளவு காலம் பாடம் கேட்டிருக்கிறீர்?

இராமசாமி:- 30 வருடங்களாக இராமாயணப் பிரசங்கங்கள் நடத்திவந்திருக்கிறேன். ஆசிரியரிடம் பாடங்கேட்டது 2 வருடங்கள்தான். ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியின் அநுக்கிரகத்தால் ஒரு பிரசங்கி தெரிந்துகொள்ள வேண்டிய எல்லாம் தெரிந்துகொண்டு விட்டேன். அப் பிரபுவின் அருளால் கிடைத்த வாக்கு சாதுர்யத்தாலும், பாண்டித்தியத்தாலும் பண்டிதர் முதல் பாமரர்வரை எல்லோரும் மெச்சும்படி பிரசங்கம் செய்யும் சக்தியைப் பெற்று விட்டேன்.

கம்பர்:- இராமபிரான் உமது கனவில் தோன்றி காட்சி அளித்தாரா? உண்மையை மறைக்காமல் கூறும்.

இராமசாமி:- இல்லை. இல்லை. அப்படி ஒன்றுமில்லை.

கம்பர்:- 'அரன் அதிகன் உலகளந்த அரி அதிகன் என்றுரைக்கும் அறிவிலார்க்குப் பரகதி சென்றடை வரிய பரிசே போல்" என்னும் கம்பராமாயணப் பாட்டின் அடிகளுக்கு நீர் கருத்து மாறுபட்டு அரியும் சிவனும் ஒன்று என்பதை அறியாமல் பொருள் கூறுவதும், இப்படியே பல பாட்டுக்களுக்கும் மாறுபாடான பொருள் கூறிவருவதும் உம்மீதுள்ள குற்றச்சாட்டு. என்ன பதில் கூறுகிறீர்?

இராமசாமி:- எனது சுயகற்பனை சக்தியினாலேயே அவ்வளவு பொருள்களையும் நானாகவே கண்டு பிடித்தேன். இது குற்றமா?

கம்பர்:- பெருமை மிக்க நடுவர் அவர்களே! இவர், ஆசிரியர் கருத்துக்கு மாறுபாடாகத் தமது மனம்போன வாறெல்லாம் பொருள்கூறி வருகிறார், சொற்களைப் பிரித்து, சிதைத்து, இலக்கணத்திற்குப் பொருந்தாத பொருள்கூறி சித்திரவதை செய்து வருவது கொடிய குற்றமாகும். இதனால் சமயச் சண்டையை வளர்க்கிறார். ஒற்றுமைக்குப் பங்கம் விளைவிக்கிறார். சில வேளைகளில் மக்களுக்குத் தொண்டு செய்யும் அடியார்களையும், தொண்டர்களையும் ஏளனமாகப் பேசுகிறார். கம்பர் பாடிய பாடல்கள் சிலவற்றை அவர் பாடல்கள் அல்ல என்றும் கூறுகிறார். இவற்றை நன்கு அறிந்து, தக்க தண்டனை அளிப்பது தங்கள் கடமை என்பதை நினைவூட்டுகிறேன்.

நடுவர்:- இராமசாமி! நீர் ஒரு அறிவாளி. வயிற்றுப் பிழைப்பிற்காகத் தமிழ்க் கொலை செய்வது கேவலம். நீர் உண்மைப் பொருளுக்கு மாறுபாடாக, மனம் போனவாறு கம்பர் பாக்களுக்குப் பொருள் கூறி வருவது மன்னிக்க முடியாத குற்றமாகும். ஒழுங்கான முறையில் திருந்திக்கொள்ளும் வரை, நீர் எங்கும் பிரசங்கம் செய்யக் கூடாது என தடை உத்தரவு பிறப்பித்து இருக்கிறேன். போகலாம். (மன்றம் கலைகிறது)

*

சுற்றத்தார்

உங்கள் சுற்றத்தாரிடம் அன்பாயிருங்கள். அவர் அறிவாளியாயின கண்ணியப் படுத்துங்கள். முட்டாளாகயிருந்தால் பொறுத்துத் திருத்துங்கள். ஏழையாயிருந்தால் உதவி செய்க. ஏனெனில் அவர் உங்கள் வாழ்வு தாழ்வுகளில் உறு துணையாயிருப்பர்.

—ஹஜ்ரத் அலி (ரலி)

Koviloor Digital Library

உள்ளமே பேசு

இராகோ

“அவன் கவிஞன். பாழாய்ப்போன சமூகத்தைப் பண்படுத்த எண்ணிய பண்பாளன். ...... ஆனால் அவனை உணரவில்லை உயர்ந்தவர்கள். வறுமையிலே வாடினான். வள்ளல்கள் உதவவில்லை. ஏழ்மையிலே ஏங்கினான். ஏற்றம்பெற்றவர்கள் எட்டிக்கூடப் பார்க்கவில்லை......... அவன் என்ன ஆனான்? அவன் உள்ளம் பேசுகிறது. உங்கள் உள்ளமும் பேசும்”. [ஆ-ர்]

அவனொரு காவியக் கலைஞன். கலையைக் கலைக்கண்கொண்டு காண்பதில் தனி இன்பத்தைதம் கண்டவன். ஓவியங்களைப் பார்த்து அவன் உள்ளம் தானே பேசும்! பண்டைய காவியங்களை உணர்ந்து, அறிவு எண்ணத்தோடு அலைமோதும். ஆலயங்களில் உள்ள சிற்பங்களைக் கூர்ந்து கற்பனை உலகில் வட்டமிடுவான். சுற்றுப்புற காட்சிகளில் சிந்தனையைச் செலுத்தி கலை மணத்தில் நீன்டாடுவான், ஏழ்மையில் சீறும் சாக்காட்டில்கூட, அவன் கலை உள்ளம் கொக்கரிக்கும். ஆம்! அவனிருப்பதும் தரித்திர நாராயணன் திருக்கோலத்தில்தானே? வசிப்பது பாழடைந்த வீட்டில்! பின்பேன் இந்த சபலம்?

நாள் தவறினாலும், பட்டினிகிடக்கும் பட்டியல் தவறாமல் அன்றும் அந்த பாழ் அடைந்த வீட்டில் குமுறிக்கொண்டிருக்கும் அவன் உள்ளத்தோடுதான் பேசிக்கொண்டிருந்தான்! “கவிஞனே! புழுதிக் காட்டில் இன்பமாகப் படுத்திருக்கின்றாயே, அந்த இடத்தைப் பார்!

சுற்றிலும் இருள்!! அதேதருணம் உன் இதயத்தைப் பார்! அங்கும் இருள்!! இந்த இருளுக்கிடையில் நீ, எதைப்பற்றி பேசுவாய்? காலையிலிருந்து உன் சிந்தனை வடித்தெடுத்துக் கொடுத்த கற்பனைக் குவியல்களைக் கத்தைக் கத்தையாகச் சுமந்துகொண்டு, பேரம்பேச பட்டினத்தைச் சுற்றிச் சுற்றிக் கடைசியில் ஏமாற்றத்துடன் பசிக்குக் கூழாய்த் தண்ணீரைக் குடித்துவிட்டு, இருளடைந்த வீட்டில் இருண்ட மனத்தோடு நித்திரைபுரியவந்தாயே, அந்த சோகக்கதையை எண்ணி, எண்ணிப் பேசப்போகின்றாயா? இல்லை, ஏன் இந்த எழுத்துலகில் நினைவைப் பலியிட்டுக்கொண்டோமென்று தன்னை நொந்துகொள்ளப்போகின்றாயா? எந்த அத்தியாயத்தைத் தொடங்கப்போகின்றாய்? சொல்லப்பா!”

சொல்வதற்கென்ன? செல்வக்குடியில் பிறந்த ஒரு செல்வந்தன் குமாரன்தான் அவன். பிறந்த ஒரே ஆண்டில் தன்னைப் பெற்றெடுத்த தாயை, அமைதியான இடத்திற்கு அனுப்பிவிட்டு, வீட்டு வேலைக்காரியால்த்தான் வளர்க்கப்பட்டான். தந்தையோ வாலிப உணர்ச்சிக்கு அடிமையானவர். குடும்பத்திற்கு ஒரே பையன்கூட என்று பாராமல், சிற்றின்ப வைபவத்திலே சிந்தையைப் பரிகொடுத்து வாழ்ந்து நிற்பவர். தாயற்ற அவனோ, பாலப்பருவத்திலேயே வேலைக்காரியின் தர்பாரிலே அடங்கி, ஒடுங்கி காலந்தள்ள வேண்டிய நிலையாயிற்று. வருடங்களும் பல உருண்டன. தட்டிக் கேட்பதற்கு எவரும் இல்லாத காரணத்தால் தந்தை, இருந்த சொத்தையெல்லாம் இன்பத்திற்கே விருந்திட்டார். பிறகென்ன? வேலைக்காரிவசம் வளர்ந்த அவன், ஒரு வேலையாளின் எளிய நிலைக்கே வந்து சேர்ந்தான். காலத்தில் தந்தையை இழந்தான்! சுற்றம் தூரவிலகியது. கதியற்று, விதிக்கடிமையாகி வீதியிலே நின்றான். ஆனால், பள்ளி வாழ்க்கை முதல், உணர்வைப்பெற்று உலகத்தைக் கண்ணுறும் நாள்வரை, அவன் உள்ளத்தில் பேசிக்கொண்டிருந்ததோ கலைமணம். வாலிபத்தில் அவனுக்குக் கிடைத்த வெகுமதி! பின்பு கேட்பானேன்? தரித்திரக்கோணத்தில் கொந்தளிக்கும் எண்ணத்தையெல்லாம் ஒன்று திரட்டிக் காவியமாலையாகத் தொடுத்தான். ஆனால், பயனுண்டா? அதுதான் இல்லை! ஏன்? அவன் வாழ்வு செய்த தவறு.

கந்தைத் துணியும், கபோதிக்கோலமும், அவன் கவிதைகள் யார் பார்வைக்குச் சென்றாலும், செல்லரித்த மொழிகளாக மின்னிற்று ஆடம்பரத்திற்கே உரித்தான செல்வச் செருக்கு, அவன் பாக்களுக்கு அளித்த பட்டம் பைத்தியக்காரத்தனம். பிறகு நொந்து பயன் என்ன? இருளுக்

Koviloor Digital Library

குள்ளே சஞ்சரித்தான் அவன்! பசி, உடலை வாட்டியது. ஏதாகிலும் வேலை செய்யவும் திறமையில்லை. படுப்பதற்கு அந்த இருளடைந்த வீடு. எழுதி, எழுதி வைத்திருந்த கவிதைகளைப் படித்துப் படித்து அவனுக்குள்ளாகவே மகிழ்ச்சியடைவான். அதன் உபயோகமற்ற தன்மையை உணர்ந்து கண்ணீர் வடிப்பான். வெறுப்பும், வெறியும் சேர்ந்து அவனை, மக்களையும் உலகத்தையும் நிந்திக்கத் தூண்டும். ஆத்திரத்தால் கொடும் மொழிகளையே கவிதையாக்கிக் கொள்வான். தெளிவுற்றதும், அவன் ஆதி பயணம் மறுமுறையும் துவங்கும்! அலுப்பு, சலிப்பில்லாத அவன் பயணத்தில் முதல் சந்திப்பாக ஒரு செல்வந்தனைத்தேடி அடைவான். ஆவலோடு,

"ஐயா! வள்ளல் வழியோரே. நான் ஏழை. ஆனால், கவிஞன். இதோ பாருங்கள்! என் கவிதைகளை. வாழ்நாளில் பாதி நாளைச் செலவிட்டு, இந்த முத்துக் குவியலைச் சேகரிக்கப் பாடுபட்டிருக்கிறேன். இவைகளும் பயன் பெறவேண்டும். இவ் வேழையும் வாழவேண்டும் அதற்கு தங்கள் உதவி......" என்று மெள்ள இழுப்பான் உதவி என்ற வார்த்தைகளைக் கேட்டதுமே, அச்செல்வந்தன் முகத்தில் அசட்டைக் குறிகள் தான வடிவெடுத்து நிற்கும்.

'கவி, காவியமென்றாலே எனக்கு வெறுப்பு. யாராவது படித்தவர்களிடம் கொண்டுபோ. ஏதாவது பலன் கிடைக்கலாம்!" என்று கூறி அவனை அனுப்புவதிலேயே கண்ணும் கருத்துமாகயிருப்பார் அச் செல்வக் குடிமகன். அதற்குப் பிறகும் தன்மானம் உள்ள அவன் அங்கு நிற்பானு? அந்தப் பழைய தரித்திர நடையோட்டத்தில்தான் அவன்! இரண்டாவதாக அவன் முயற்சிக்கிடையே இடம்பெற்றவர் ஒரு அறை குறை படிப்பாளியே! அவரும், அவனுடைய கவிதைகளை, தன் புலமைத் திறமையெல்லாம் காட்டி நன்கு தான் ஆராய்ந்தார். ஆனால், "கவிதையில் ஓசை மிகக் குறைவு! ஒலி நயமே கிடையாது!! இலக்கணத்திற்கு முரண்பட்டல்லவா காண்கிறது. ம்.... இன்னும் நல்லா எழுதப்பா!" என்ற வார்த்தைகள்தான் அவன் கடைசியாக எதிர்பார்ப்பதாக இருக்கும். பின்பென்ன? பெரிதும் ஏமாற்றம்! ஐயோ! உணர்ச்சிவாய்ப்பட்ட அவன் கவிதைக்குக் குறைவா? அதிருப்தியே அதிகரிக்கும்! தன்னை நூறுமுறை நொந்துகொண்டே வெளியேறுவான். அறைகுறைப் பேர்வழியிடம் காணும் பொறுமைக் குணத்தை அவன் நல்லெண்ணம் எங்கே சிந்தித்துப் பார்க்கும்? இறுதியில், துணிவும் தெளிவும் அவனை நகரில் உள்ள ஒரு பத்திரிக்கை அலுவலகத்திற்குக் கூட்டிச் செல்லும். ஆனால், அங்குள்ள பேனாமுனை வீரரிடம் மற்றைய இருவரைக்காட்டிலும் அவன் கவிதைகள் மேன்மையைத்தான் அடையும்.

"கவிஞனே! கவலைப்படாதே. நிச்சயம் உன் கவிதைகள் என் பத்திரிக்கையின் தலைப் பத்தியில் மின்னும். ஆனால் கவிதைகளுக்காக 'பணம்' என்ற வார்த்தையை மட்டும் என்னிடம் உபயோகிக்காதே!" என்று ஆற்றல் குறையாது அள்ளி வீசுவார் அந்தப் பத்திரிக்கை விஷயதானப் புள்ளி!

ஆகா! முன்னவரால் தள்ளப்பட்ட அவன் கவிதைகளுக்கு ஆதரவா? அடடே என்ன உலகமடா! இழந்த தெம்புக்கு மீண்டும் வாய்ப்பு!! ஆனந்தத்தில் தன்னையே மறந்து நிற்பான். ஆனால், மற்றொரு பாகத்தில், அவனைக் கருக்கும் பசி. கவிஞருக்கே ஏற்ற தரித்திரக்கோலம் படை எடுத்து நிற்கும். கவிதை பத்திரிக்கையில் வந்தால் போதுமா? பசியைத் தீர்க்க வேறுவழி! கவிதையைக் கொண்டு தானே வாழவேண்டும? கணத்திற்குள் அவன் ஆனந்தம் அறிந்துவிடும. கவிதையைப்பெற நினைக்கும் ஆசிரியருக்கோ அவன் கூறும் நன்றி, பத்திரிக்கையாளர் எதிர்பார்ப்பது 'வீண், என்று அறிவுருத்தும்! அவனே பழைய பல்லவிக் கர்த்தாவேதான்! இதற்குள் அன்றைய பகலவனும் மேற்கின் அடித்தளத்தில் மறைகின்றவனாகவேயிருப்பான். நடைபாதையில் அலைமோதும் அதிருப்திக்கு, அவன் சமாதான விளக்கம் கூறிக்கொண்டே அந்த இருளடைந்த வீட்டிற்கு வந்து சேருவான்! ஏழைகளின் சொந்தமான அந்த பூமியிலே இரவெல்லாம் கண்விழிக்கும் அவன் உள்ளம், அன்று நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றி ஓயாது பேசும்! தன்னை மறக்கும் வரை பேசிப் பேசிக் குமுறுவான்.

இவ்வாறே ஒவ்வொரு நாளும் அவன் வாழ்க்கையில், நகரில் மாறிமாறிச் சாரும் செல்வந்தர்களையும், அறை குறைகளையும், பத்திரிக்கையாளர்களையும் எண்ணி அவன் உள்ளம், சொல்லிச் சொல்லி அழுவதைக் கேட்பதற்கு அந்த இருண்ட வீட்டைத் தவிர, அன்று வேறு யாரும் இருந்ததாகத் தோன்றவில்லை. இடையில், நாட்களும் ஒன்றன்பின் ஒன்றாக உருண்டன. "உயர்ந்த கவிதைகளைப் படைத்த மேதை யாரும், அவன் நடைபாதையில் விற்கப்படும் வேர்க் கடலையை வாங்கி உண்டு காலந்தள்ளுபவனாகத்தான் இருப்பான்!" என்று மேல்நாட்டு அறிஞன் ஒருவன் கூறிய கூற்றுக்கு துளியும் அவனிடம் மாறுதலைக் காணோம். மேலும் இரவு, பகல் கண்விழித்து அலைந்து, அலைந்து பட்ட துன்பத்தில் உடலுக்குள்ளே பற்றிய ஒருவித வியாதிதான், அதுவரை அவன் முயற்சிக்குக் கிடைத்த வெகுமதி!

இந்நிலையில், அன்றும் வழக்கம்போல் ஒருபிரபல பத்திரிக்கை காரியாலயத்திலிருந்துதான் வெளியேறிக்கொண்டிருந்தான். ஆனால் எப்பொழுதும் அவன் முகத்தில் தென்படும் களையில் மாற்றம், விகாரமிட்டிருந்தது. நடையில் மிகவும் தளர்வு. விழிகள் ஒருவித அவநம்பிக்கையைப் படம்பிடித்துக் காட்டிற்று. உணர்ச்சியின் நரம்புகளில் நாதக் குலைவு பொங்கிக் கொண்டிருந்தன. வழக்கப்பிரகாரம் அடிக்கும் குழாய்த் தண்ணீரைக்கூட இலட்சியப் படுத்தவில்லையவன். நேராக அவனுக்குரிய இடத்திற்கு வந்துசேர்ந்தான். அவன் கையிலிருந்த கவிதைக் கட்டுக்கள் அந்த இருளடைந்த வீட்டின் மூலையை நோக்கிப் பறந்தன. அரை இருட்டி கனத்தில் தூசி படிந்திருக்கும் அந்த வீட்டின் திண்ணையில், அவன் உடல் மரத்துப்போன உணர்ச்சியோடு கீழே சாய்ந்தது. சற்று நேரத்திற்குள், அங்கு கவ்விக்கொண்டிருக்கும் இருளுக்கிடையில், கக்...கக் என்று இருமலும், முனக்கமும் அவனை விட்டு வெளியேறின.

"ஐயோ கவிஞனே! ஏன் இன்று உன் உள்ளம் பேசவில்லை? கொடிய சோதனைக் கிரையாகிவிட்டாயா? ஏன் அவ்வாறு ஆனாய்? எங்கே அதைக் கொஞ்சம் சொல்லு! சொல்லு!!" என்று மனசாட்சி அவனை மீறிக்கொண்டு வெளியேவர நினைக்கின்றது. ஆனால் மறுபடியும் கக்...க்க் என்ற இருமல்! முனக்கம்!! விரிச்சோடிக் கிடக்கும் வானத்தைப் பார்த்து செயலற்று படுத்திருக்கும் அவன் உள்ளத்திலிருந்து கிளையோடிய ஒரு பெருமூச்சு, பேச மறுக்கும் மன அதிர்ச்சியை வெளிப்படுத்துகின்றது. ஆம்! அவன் உள்ளத்தில் பெருங் குறை. அல்லும், பகலும் அவனை விட்டு விலகாதிருந்த உறுதி குன்றிவிட்டது. ஏன் இந்த அவலநிலை? இனி அவன் உள்ளம் பேசாதா? எங்கே பேசும்?

இன்று காலையும் பட்டிணத்தைச்சுற்றத்தான் புறப்பட்டான். அங்கே கடைசியாக வெளியேறிய அப்பிரபல பத்திரிக்கையின் வாயற்படிதான் அவன் வழக்கமாகத் திரும்பும் மாலைப் பட்டியலில் ஒன்று. கையிலிருந்த கவிதைக் கட்டுகளுடன் அப் பத்திரிக்கையாசிரியரை நேரில் காண, எவ்வளவோ முயற்சித்து மிகுதியில் ஓரளவு வெற்றியைக் கண்டான்.

ஆனால், தயங்கித் தயங்கிக்கொண்டே ஆசிரியரின் அறைக்கு சமீபம் வந்தானோ என்னமோ, அன்று, அவன் கவிதைகளை உப்பில்லா பண்டமென்று மதிப்பிட்ட அந்த அரைகுறை படிப்பாளியேதான், ஆசிரியர்முன் ஆயிரத்தெட்டு முகக் கோணத்தோடு அசடுதிரள நின்றுகொண்டிருந்தார் சுக்கல், சுக்கலாய்க் கிழித்துப் போட்டிருக்கும் காகிதத் துண்டுகளுக்கிடையில், குப்பைமேட்டு ராஜாவாகக் காட்சி அளிக்கும் ஆசிரியரின் முகத்தில் கோபச் சுழிகள் கொடிகட்டிருந்தன.

"ஐயா கவிஞரே! எனக்கு வேறு பட்டாதாரி, படிப்பாளி, பணக்காரர் கிடைக்க மாட்டார்களென்று இவ்விதம் தடுமாறுமாறும் எழுதினீரய்யா? இதோ பாரும்! போனவாரப் பத்திரிக்கையில் நீர் எழுதியிருக்கும் கவிதைகளில் உள்ள குற்றங்களைக்கூறி வேயர்களின் கடிதங்களை!" என்று ஒரு கத்தைக் கார்டு கட்டை அந்த பட்டாதாரி முன் வீசிய ஆசிரியர், கர்ண கடூர பரம்பரையில் அவரும் ஒருவராக நின்றார்.

இதென்ன விபரீதம்! பட்டாதாரிகளும், ஆடம்பரக்காரர்களும், அரைகுறைகளும் எழுதுவதைத்தான் பத்திரிக்கையாளர்

Koviloor Digital Library

கள் ஆதரிக்கின்றார்களா? அவனைப் போன்ற ஏழைக் கவிஞன் எழுதுவதை ஒப்புக்கொள்ளாத அந்தச் சமூகம்? பணத்திற்கா அங்கும் மதிப்பு? ஏழைக்கு அதில் இடமில்லையா? ஆம்! அவன் உள்ளம், பல ஏமாற்றங்களுக்கிடையில் பேசிப், பேசி கட்டியிருந்த ஆசை மாளிகை, அப்படியே நொருங்கிவிடுகிறது. நம்பிக்கையில் ஏமாற்றம்! இனி, ஆசிரியரைப் பார்க்க அவனுக்குத் துணிவேது? அதற்குமேல், அந்த பாழடைந்த வீட்டில்தான் அவன! திரும்பவும் கக்.........கக் என்ற இருமல்! முனக்கத்திலே மெலிவு!! உள்ளத்தை பேசவிட நினைக்கின்றான். பேதமை ஊடுருவுகின்றது. சமாளிக்க அவனுக்கு சக்தியில்லை. கால முட்கள் விறைகின்றன! அவன் குரலில் மேலிடம் சப்தம் குறைகின்றது. ஆம்!

சோதனைக்கு அவன் பிணம்! அல்ல! எம். ஏ; பி. ஏ. பட்டாதாரிகளுக்கும், செல்வந்தர்களுக்கும் சுவரொட்டி விளம்பரமாகக் காட்சி அளிக்கும் ஒரு சில பத்திரிக்கைகளின் சுயநலத்திற்கு அந்த இருளடைந்த வீட்டில், கண்ணீர்விடுவார் அற்றுக்கிடக்கும் அனாதைப் பிரேதமான அவ்வேழையே சாட்சி!

ஐயோ பாவம்! அவன் கதையைக்கேட்ட உள்ளந்தான் துடிக்கின்றது.

★



அன்புணர்ச்சி வளரவேண்டும்

திருப்பெருந்திரு குன்றக்குடி அடிகளார்

இந்த நாட்டிலே இன்பத்தைக் காண வேண்டும் என்று விரும்புவோமானால், தமிழ்ச் சமுதாயம் மீண்டும் ஒருமுறை பழங்காலத்தைப்போல வாழவேண்டும் என்று எண்ணினால், அவர்கள் சென்ற நெறியெல்லாம் நம் செல்லவேண்டும். ஆனால் வீரத்திலே சிறந்த தமிழ் மன்னன கட்டிய கோயிலை இடிக்க வேண்டுமென்று சொல்லுகின்றோம். இன்று இப்படி வாழ்கின்ற தமிழன, கங்கையையும் கடாரத்தையும கொணட மன்னன் கட்டி வைத்த கோயிலை வேங்கடத்திற்கு இப்பால் விரட்டப்படுகின்ற தமிழன் வேண்டாமென்று சொல்லுகின்றான். அம்மன்னவர்களைவிட நாம் வீரத்தில் சிறந்தவர்களா? கல்வியறிவில் சிறந்தவர்களா? வள்ளுவரைவிட ஒப்பற்ற இலக்கியம் ஆக்கித்தந்த பேராசிரியர் இந்தஉலகத்திலில்லை. எதையும் அறிவு என்று மாத்திரம் பார்ப்பது தமிழகத்தில் ஒரு காலத்தில் நிகழ்ந்தது. அறிவு வேண்டுவதுதான். ஆனால் வெற்று அறிவு எதையும் சீர்தூக்கிப் பார்த்து விடாது. அந்த அறிவோடு அன்புணர்ச்சி கலக்க வேணடும். அப்பொழுதுதான் நல்ல பயன்விளையும். வெறும் அறிவாக இருக்குமானல் தமிழ்ப் பெருமக்களுடைய பல செயல்கள் இன்று வேண்டாதவவாகி விடும். எனவே எதையும் வெறும் அறிவோடு சிந்தனை செய்யாமல் அன்புணர்ச்சியொடும் சிந்திக்க வேண்டும்.

Koviloor Digital Library

★ தமிழ்நாடு அதில் தமிழரசு வேண்டும். தமிழ்த் தாய் நடனமிட வேண்டும். அதுமட்டும் போதுமா? தமிழரசு பலம் பெற வேண்டுவது எது? .... படியுங்கள் தெரியும். [ஆ-ர்.]

தமிழரசில் அருள்நெறி

அ. ரா. அழகர்சாமி

வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகத்தை முடி தாழா மன்னர் மூவர் ஆண்டுவந்தனர். இமயம் வரை தன்னாற்றல் காட்டி வெற்றி பெற்று தன் மானம் ஓங்க, தமிழர் இதயம் மகிழ்வடைய உலகமே புகழும் உயர்வரையாம் இமையமலைமேல் தன் வெற்றிக் கொடியை நாட்டி தமிழுலகுள்ளவரை வெற்றியின் விளக்கொளி விளங்கிடச் செய்த இமய வரம்பன் நெடுஞ்சேரலாதனும், அவன்தன் வீரப் புதல்வன அறிவின் ஒளியாம் வற்றாச் செல்வமெனும் "சிலப்பதிகாரத்தை" தமிழன்னைக்கு சூட்டிய "இளங்கோவடிகளும்", அவன்தன் ஆருயிர் தமையனும் "சேரன் செங்குட்டுவன்" தமிழ் மன்னரை இகழ்ந்து கூறிய வடநாட்டு மன்னரான கனகவிசயரை போரில் புறங்கண்டு அவர்கள் முடித்தலைமேல் தமிழர்தம் கற்பின் தெய்வமான "கண்ணகி"யின் சிலையை ஏற்றி தமிழ்நாட்டில் கொணர்ந்த பெருஞ் சிறப்பும், மன்னுயிரைத் தன்னுயிர்போல் போற்றுவதே மனுநீதி என உணர்ந்து ஒரு ஆவின் கன்றிற்காக தன் குலத்துக்கே ஒரு மைந்தன் என்பதை நினையாது, தன் மகனும் வீதிவிடங்கனையும் தேராழியினால் கொல்வதற்கு "மன்னர்", மதியமைச்சர்க்கு ஆணையிட அதனை மறுத்திட இயலாது "மதியமைச்சர்" தற்கொலை புரிந்தது கண்டு, அரசன் தானே தன் மகன் மேல் தேர்ச்சக்கரம் ஊர்ந்திடச் செய்து மனுநீதியைக் காத்த மனுநீதிச்சோழனும், ஒரு புறாவினுயிர்க்காக தன்னுடலைக் கொடுத்த "சிபியும்", ஊழ்வினை உருத்து வந்து ஊட்ட தன் வாய்தவறி "கோனறச் சிலம்பு கொணர்க" என்று பாண்டியன் கூறியதனால் தன் இன்ப வாழ்வு துன்ப வாழ்வாகியதைக் கண்ட மங்கையர் திலகம், கற்பின் செல்வி, பொற்குலக்கொழுந்து என "இளங்கோ"வால் இனிய தமிழால் போற்றப்பெற்ற "கண்ணகி", மன்னன் செய்தது மனுநீதியன்று, இது கொடுமை, இது மடமை என்று தன் நீதியை எடுத்து மன்னரவையில் அஞ்சா நெஞ்சத்துடன் மன்னர் எதிரே வழக்காடியதனால், தன் தவறை தானே உணர்ந்த காவலனும் பாண்டியன், தன் குலத்துக்கே தீராப் பழியினைத் தேடினேன், நம்மிடத்தே நீதியும், நேர்மையும், அருளும், ஆண்மையும், இக்கணமே போய்த்து நம் "செங்கோல்" கொடியதே என்று நினைந்து படீரென அரியணையிருந்து வீழ்ந்து உயிர்விட்ட பாண்டியனும், அவன் தன்னருகே வீற்றிருந்த கோப்பெருந்தேவியும் அவனுயிர் தேடுவாள்போல் உயிர் நீத்த மாட்சியும் இத் தமிழுலகுள்ளவரை எதனைக் காட்டுகின்றன? கற்றோன்றி மண்தோன்றா காலம் முதற்கொண்டு மக்கள் அறத்தோடும், அருளோடும், கலந்த வாழ்விலே வாழ்ந்தார்கள, அருளொடு கலந்த வீரத்தையே வீரம் என்றார்கள், இக்காலத்தில் நிகழும் வஞ்சகமுறையில் சூழ்ச்சியாக அருளற்ற முறையில் உயிர்களை வதைத்து நாட்டைச் சாம்பலாக்கும் அணுகுண்டு சகாப்தமல்ல "தமிழரசின்" சகாப்தம், அத்தகைய சகாப்தம் தமிழ் நாட்டிற்கு தேவையில்லை.

தமிழ் நாட்டில் வாழ்ந்த மக்களும், மன்னரும் கடற்கரை மணலிலும் பல. அவர்கள் வாழ்ந்த காலம் பொற்காலம் அருள் வழிச்சென்றே அறம் பலவாக்கி கலையோடு வாழ்ந்து இன்புற்ற காலம், கலைஞர்களும் பணத்திற்காக தங்கள் கலையை விற்றார்களில்லை, கலையின சிறப்பை உலகு உணரவே கலையை வளர்த்தார்கள். கலையின் வளர்ச்சிக்கு ஆணிவேராகவே யிருந்தார்கள் மன்னர்கள். அதனாற்றான் தமிழ்நாட்டு நாகரிகம் என்ற பெருமிதத்தோடு நாம் அவற்றை புகழுகிறோம். பிறநாட்டவரும் புகழ நாம் களிப்படைகிறோம். இத்தகைய கலை வளத்தை தமிழ்நாட்டில் அழியாச் செல்வமாக்கிய பெருமை, விற்கொடி தாங்கிய சேரனுக்கும், மீன்கொடி தாங்கிய பாண்டியனுக்கும், புலிக்கொடி தாங்கிய சோழனுக்கும உரித்தாகும்.

'சோழநாடு சோறுடைத்து' என்று ஆன்றோரால் போற்றப்பெற்று சோழ நாட்டின தலைநகராய் விளங்கும் தஞ்சை

யில் சிற்பக்கலையின் நுட்பமாயிலங்கும் "இராசராசேச்சுரம்" என்னும் காயில் நம்மவர்க்கு எதைக்காட்டுகிறது? அருள் நெறியில், அன்பு இதயத்தே ஊறிய இன்பத்தை எடுத்துக்காட்டுகிறது. இக்காலத்தில் பலவாண்டுகள் மேல்நாட்டில் படித்து பட்டம்பெற்ற நுண்கலை வல்லுநர்களும் பண்டைத் தமிழ் மக்களின் நுண்கலை வண்மையைக் கண்டு வியக்கின்றனர் என்றால் அது மிகையாகா. மாடமானிகைகளும், கூடகோபுரங்களுமட்டுமல்ல நீர்ப்பாசனத் திட்டங்களும் செவ்வனே அமைத்து நாட்டின் உணவுப் பொருளுற்பத்தியை பெருக்கினர். இதற்கு காவிரியின கரைசோரிய, "கரிகால்வளவனே" தக்க சான்று.

தமிழன்னையைச் செங்கோலுடன் வீற்றிருக்கச் செய்த மன்னர்களில் பாண்டிய மன்னர் மேற்கொண்ட பெருமுயற்சியால் பெரும்புகழ் பெற்றனர்.

தமிழறிஞர்கள் நிறைந்து தமிழிலக்கிய, இலக்கண நூல்களை இயற்றிய முதற் சங்கத்தை, இக்காலத்தே தமிழ்நாட்டின் தெற்கெல்லையாக விளங்கும் குமரிமுனையின் தெற்கே கடலாயிருக்குமிடம் சுமார் இரண்டாயிரமாண்டுகட்கு முன்னமே நிலப்பரப்பாயிருந்தது. அதை லெமூரியா கண்டம் என்பர். அங்கே முதற்சங்கம் நிறுவி தமிழை வளர்த்தனர், பலவாண்டுகள் கழித்து ஆங்கே பஃறுளியாற்றுடன் பன்மலை யடுக்கத்து குமரிக்கோடும், கொடுங்கடல்கொள்ள இரண்டாம் சங்கம் பாண்டிய நாட்டில் கபாடபுரத்தில் ஆரம்பித்து பலவாண்டுகள் செல்ல ஆங்கும் கடல்கோல் ஏற்பட்டதால் இரண்டாம் சங்கமும் அழிந்ததினால், இப்பொழுதிருக்கும் மதுரையில் மூன்றாம் சங்கம் அமைதது தமிழ்மொழியை வளர்த்தனர் இச்சங்கங்களினால் அறம், பொருள், இன்பம் பயக்கும்



அறிவின் ஒளியாகிய இலக்கியங்கள் பல தமிழுலகிற்கு கிடைத்தன. ஆகையாற்றான் நாம் பண்டைத் தமிழரின் அருள்நெறியையும், அறச்செயல்களையும், நற்பண்பாட்டையும் இலக்கிய அடிப்படையில் கண்டு இதயம் பூரிக்கிறோம். 'அன்பே சிவம்' என்ற சிறந்த தத்துவத்தை கண்ணப்ப நாயனார், மாணிக்கவாசகர், நந்தனார் முதலிய ஒப்பற்ற சைவப்பெரியார்கள் நமக்கு அறிவுறுத்தி யுள்ளார்கள். அவர்கள், காட்டிய, அன்பு, அருள் என்னும் நன்னெறிச் சென்றால் ஒழுக்க மென்றும், விழுப்பமடையலாம். தமிழ் மக்களை தரணியிலுள்ளோர் போற்றுமாறு "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற பழந்தமிழறிஞரின் கொள்கையை கடைப்பிடித்து எதிர்காலத்தில் தமிழகம் உலகிற்கே ஓர் உன்னத லெட்சியத்தைக் கொண்ட இன்பத் தமிழகமாக, ஒற்றுமைப்பெற்று உறுதியாக, அருள்நெறி தழைக்க இறையருளை வேண்டுவோமாக.

★

அடிகளாரின் கனிமொழிகளில் பிழிந்தெடுத்த கனிச்சாறு

அழகிய மூவர்ண அட்டையுடன் வெளிவந்துவிட்டது

விலை அணா எட்டு மட்டும்

Koviloor Digital Library

எரிக்க முடியாது



← பன்மொழிப் புலவர் தெ. பொ. மீ. →

இன்று ஒரு சிலர் தேவாரம், திருவாசகம் முதலியவற்றை எரிக்க வேண்டும் என்று கூறுகின்றனர். அவர்கள் நினைப்பதுபோல் தேவாரமும், திருவாசகமும் மூன்று ரூபாய் புத்தகத்தில் இல்லை. அந்தப் புத்தகங்கள் இன்று அவர்கள் அழிக்காவிட்டாலும் ஒரு நாள் அழியத்தான்போகிறது. மக்கள் மனத்தில் ஊறிக்கிடக்கும் அவைகளை யாரால் எப்பொழுது அழிக்க முடியும்? எத்தனை ஏட்டுச் சுவடிகள் படிக்கின்ற பொழுதே மண்ணாகிறது. நாம் இதுவரையில் அவைகளைப் பாதுகாக்காமல் பாழாக்கிவிட்டோம். அவைகளை யெல்லாம் கண்டு கண்ணீர் உகுத்த கண்கள் என் கண்கள். திருவாசகம் எல்லார் உள்ளத்தையும் உருக்குகின்றது திருவாசகம் என் எலும்பை யெல்லாம் உருக்குகின்றது என்று ஒரு ஆங்கிலேயன் சொல்லுகின்றான். அத்தகைய பாடல்களைச் சாகடிக்கின்றவன் கலைஞனா? திருவாசகம் என்றும் சாகாது. அந்த நூலிலே உள்ள கவிதைகள் என்றும் சாகாது. உண்மையான அன்பு உள்ளம் படைத்தவன்தான் இந்த உலகத்தில் வாழவேண்டும் என்று சொல்லுகின்ற அந்தக் கொள்கை என்று சாகும்? ஆகவே, தேவாரத்தையோ, திருவாசகத்தையோ என்றும் அழிக்க முடியாது.

★

அருள்நெறி வளர்க்கும் அருந் தமிழ் முனிவர்கள்




1. செங்கோல் காக்கும், செங்கோல் ஆதீன கர்த்தர்
2. தருமம் வளர்க்கும் தருமை மகாசந்நிதானம்
3. குன்று அருள்நெறி வளர்க்கும் குன்றக்குடி அடிகளார்

Koviloor Digital Library

பிரார்த்தனை

மூலம் : ரவீந்தரநாததாகூர்
தமிழில் : V. R. M. செட்டியார் B.A.



இறைவன் சந்நிதியில் வணங்கி, இதய நிறைவோடு இசை மழையாகப் பொங்கி வருகின்ற பாடல்களே, கீதாஞ்சலி பாடல்கள். அத்தகைய 'கீதாஞ்சலி' யிலிருந்து சில பாடல்களை இங்கே தொகுத்துத் தருகிறோம், 'பிரார்த்தனை' என்ற தலைப்பில்.

Koviloor Digital Library

இறைவ! என்னை முடிவற்றநிலையில் சிருஷ்டித்திருக்கின்றாய். அதுவே நினது இச்சை. இந்த மண்பாண்டத்தை அடிக்கடி காலிசெய்து புத்துயிர் நிறைக்கின்றாய்.

இச்சிறிய வேய்ங்குழலைக் கையிலேந்தி நீ காடு மலையெல்லாம் கடந்து செல்கிறாய். போகும் இடமெல்லாம் குழல் ஊதி நவ நவமான அமுதகீதங்களை அள்ளிச் சொரிகின்றாய்.

சாகா வரமளிக்கும் நின் கரம் தீண்டியதும், என் ஏழை உள்ளம் இன்பத்தின் எல்லைதாண்டி நின் வண்மையைப் பாட ஆரம்பிக்கிறது.

என் சின்னஞ்சிறு கைகள் நிரம்பி வழியும்படி நீ அரிய பல கொடைகள் அருள்கின்றாய். யுகம் யுகமாக நின் கொடைகள் கருணைப் பிரவாகமாய்க் குவிந்து பெருகுகின்றன. ஆயினும் நான் இன்னும் குறையிரந்து நிற்கின்றேன்.

* * *

என்னைப் பாடும்படி நினது ஆக்ஞை பிறக்கும்போது, எனது இருதயம் கர்வங் கொண்டு மகிழ்ந்து வெடிக்கும்போல் தெரிகிறது. நினது முகத்தை நான் பார்க்கின்றேன்; எனது கண்களில் நீர்த்துளிகள் நிறைகின்றன.

எனது வாழ்வின் ஹிம்சையும் அபசுரங்களும் கலந்து உருகி ஒரு இனிய இன்னிசையாக ஒலிக்கின்றன; ஒரு ஆனந்தமான பறவை கடலைத் தாண்டிப் பறந்து செல்லுவதுபோல், எனது அருட்சிந்தனை சிறகடிக்கின்றது.

நான் பாடும்போது நினது உள்ளம் மகிழ்வெய்தும் என்பதை நான் உணர்வேன். நினது அருட் சந்நிதியில் நான் ஒரு பாடகனாகவே தோன்றுகிறேன்.

தீண்டமுடியாத நினது பாதத்தை எனது பாட்டின் விரிந்த சிறகின் இதழால் நான் தொட்டு இன்புறுகிறேன்; பாடிய இன்பத்தில் மயங்கி என்னை மறந்து, எனது தலைவனாகிய உன்னை எனது நண்பன் என அழைக்கின்றேன்.

* * *

எனது ஞான குருவே! நீ எப்படிப் பாடுகின்றாய் என்பதை நான் அறிய முடியவில்லை. நினது பாட்டினை, எப்போதும் நான் அமைதியான ஆச்சரியத்தில் மூழ்கிக் கேட்டு இன்புறுகின்றேன்.

நினது கீதத்தின் ஒளி, உலக முழுதும் ஜோதி பரப்பி விடுகின்றது; நினது கீதத்தின் உயிர்க்காற்று விண்ணை நிறைக்கின்றது; உனது தெய்விக கீத ஓடை கற்பாறைகளைத் துளைத்துக்கொண்டு சுழன்றோடுகின்றது.

எனது இதயம் நினது கீதத்தில் கலக்க அவாவுகின்றது; ஆனால் குரலற்றுத் தத்தளிக்கின்றது. நான் பேசுவேன்; ஆனால் பேச்சு பாட்டாகப் பெருகெடுக்கவில்லையே! ஐயோ, தோற்றேன், தோற்றேன்! ஆ, எனது இதயம் நினது கீதத்தின் முடிவற்ற வலையில் சிக்குண்டது; எனது ஞான குருவே!

* * *

எனது உயிரின் உயிரே, எனது உடல் முழுதும் நினது ஜீவிய ஸ்பரிசம் பரவியிருப்பதை அறிந்து எனது உடலை எக்காலமும் சுத்தமாய் வைத்துக்கொள்ள முயலுவேன்.

என் மனதில் பகுத்தறிவெனும் ஒளியைத் தாண்டிய உண்மையும் நீயே! ஆதலால் எனது சிந்தனையினின்று சகல தீமைகளையும் விலக்கி, அன்பு அரும்பிவர முயல்வேன். எனது இதயத்தில் கோயில் கொண்டிருக்கும் நின்னை நான் நன்கு அறிவேன்.

எனது செயலை விரிக்க வலிமையளிக்கும் நின்னை, எனது செயலில் வெளியாக்க முயல்வேன்.

* * *

உனக்கருகில் ஒரு நிமிஷம் தங்கக் கருணை காட்டுவாயாக! என் கைவேலையை, நான் பின்னால் முடித்துக்கொள்கிறேன்.

நினது முகம் மறைந்தால் எனது இதயம் ஓய்வற்றுத் துடிக்கின்றது; வேலைக் கடலில் எனது வேலையும் முடிவுறாமல் இளைக்கிறது. இன்று என் ஜன்னலின் முன் கோடை பெருமூச்சிடுகிறது, குழம்பி ஒலிக்கிறது, வண்டுகள் பூந்தோட்டத்தில் ரீங்காரமிடுகின்றன.

இந்த வழிந்தோடும் அமைதியில் நின்னைத் தரிசித்து எனது வாழ்வை அர்ப்பணிக்க இதுவே நல்ல நேரம்.

* * *

Koviloor Digital Library

இந்தச் சிறு பூவைப் பிடுங்கி எடுத்துக் கொள்! தாமதியாதே; அது வாடி மண்ணில் விழுந்து மறையும் என்று அஞ்சுகிறேன்.

நினது மாலையில் அதற்கு ஒரு இடம் அமையாவிடினும், நினது கையால் கிள்ளி எடுத்துக்கொள்; அதில் ஓர் துக்க ஸ்பரிசம் அமைந்துள்ளது. நான் இதை அர்ப்பணிக்குமுன், இன்றையத் தினம் முடிந்துவிடுமோ என்று கவலையுறுகிறேன்.

அதனுடைய வருணம் ஆழமில்லாவிடினும், அதனுடைய வாசனை மங்கியிருந்த போதிலும், இப்போதே காலத்தை இழந்துவிடாமல், இந்தப் பூவைக் கிள்ளி நினது பணிக்கு அமைத்துக்கொள்ளுக!

* * *

ஏ மதியிழந்தவனே! உன்னையே உன் தோளின்மேல் ஏன் தூக்கிச் சுமக்கிறாய்? ஏ, பிச்சைக்கரேனே! உனது கதவண்டை ஏன் பிச்சை கேட்கிறாய்?

சுமையின் பொறுப்பை ஏற்றுக்கொள்பவனிடம் உனது கவலையை விட்டுவிடு. வருந்தித் திரும்பிப் பார்க்காதே. உனது ஆசை உனது உள் ஒளியை அணைக்கிறது. அது சுத்தமற்ற நிலை. அருட் காதலில் விளையும் கொடைகளையே அன்புடன் ஏற்றுக்கொள்.

* * *

உனது பாத கமலங்களுக்கு ஏற்ற பொன்மணை இங்கே இருக்கிறது. ஆனால் பாதங்களை இங்கே காணவில்லை; தீனர், திக்கற்றவர், தாழ்ந்தோரிடையே விளங்கும் உன் சேவடிக் கொழுந்துவரை, அவ்வளவு தாழ்வாகப் பணியமுடியவில்லை.

தீனர், திக்கற்றவர், தாழ்ந்தோரிடையே கந்தை உடுத்தித் திரியும் நின் கழலினைச் செருக்குடையார் எந்நாளும் சேரவே முடியாது.

தினர், திக்கற்றவர், தாழ்ந்தோரிடையே, நாதியற்றவர்க்கு நாதியாய், ஏழை பங்காளனாய் நீ திரிந்து உலவும் இடத்தைச் சேர்வதற்கு, எது வழி என்று அறியாமல் என் இதயம் இடர்ப்படுகின்றது.

* * *

ஜபமாலை உருட்டுவதை விட்டுவிடு! மந்திரமும் தந்திரமும் ஆடலும் பாடலும் அவனைக் காட்டமாட்டா! தாளிட்டு அடைபட்ட! கோயிலின் இருளடைந்த மூலையில் யாரைப் பூசிக்கிறாய்? கண்களைத் திறந்து உன் கடவுள் உன் முன்னிலையில் இல்லையென தெரிந்துகொள்.

கடினமான தரையில் ஏர்கட்டி உழுவாடமும், சாலை அமைக்க சரளைக் கல் உடைப்பாரிடமும் அவன் இருக்கிறான். அவர்களுடன் அவன் மழையில் நனைகிறான்; வெயிலில் உலர்கிறான். அவன் ஆடையில் தூசி படிந்திருக்கிறது. உன் காஷாயத்தைக் களைந்தெறி. அவனைப் போலவே நீயும் புழுதியில் இறங்கி வா!

விடுதலை! எங்கிருந்து விடுதலை கிடைக்கும்? நம் ஆண்டவனே நம்மீது அருள் சுரந்து சிருஷ்டித் தளைகளைத் தன் திருமேனியில் பூண்டிருக்கிறான்; என்றும் நம்மைவிட்டுப் பிரிய முடியாமல் அவன் இணைக்கப்பட்டிருக்கிறான்.

பூவையும் நறும் புகையையும் உன் பூசையையும் விட்டு வெளியே வா. உன் ஆடை கிழிந்து அழுக்கடைந்தால் என்ன? நெற்றி வேர்வை நிலத்தில் விழ உழைத்து, நின் ஈசனைக் கண்டுகொள்.

* * *

நான் பாடவந்த பாட்டை இன்று வரை பாடவில்லை. எனது யாழிலே சுருதி கூட்டுவதிலேயே என் காலமெல்லாம் கழிந்துவிட்டது.

இன்னும் காலம் வரவில்லை; சொற்கள் சரியாக அமையவில்லை; ஆர்வத்தால் என் இதயத்தில் மட்டும் வேதனை இருந்துகொண்டே இருக்கிறது.

மலர் இன்னும் இதழ் விரியவில்லை; தென்றல் மட்டும் ஆர்வத்துடன் அருகே வீசிக்கொண்டிருக்கிறது.

அவன் முகத்தை நான் கண்டதில்லை; குரலையும் கேட்டதில்லை; வீதியில் எனது வீட்டின் முன் அவன் அமைதியாக நடந்து சென்ற காலடி ஓசையை மட்டுமே கேட்டிருக்கிறேன்.

அவன் அமர்வதற்காகத் தரை மீது ரத்தினக் கர்பளம் விரிப்பதிலேயே நாள் முழுதும் கழிந்துவிட்டது. ஆனால், இன்னும் விளக்கேற்றவில்லை. எங்ஙனம் அவனை வீட்டினுள் அழைப்பேன்!

* * *

Koviloor Digital Library

கண் குளிர அவனைக் காணலாகும் என்றே நம்பி வாழ்கிறேன்; ஆனால் காண்பது எப்பொழுதோ!

* * *

என் ஆசைகள் அனந்தம்; என் அழுகை இரக்கத்தக்கது; ஆயினும் எதையும் கொடுக்க மறுத்து நீ எப்பொழுதும் என்னைக் காத்து நிற்கிறாய். உன் மாறாத கருணை என் வாழ்க்கையின் ஊடும் பாவுமாய்ப் பின்னி விளங்குகிறது.

நான் கேளாதிருக்கும் போதே உன் அரும்பெரும் கொடைகளை நல்கி, நாளுக்கு நாள் அவைகளுக்கு நான் தகுந்த கலமாக விளங்க அருள்கிறாய்; இந்த வானமும் பேரொளியும், இவ்வுடலும், இதில் இலங்கும் உயிரும் உள்ளமும் அளித்து, பேராசைச் குறையின் பிடியினின்றும் என்னைக் காத்து நிற்கின்றாய்.

சோம்பலுடன் சோர்ந்து நான் சுணங்கிக் கிடப்பதுண்டு. விழித்தெழுந்து வேகமாய் என் லட்சியத்தை வெறிகொண்டு தேடுவதுண்டு. நீயோ, கொடுமையுடன், என் எதிர் புலப்படாது, மறைந்து ஒளிகிறாய்.

சரணடைந்த போதெல்லாம் என்னை நீ விலக்குதலால், நிலையற்ற ஆசை வலைக் கண்ணிகளில் விழாது காத்து, நாள்தோறும் என்னை நீ உன் பெருமைக்கு ஏற்ற பொருளாக்குகிறாய்.

* * *

பண்ணால் உனக்குப் பாடல்கள் பாட நான் வந்திருக்கிறேன். உன்னுடைய இந்த மணிமண்டபத்தில் எனக்கும் ஒரு மூலையில் இடமுண்டு.

உனது உலகில் எனக்கு வேலையில்லை. வறிதான என் உயிர், பயனற்ற இசைகளாய்ப் பாடி அரற்றுவதல்லாமல், வேறொன்றும் அறியாது.

நள்ளிருட் கோயிலில் நின்னைப் பூசிக்கும் நேரம் நண்ணியதும், நின் சந்நிதியில் நின்று பாடும்படி என்னை பணிப்பாயாக!

காலை மென் காற்றில் தங்க யாழ் இசை மிழற்றும்போது, நின் சமுகத்தில் தோன்றும்படி என்னை நீ கட்டளையிடுவாய்! அதுவே என் பாக்கியம்!

* * *

வையமெங்கும் திருவிழா. இதற்கு நானும் இங்கு வந்துள்ளேன். இது என் ஜீவன் பெற்ற பெரும் பேறு. இங்கு கண்ணாரப் பலவற்றைக் கண்டுகொண்டேன்; காதாரப் பலவற்றைக் கேட்டறிந்தேன்.

விழாவில் வீணை வாசிப்பதே என் வேலை. என்னால் முடிந்தவரை வாசித்து விட்டேன். இனியாவது உட்புகுந்து நின் முகத்தைக் கண் குளிரக் காண்பேனோ? மோனமாக நின்னை வழிபடும் காலமும் வந்ததோ என்று உன்னை வினவுகிறேன்.

* * *

நீ பேசாவிடின், என் இதயம் உனது அமைதியால் நிறைந்து பொறுமையடையும். கண்மூடா இரவு, பொறுமையால் தலை கவிழ்ந்து, தாரகைகள் மூலம் நுட்பமாகக் கவனித்து நிற்பதுபோல், நானும் தயங்கியே காத்திருப்பேன்.

காலைக் கதிர் உதிப்பது திண்ணம்; காரிருள் கழிவதும் திண்ணம்; வானத்தின் வழியாக நினது இசைக் குரல், ஒளிமயமான பொன் ஓடைகளாகப் பெருக்கெடுத்துப் பாய்வது திண்ணம்.

அப்போது என் வன்னப் பறவைகளின் கூடுகள் ஒவ்வொன்றிலும் நின் சொற்கள் கீதங்களாகச் சிறை விரித்துப் பறக்கும். நின் இசையின்பம் என் சோலைகள் தோறும் மலர் வனமாய் மலர்ந்து நிற்கும்.

* * *

தாமரை மலர்ந்த அன்று, ஐயோ! என் மனம் அலைந்து திரிந்தது, நான் அதை அறியவில்லை.

என் குடலை காலி. அந்தப் புஷ்பமோ தேடுவாரற்றுக் கிடந்தது.

சில சமயங்களில் ஒரு சோகம் என்னைக் கவிந்துகொள்ளும்; நான் என் கனவிலிருந்து திடுக்கிட்டு எழுவேன. தென்றலுடன் கலந்து ஓர் அதிசய நறுமணம் கமழ்வதை உணர்ந்தேன்.


இந்த நூதன இனிமையினின்று எனது இதயம் ஆர்வத்தால் விம்மியது, கோடையின் பூர்த்திக் குரலாக அது தோன்றிற்று.

அது அவ்வளவு அருகேயுள்ளது என்றும், அது என்னுடையதுதான் என்றும், இந்தப் பூரண இனிமை எனது இதயத்தின் ஆழத்திலேயே மலர்ந்தது என்றும், அப்பொழுது நான் உணரவில்லை.

அடிகளாரும் அறிஞர்களும்

Kovilloor Digital Library


1




2




3




4



5



6



7



8




9



10



Koviloor Digital Library



Koviloor Digital Library

தரணியில் அருள்நெறி பரப்பும் அருந் தொண்டர்கள்

இடமிருந்து வலம் :—

முதல் வரிசை :- 1. சா. கணேசன் (மாநில அருள்நெறித் திருக்கூட்டச் செயலாளர்), 2. ஆ. முத்துசிவன், 3. புலவர் வே. முத்துவேங்கடாசலம், 4. திரு. சபாபதிசுவாமிகள், 5. புலவர் அன்பு கருணையானந்தா.

2-வது வரிசை :- 1. S. மெய்யப்பன் B. A. B. L., 2. S. N. அம்பலவாணம் பிள்ளை (நெல்லைமாவட்ட அருள்நெறித்திருக்கூட்டப் பொதுக்காரியதரிசி), 3. அழகர்சாமி, 4. அருட்பாமணி நா. விசுவநாதன், 5. திரு. குஞ்சப்பசாது (திருவாரூர்).

3-வது வரிசை :- 1. சின்ன அண்ணாமலை, 2. முல்லைவேந்தன், 3. சீனுவாசன், 4. S. முனீசுவரன், 5. சிவஞானம்.

4-வது வரிசை :- 1. S. பரமநாயகம் (தூத்துக்குடி), 2, புலவர் தில்லைக்கோவிந்தன், 3. வீர. மாசில்லாமணி (கமுதி), 4. RM. TS. சவுந்திரபாண்டியன் (கமுதி), 5. S. மகாலிங்கம் M. L. A. (பொள்ளாச்சி), 6. P. மாரிமுத்து (பழனி).

5-வது வரிசை :- 1. கவிஞர் கா. சி. திருவாழ்மார்பன், 2. ராஜாராம் (ஈரோடு), 3. சுந்தரராசுலு, 4. சி. இராகவன், 5. வி. திருநாவுக்கரசு III B. A., (செயலாளர் தமிழ்நாடு மாணவர் அருள்நெறி மன்றம்), 6. சங்கர குமாரகுருக்கள் (மதுரை).

அடிகளாரும் அறிஞர்களும்

1. தருமையாதீனமும், குன்றக்குடி அடிகளாரும். 2. ஈரோடையில் அடிகளார். 3. உழவாரத் தொண்டுசெய்யும் அடிகள். 4. மன். வெட்டுகிறார் மகாசந்நிதானம். 5. தஞ்சைக் கலைக்கூடத்தில் அடிகளார். 6. ம. பொ. சியும் அடிகளாரும். 7. மாலை சூட்டி வரவேற்கிறார்கள் மக்கள். 8. தொண்டர்களுடன் அடிகளார். 9. வள்ளல் அழகப்பாவுடன் அடிகளார். 10. பசும்பொன் முத்துராமலிங்கத்தேவரும் அடிகளாரும்.

அடிகளாரின் உழவாரத் தொண்டு

1. நாங்குநேரியில் உழவாரப்படைத்தொண்டு.
2. பெருங்குளம் மக்களின் மத்தியில் குன்றக்குடி அடிகளார் செங்கோல் ஆதீனமும்.
3. அருள்நெறித்தொண்டில் அடிகளார்.
4. அடிகளார் ஏழைச் சிறுவருக்கு எண்ணெய் வார்க்கிறார்.
5. அடிகளார் ஏழையரின் துயர்போக உணவளிக்கிறார்.
6. அருள்நெறித் தொண்டர் ஆறு. ஆ. ராம. சொக்கலிங்கம் செட்டியார் எம். எல். ஏ.
7. மதுரை நன்மைதருவார் கோவில் ஊறுணித் திருத்தொண்டில் அடிகளார்.
8. அடிகளாரவர்களை பெருங்குளத்தில் மக்கள் வரவேற்கும் காட்சி.

Koviloor Digital Library


1




2



3




4




5




6





7



8

Koviloor Digital Library

பாடுக!

[-: கவிஞர் கா. சீ. திருவாழ்மார்பன் :-]

வாடுகின்ற மக்கள்துயர் நீக்கிடவே வந்ததெது ?
சாடுகின்ற வறுமையதைச் சண்டையிட்டு மாய்த்ததெது ?
கூடுகின்ற அன்புடன்நாம் குலவிநன்கு வாழ்ந்திடவே
பாடுபடும் அருள்நெறிதான் பாடிடுவாய் பாடிடுவாய் !

கல்லென்று கடவுளரைச் சொன்னபுக லற்றவரின்
பொல்லாத புத்தியினைப் பொசுக்கிடவே வந்ததெது ?
நல்லோர்கள் சொன்னதுதான் நான்மறையும் தந்ததுதான்
நல்லஅந்த அருள்நெறியை நாளும்நன்கு பாடிடுவாய் !

எரித்திடவே இலக்கியத்தை வேண்டுமென்று சொன்னவரை
சிரித்துஉளம் நல்லதையே நினைத்திடவே செய்ததெது ?
பெரியோர்கள் போற்றியது பெம்மனருள் பெற்றஅந்த
அருள்நெறியை அன்புடனே அனுதினமும் பாடிடுவாய் !

தீண்டாதான் என்றசொல்லை தீயிலிட்டு மாய்த்ததெது ?
வேண்டாதான் எனும்சொல்லை வெந்தழலி ட்டதெது ?
மாண்புடைய முன்னோர்கள் மகிமையுடன் தந்தநல்ல
பண்புடைய அருள்நெறிதான் பலமுறையும் பாடிடுவாய் !

நாத்திகமே பேசிக்கெட்ட நாத்தழும்பு ஏறியோரை
ஆத்திகத்தின் அடிச்சுவட்டில் அன்புகொளச் செய்ததெது ?
சாத்திரங்கள் போற்றுவது சற்குணர்கள் ஏற்றுவது
நேர்த்திமிக்க அருள்நெறியே நித்தம்நித்தம் பாடிடுவாய் !

அன்புடைய **அடிகளாரை** அறிஞரேறு பல்லோரை
இன்பமிகு வழிகாட்டி என்றுசொல்லித் தந்ததெது ?
மன்பதையை நீக்கியவர் மகிழ்வதையே ஆக்கியவர்
சொன்னஅந்த அருள்நெறிதான் சுருதிகூட்டிப் பாடிடுவாய் !

நாடிடுவாய் அருள்நெறியை நாளும்நலம் பெற்றிடவே
கூடிடுவாய் அருள்நெறியைக் குமரனருள் பெற்றிடவே
ஆடிடுவாய் அருள்நெறியில் அத்தனருள் பெற்றிடவே
பாடிடுவாய் அருள்நெறியைப் பண்புடனே வாழ்ந்திடவே !

Koviloor Digital Library

24ம் பக்கத் தொடர்ச்சி...

அன்று முழுநிலா. வானத்தே வட்டமதி ஊர்ந்து கொண்டிருக்கிறது, எண்ணெயிலே வெறும் அப்பளத்தைப்போல. எங்கும் பசுமையான-வெள்ளிய நிலவொளி. அந்த வட்ட முழுமதி அவன் உள்ளத்தே காதல் உணர்ச்சியையே கொப்பளிக்கச் செய்துகொண்டிருக்கிறது. ஏதும் செய்யத் தோன்றாதவனாகி இறுதியில், பக்கத்திலே கிடந்த ஓர் உயரமில்லாத கட்டிலில் உட்காருகிறான். தலைவியின் மனமிறங்கிற்றில்லை. அவர்களது கைக்குழந்தை கட்டிலில் அயர்ந்து தூங்கிக்கொண்டிருக்கிறது. அந்தக் குழந்தையின் தலையிலே சூடப்பெற்றிருந்த நறும் பூக்களில் சில உதிர்ந்து சிதறிக்கிடந்த அஃதோர் மலர்ப்படுக்கையாகத் தோற்றமளித்தது. தளர்ந்த உள்ளத்துடன் அந்தக் கட்டிலில் அமர்ந்த தலைவன், படுக்கும்போது யானை பெருமூச்சுவிடுமே அதைப்போலப் பெருமூச்சு விட்டானாகிக் குழந்தையை அப்படியே தழுவினான். அவ்வளவுதான்! நடவாதது நடந்துவிட்டது. இந்த இன்பத்திலே தலைவி எல்லாவற்றையும் மறந்து, தன் காதல் தலைவனை விரைந்து அணைத்துக் கொள்ளுகிறாள். இன்ப வெள்ளம் பெருக்கெடுத்தோடுகிறது. இதனை, பாணனிடம் தோழி கூறுவது போல அமைந்துள்ள குறுந்தொகைப் பாடல் விளக்குகிறது:

"கண்டிசிற் பாண பண்புடைத் தம்ம!
மாலை விரிந்த பசுவெண் ணிலவிற்
குறுங்காற் கட்டி னறும்பூஞ் சேர்க்கைப்
பள்ளி யானையி னுயிர்த்தன னசையிற்
புதல்வற் றழீஇயினன் விறலவன்
புதல்வன் றாயவன் புறங்கவை யினளே!"

• • •

இறுதியாக, "குழந்தையின்பம்" பற்றிய ஆங்கிலப் பெரும் புலவர் டென்னிசனின் கருத்தை அனுபவிப்போம்:

"வெல்லுந்திறல் போர்மறவன்
களத்தில் மாண்டான்
வீரர்சிலர் அவனுடலை
இல்லிற் சேர்த்தார்
"கொல்லும்விழி யாள்வீரன்
மனையாள் அந்தக்
கொடுமையினைக் கண்ணுற்றாள்;
அழுதா ளில்லை!

வெல்லமொழிச் சேடியர்கள்
அவள்பாற் சென்று
விளம்பினார், "அழு! இன்றேல்
இறப்பாய்!" என்று
வெல்லமொழி யாளவளோ
அழுவே யில்லை;
வேதனையின் புயலடித்துக்
கிளம்பிற் றில்லை!

"காதல்புரி தற்கேற்ற
காளை" என்றார்
"காணரிய நண்பன்" என்றார்;
"மாற்றா ரோடு
மோதுவதில் இணையற்றான்"
என்றார், அந்த
முல்லைநகை யாள்சிறிதும்
அழுவே யில்லை!
ஏதேதோ பேசினார்;
இறுதி யாக
எழுந்தொருத்தி வீரன்முகத்
திரைகளைந் தாள்
ஈதெல்லாம் சிறிதேனும்
அவளுள் ளத்தே
இன்னலினை எழுப்பவில்லை!
திகைத்து நின்றார்!

வெல்லமொழி யாள்காதல்
மழலை யங்கே
விட்டிருளே தொட்டிலிலே
துயிலக் கண்டார்
மெல்லஅவள் செவிலியெழுந்
தருகே சென்று
மெல்லுடலக் குழந்தையினைத்
தூக்கி வந்து
வெல்லமொழி யாள்மடிமே
லமர்த்தி விட்டாள்
வெள்ளமென நீருகுத்த,
அவள்வேற் கண்கள்!
"செல்வமே! உன்பொருட்டே
இனிநான் இந்த
செகந்தனிலே உயிர்வாழ
வேண்டு" மென்றாள்.

ஆம் இப்பொழுது நீங்களே கூறுங்கள் "குழந்தை இன்பம்" எவ்வளவு மகத்தானது என்பதை! வாழ்க்கையில் ஒப்பற்ற இன்பம் பயக்கும் மிகச் சிறந்த இந்தக் "குழந்தை இன்பம்" வாழ்க! வாழ்க!! என வாழ்த்துவோம்.

○

Koviloor Digital Library

ஸ்ரீ மீனாக்ஷி மில்ஸ் லிமிடெட்,

மதுரை அண்டு மணப்பாரை.

மூலதனம்.

அதிகாரம் பெற்றது	ரூ.	60,00,000
கையொப்பமாகி வசூலானது	,,	48,81,240
மொத்த கதிர்கள்		66,616
விசைத் தறிகள்		144

16 நெம்பர் முதல் 40 நெம்பர் வரை கைத்தறிகளுக்கும் இயந்திரத் தறிகளுக்கும், பனியன் பாக்டரிகளுக்கும் தேவையான நூல்களும், மற்றும் மல், லாங்கிளாத்துகளும் தயாரிக்கப்படுகின்றன.


நிருவாக கர்த்தர்கள்,

தியாகராஜ செட்டி அண் கோ.,
திருப்பரன்குன்றம் ரோடு, மதுரை.

தந்தி விலாஸம் : 'கருமுத்து'
டெலிபோன் நெ. 1
தபால் பெட்டி நெ. 1

Koviloor Digital Library

அருள்நெறித் தொண்டர்கள்



திருவாளர். க. சு. சிவவடிவேல் உடையார்



திருவாளர். அ. ச. ஞானசம்பந்தம், M. A.

Koviloor Digital Library

அன்பர்களுக்கு ... ...

... ... ஒரு அறிவிப்பு

ஜய வருடப்பிறப்பன்று காரைக்குடியில் நடைபெற்ற
திருமதி K. B. சுந்தராம்பாள் அவர்களின்
இன்னிசைக் கச்சேரியை பல்லாயிரக்கணக்கான மக்கள்
ரசிக்கும்படி செய்தது :

சோலார் ஒலிபெருக்கிகள்

விபரங்கட்கு :
சோலார் சவுண்ட் சர்வீஸ்
கல்லுக்கட்டி கிழக்கு
காரைக்குடி (S. I. Ry.)

லெக்ஷிமி
எலெக்டிரிக்கல் ஸ்டோர்
காரைக்குடி

★

தங்களுக்கு தேவையான
எல்லாவித எலெக்டிரிக்
சாமான்களும் சகாயமான
விலைக்குக் கிடைக்கும்.

N. B :- எலெக்டிரிக்கல் சம்மந்தமான எல்லா
ஆர்டர்களையும் கவனிக்கப்படும்.

★

ஸ்ரீ சதாசிவம்
பேப்பர் ஸ்டோர்

செக்காலை ரோடு, காரைக்குடி.

எங்களிடம் எல்லாவிதமான
பேப்பர் தினுசுகளும், கவர், கார்டு
தினுசுகளும், பள்ளிகூடங்
களுக்கு வேண்டிய நோட்டுக்
வகையறாக்களும், ஸ்டேஷனரி
தினுசுகளும் கிடைக்கும்.

★

Koviloor Digital Library

சீதா "புளூ மவுண்டன்" பற்பொடி

பற்களை வெண்மையாக்குவதிலும் பயோரியா முதலிய தந்த நோய்களை போக்குவதிலும் நிகரற்றது. சிறந்த நிபுணர்களைக்கொண்டு உயர்தர தாதுப் பொருள்கள் சேர்த்து மேல்நாட்டு முறைப்படி தயார் செய்யப்பட்டது. ஓர் முறை உபயோகித்துப்பார்த்தால் அதன் குணம்தெரியவரும்.

டூத் பிரஷ் கொண்டும் உபயோகிக்கலாம். மாதிரி இலவசம் நேரில் கிடைக்கும்

"சீதா சோப்"

ஆடைகளை வெண்மையாக்குவதில் நிகரற்றது. சிறந்த நிபுணர்களைக் கொண்டு உயர்ந்த முறையில் தயார் செய்தது.

விரைவில் **"சீதா டாயிலட் சோப்"** வெளிவரும்.

பொதுஜனங்கள் எல்லோரும் வாங்கி உபயோகப்படுத்தி எங்களை ஆதரிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

தங்கள் அபிமானமுள்ள
A. O. M. N. & SONS
உரிமையாளர்கள்:
சீதா சோப் ஒர்க்ஸ், காரைக்குடி.

விற்பனை நிலையங்கள்:
76, கோவிலூர் ரோடு, காரைக்குடி.
38, பெரிய கம்மாளத்தெரு, திருச்சி. ஆண்டார் மெயின் ரோடு, குளித்தலை.

அருட்பெருஞ்சோதி ! தனிப்பெருங்கருணை !!

சிறந்த போட்டோக்களுக்கு

நாதன் ஸ்டுடியோ

கல்லுக்கட்டி மேல்கரை, காரைக்குடி.

Koviloor Digital Library

எங்கே கடவுள்?

ந. விசுவநாதன்

*
**

எங்கே கடவுள்? என்ற பிரச்சனை நாட்டில் இன்று பெரும்பாலான மனித உள்ளங்களில் சர்வ சாதாரணமாக நடமாடக் கூடிய கேள்வி.

வாழ்க்கையின் உச்சத்தில் ஏற்பட்ட ஒருவன், மிதமிஞ்சிய ஆசைக்கு தன்னை பலியிட்டுக் கொள்கின்றான். விதியோடு அவன் மதியும் மாள்கின்றது. சோதனை, பாம்பாகச் சீறுகிறது. கீழே தள்ளப்படுகின்றான்! துன்பக் கடலில் செயலற்ற அவன் உறுப்புக்கள் துடி, துடிக்கின்றன. தவறிய கோணத்தில் நின்று பார்த்த அந்த ஆசைக்கு அடிமையான உள்ளத்திற்கு, எங்கே கடவுள்? என்ற வினாத் தெளிவாகின்றன. கண்ணீரைக் கூட்டி கடவுளைத் தேடி ஓடுகின்றான். ஏன்? வறுமையைத் தாங்கிக்கொள்ள இயலாத இதயத்தை அவன் பெற்றுக் கொண்டமையால்! ஆனால், அதே தருணத்தில் அவன் பகுத்தறிவு செய்த தவறை எண்ணிப் பார்க்கின்றானா? அதுதான் இல்லை! துயரச் சாக்காட்டில்தான் கடவுளை வேண்டி உலக மக்கள் அழைக்கின்றார்களே தவிர, உண்மை நோக்கத்திற்கு கடவுள் எங்கே? என்ற வினாவிற்கு பதிலை ஆராய்வது மனித சமூகத்திலே மிக, மிகக் குறைவு.

எங்கே கடவுள்? என்ற கருத்திற்கு விளக்கம் அவ்வாறு பேசப்படுகையில், கடவுள் எது? கருங்கல் சிலை கோவில் ஆதாயமடம், சாத்திரம் ஏட்டுச்சுரக்காய் எனறு ஒன்றன்பின் ஒன்றான விடப் பரிட்சைகளே, இன்று நாட்டில் உலவி வருவதை நாம் கண்கூடாகக் காண்கின்றோம். அந்த நஞ்சுத் துளிகளைக் கொண்டு மக்கள் உள்ளத்தில் இருளை நாட்டம் செய்வித்த மூடப் பூசல்களைப் பார்த்துத்தான் எங்கே கடவுள்? என்ற தலைப்புக்கு விளக்கம் அமைகிறது.

மனிதன் தன்னைப்போலொத்தவனாகவே கடவுளை நினைக்கின்றான். இதுதான் எங்கே கடவுள்? என்ற கேள்விக்கு அடிவாரமாகும். ஆனால், கடவுள் மனிதத் தன்மைக்கு அப்பாற்பட்ட சக்தி என்பதை அவன் அகக்கூறுபாடுகளுக்கு புலனாவதில்லை. இன்றைய விஞ்ஞான உலகமும், கடவுள் சக்தி மனிதனைக் கடந்து நிற்பவை என்பதையே நமக்கு நன்கு உணர்த்துகின்றன; அதற்கான வழியையும் காட்டுகின்றன. இடையில், சுயநலத்திற்காக மனிதன் அதையும் மறைத்து, தன் நோக்கத்தை வெளியிடக் கற்றுக்கொண்டுவிட்டான். இந்நிலையில் பரவிய, எங்கே கடவுள்? என்ற கேள்விக்கு மனித சமூகத்திலே சலசலப்பென்றால், அங்கு அறியாமையைத்தான் சாபக்கேடாகக்கொள்ள வேண்டும். ஆனால், அறியாமையை விளக்கி, இப்பொழுது நாம் உண்மை நோக்கத்திற்கு வரலாம்.

பரந்து நிற்கும் இயற்கை வெளியில் நம்மையும் மீறி, ஒரு தனி ஆனந்தம் நெளிகின்றது. அந்த செய்கைக்குக் காரணம் நாமா? அல்லது நம்மையும் தாண்டிநிற்கும் அதன் சக்தியா? இவையேதான் நமக்கு புலப்படவேண்டிய கருத்து. ஒன்று, இயற்கையில் கோலமிடும் வனப்பு எழில்களில் உள்ள சக்தி, நம் உள்ளத்தை இழுத்துவிட்டது. அதனால், நாம் ஆனந்தத்தை அனுபவித்து விட்டோம். பிறகேன் அச்சக்தியை நாம் கடவுளாக் கொள்ளக்கூடாது? குருடன் உலக நிலையைக் கண்டு நடக்கின்றான் என்றால், அவன் அறிவைச் சோதித்துப் பார்ப்பது பேதமைத்தனம்! அறிவு, என்றும் மாறக் கூடிய நிலையில் உள்ளது. ஆனால், அக்குருடனை இயக்கும் அச்சக்தியோ என்றும் இறவாத ஒன்று. மேலும் செல்லலாம்!

பகலையும், இரவையும் துருவிப்பாயும் பகலவன்-நிலவு, வானப் பட்டாடையில் கோர்த்திருக்கும் மின்மினிகள், தனிவெளியில் சலசலப்பாக வீசும் தென்றல், சோலையில் சிருங்காரமாக அழகு காட்டும் வண்ணமலர்கள், செடிகள், கொடிகள், தாவரவர்க்கமுதல் மலை, கடல் போன்ற எல்லா இயற்கையின் கோணங்களிலும், நிறைந்து விளங்குவது கடவுட் தன்மை என்பதே முன்னோர்கள் கண்ட உண்மை. அவ்வியற்கையின் வாயிலாக நாம் பெறும் சுகம் என்ன?

Koviloor Digital Library

பகலவன், நிலவு, ஒளியைத் தருகின்றன. மழை, உணவுக்கு ஆதாரமாக அமைகின்றது. கடலில், நல் முத்துக்களைப் பெறுகின்றோம். இன்னும் அநேகவிதங்களிலும் இயற்கையால், மனிதன் சாதகமே அடைகின்றான். ஆகையால்தான், இயற்கையில் நிறைந்து காணக்கூடிய அப் பெருஞ் சக்தி முழுமையும் ஒன்றுதிரட்டி, மனிதனை, கடமையின் மூலம் ஓர்மைப் படுத்த, ஒழுக்க நெறியைக் கைக்கொள்ள அருள்நெறியில் திளைத்தோங்க, பண்டையவர்கள் அச்சக்திக்கு உருவமும் கொடுத்தார்கள்; கோவிலும் கட்டினார்கள்.

இந்த இயற்கையின் செல்வத்தைத் தான் வடலூர் வள்ளலார் இராமலிங்கரும்,

வித்தாகி முளையாகி விளைவதாகி
விளைவிக்கும் பொருளாகி மேலுமாகி
கொத்தாகி பயனாகிக் கொள்வோனாகி
குறைவாகி நிறைவாகிக் குறைவிலாத
சத்தாகிச் சித்தாகி இன்பமாகிச்
சதா நிலையாய் எவ்வுயிர்க்குஞ் சாக்ஷியாகி
முத்தாகி மாணிக்கமாகித் தெய்வமுழு
வயிரத் தனிமணியாய் முளைத்ததேவே.

என்று கூறியுள்ளார்கள். ஆனால் இன்றிருக்கும் நாகரிகத்தின் குறுகிய நெஞ்சோட்டங்களோ, இயற்கையை, வெறும் இயற்கை என்றே வர்ணிக்கின்றார்கள். அதற்காக அவர்கள் பிரச்சாரமும் செய்கின்றார்கள். ஒன்று, அவர்கள் இயற்கையின் அடிப்படை ஆதாரங்களைப்பற்றி ஆராய்வதுமில்லை; சிந்திப்பதுமில்லை; அவ்வாறு அவர்கள், இயற்கைக் கோலங்களின் பிடிப்பை நினைக்கத் தோன்றினால், கடவுள் எங்கே? என்ற கேள்வியை மறந்து, கடவுள் உண்டு, என்ற நினைவிற்குத்தான் வந்து சேரவேண்டியதாகும். இனியும் பார்ப்போம்;

கடவுள் எங்கே? என்று கேட்பவர்கள் உண்டு என்ற நிலையங்கத்தைத் தற்கால அகராதியாகக் கொண்டிருப்பதுதான் இங்கு வேடிக்கையாக நாம் கொள்ளவேண்டிய கருத்து. கடவுளை சுயநலமாகவே இந்த சந்தர்ப்பத்தில் அவர்கள் பெற்றுவிட்டார்கள். ஆனால், உலக அடிப்படையில் மனிதனின் கடமையை இத்தருணத்திலும் அவர்கள் இடையிட்டார்களா? என்றால், அதுதான் இல்லை!

கடவுளின் பிரதி அமைப்புகளாக உள்ள மற்றைய தெய்வ வடிவங்களையும் மனிதன், எந்த அனுமானத்தில் காண்கின்றான்?

விநாயகக் கடவுளை வழிபடுவோன் "ஓ! கணபதியப்பனே உனக்கு கொழுக்கட்டை தருகின்றேன். உன் செயல்படி எனக்கு திருமணம் ஆகாமல் காப்பாற்று" என்று துதிக்கின்றானா? அல்லது கயிலை வாழும் சிவனே! உன் கையில் உள்ள ஓட்டைத் தா! என் பசிக்கு, எவரிடமாவது சென்று பிச்சை எடுத்து பிழைத்துக்கொள்கின்றேன். தவறாமல், உன் சுடுகாட்டுக் காவலை அடியேன் ஏற்றுக்கொள்கிறேன்!" என்று எந்த மனித சமூகமாவது கடவுளைப் பார்த்து வேண்டுமா? நிச்சயமாக இராது! கடவுளின் பிரதி அமைப்பாக விளங்கும் எத்திருஉருவமாயினும் அதனிடம் மனிதன் வேண்டிக்கொளளும் முறை "தன்னைக் காப்பாற்று. நல்வாழ்வுதா!" என்பது தானே? ஆகையால், இன்று உண்டு, என்று பேசும் அந்த வக்கிரப்பாசறைகள், மற்றைய தெய்வ வடிவங்களைப் பழிகூறி, எங்கே கடவுள்என்று கூத்தடிப்பதை, நாம் வேடிக்கையாக மட்டுமல்ல, நகலிட்ட பைத்தியக்காரத்தனமே என்றுதான் கொள்ளவேண்டும்?

மனிதனின் அப்பாற்பட்ட சக்தியை, இயற்கைச் செல்வத்தில் கிடைத்த உண்மைப் பொருளை பற்பல உருவங்களில் கண்டு வாழ்த்தி வணங்கி-வழிபடும் நாம், நமது மற்றைய தெய்வ வடிவங்களின் தத்துவங்களை உணராதது, அக்கால தெய்வத்தின் வரி, அழகு, மேன்மை இவைகளையும் மறைத்து, மேல் நாட்டமாகவே கடவுள் எங்கே? என்ற கேள்விக் குறியோடு அந்த வக்கிரபுத்தியாளர்கள் பேசி வரும்வரை, நாமும் அவர்களைப் பார்த்துக் கேட்கவேண்டியது ஒன்றே ஒன்றுதான். எங்கே கடவுள்?

Koviloor Digital Library



உளங்கனிந்த பிரார்த்தனை

I. A. சிதம்பரம் பிள்ளை, நெல்லை மாவட்ட அ. நெ. தி. கூட்டத் தலைவர்.

"அண்ணல் காந்தி அடிகள்தான் அடிகளார் உருவில் தோன்றியிருக்கின்றார்கள் என்று நான் நம்புகிறேன். இன்றைய நிலையில் அடிகளாரின் சேவையும் சமயப் பிரசாரமும் புயல் வேகத்தில் இருக்கின்றது என்பதை எல்லோரும் பத்திரிகை வாயிலாக நன்கு அறிந்திருக்கலாம். இன்றைய நிலையில் சமயத் தத்துவங்களைப் புரிந்துகொள்ளாதவர்கள் எழுப்புகின்ற கோஷங்களுக்கெல்லாம் திருப்பெருந்திரு குன்றக்குடி அடிகளார் தக்க ஆதார விளக்கத்துடன் மறுப்புக் கொடுத்து வருகின்றார்கள். அவர்களின் சொற்பொழிவுகள் அத்தனையும் மக்கட் சமுதாயத்திற்குப் பயன்பட வேண்டுமென்ற காரணத்துடன் அவைகளைப் புத்தகரூபத்தில் வெளியிட முன்வந்துள்ள மணிமொழிப் பதிப்பகத்தாரின் முயற்சி வெற்றிபெற இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

சமயத்தின் அடிப்படையில் கல்லூரிகளும் வைத்திய நிலையங்களும் நிறுவப் பெறுதல் வேண்டும். குழந்தைகளுக்கு இளமையிலேயே சமயக் கருத்துக்களைப் புகுத்துதல்வேண்டும். சமயத்தின் தத்துவங்களை எளிய முறையில் பாமர மக்களும் நன்கு புரிந்துகொள்ளும் வகையில் மக்கட் சமுதாயத்தில் பரப்புதல் வேண்டும். நாட்டில் நல்லன காணவேண்டுமேயானால் நாமெல்லோரும் பிரார்த்தனையைக் கைக்கொள்ளுதல் வேண்டும். பிரார்த்தனை உளம் கனிந்ததாக இருக்கவேண்டும் கூட்டு வழிபாடு மிக அவசியமானதாகும்.

Koviloor Digital Library

நயமாகவும் ருசியுள்ளதாகவும்
விலை சகாயமாகவும் தேங்காய்
எங்களிடம் கிடைக்கும்
ஆர்டர் கொடுங்கள்

பா. சிக்கந்தர் ராவுத்தர்
தேங்காய் கமிஷன் மண்டி
142, வடக்கு வெளிவீதி
மதுரை.

தந்தி: ஐயாரன்.
M. SV. RM. S. & Co.,
நிர்வாகி:
சேவு. மெ. மெய்யப்ப செட்டியார்
ஏஜண்டு: பர்மா-ஷெல்
காரைக்குடி & அறந்தாங்கி.
கிளைகள்:
தேவகோட்டை, திருப்பத்தூர் R.D.)
கோட்டையூர், காரைகுடுகாந்தான்,
புதுவயல், கல்லல், குன்றக்குடி,
கோட்டாம்பட்டி, பேராவூரணி.
வியாபாரம் செய்பவைகள்:
பர்மா-ஷெல்.
இம்பீரியல் டுபாக்கோ
(இந்தியா லிமிடெட்)
இம்பீரியல் கெமிகல் இண்டஸ்டிரீஸ்.
உற்பத்திப் பொருள்கள்:
இந்தியா பெயிண்டு,
ஸ்டாண்டர்டு பாட்டரி,
எல்லாவித டயர் டியூப்கள்.

உயர்தரமான
எலெக்டிரிக் சாமான்கள்
கிடைக்குமிடம்:
தி சோலையப்பா
எலெக்டிரிக் ஸ்டோர்ஸ்
தபால் பெட்டி எண்: 14
கல்லுக்கட்டி :: காரைக்குடி

Koviloor Digital Library

நல்லன செய்மின்!

"மருள்நீக்கி"

★

சமயவாழ்வு தமிழருக்குப் புதுமை இல்லை. நேற்றைய தமிழர் வாழ்ந்ததும், இன்றையத் தமிழர் வாழவேண்டியதும், நெருநல் தமிழர் வாழப்போவதும் சமய வாழ்வே. தமிழ் இலக்கியத்தை வளம் செய்த பழந்தமிழ்ப் புலவர்களின் பாடல்களிலே சமயவாழ்வு நடாத்துவதற்கான அறவுரைகள் பரவிக்கிடக்கின்றன; சமயத்திற்கு விளக்கங்கூறப் புகுந்தால், உலகினுக்கோர் ஒளிவிளக்காய், உண்மைக்கோர் உறைவிடமாய், சமரசத்தின் நிலைக்களனாய், உண்மைச் சமயவாழ்வு வாழ்ந்து, மறைந்த அண்ணல் காந்தி அடிகளின் விளக்கத்தைவிட சிறந்தது இருக்கமுடியுமா? "சமயம் இதயத்தில் இரண்டறக் கலந்து நிற்பது. சமயத்தின் சாரமே ஒழுக்கம். சமயம் என்பது அன்பே" என்பது அவர்தம் வாய்மொழி அல்லவா?

எனவே சமய வாழ்வு என்பது ஒழுக்கத்தின் பால்படுதல் என்பதும், அன்பே சமயத்தின் அச்சுவேர் என்பதும் நன்கு தெளியப்படும். இதைத்தான் 'தமிழ்த் தென்றல்' திரு. வி. க. கூறுகிறார் மனிதன் விலங்கு நீர்மையினின்றும் வேறுபட்டு தெய்வத்தோடு தொடர்புகொண்டு வாழும் சத்தியாக்கிர வாழ்வு" என்று காந்தி அடிகளும் "சமயமில்லா வாழ்வு பற்றுக்கோடில்லாதது. பற்றுக்கோடில்லா வாழ்வு சுக்கானில்லாக் கப்பல் போன்றது" என்கிறார்.

பண்டைத் தமிழகத்திலே சமயமும் வாழ்வும் ஒன்றி, நீக்கமின்றி நிலைபெற்றிருந்தது. சாதிப்பூசல்களுக்கோ, உயர்வு தாழ்வு வேற்றுமைகளுக்கோ, கண்மூடி வழக்கங்களுக்கோ, சமயத்தில் இடமில்லாதிருந்தது. இன்று உலகாயதத்தின் வளர்ச்சியின காரணமாக, சமயமும் வாழ்வும் வேறுபட்டு, சமயம் தன்குறிக்கோளைத் தவறவிட்டு, வாழ்வு தன் இலட்சியத்தை இழந்துவிட்டு, ஒன்றோடொன்று மோதுகின்ற நிலையை எய்தியுள்ளன.

அன்பு செங்கோலோச்ச வேண்டிய அவனியிலே, இன்று பகைமை பாராள்கின்றது அருள் கொழிக்கவேண்டிய உலகினிலே மருள் எனும் இருள் மண்டி வருகின்றது. மனித வாழ்வின் மையமாகத் திகழவேண்டிய ஒப்புரவு நோக்கம், மங்கி மறைந்து வருகின்றது. நல்லன செய்வாரை நாட்டிலே காணுவது அருமையாக இருக்கிறது. புல்லியர் கூட்டமோ அல்லன செய்து 'ஆகுலங் கூழாக்கொண்டுவாய்விட்டு புலம்புகின்றது'.

சமயத்தின் சிறப்பியல் புகளுள் ஊருக்கு நல்லது செய்வதொன்று. தனித் தனி மனிதர்களின் சேர்க்கைதானே சமுதாயம். தனி ஒவ்வொரு மனிதனும் அல்லன கடிந்து நல்லது செய்தால் சமுதாயம் எவ்வளவு முன்னேறும்? "நல்லது செய்தால் உம்பருலகிலே இன்பம் துய்க்கலாம். அது கிடைக்காவிட்டால் மாறி மாறிப் பிறக்கும் பிறப்பிலே நன்மை உண்டாகும். அதுவும் இல்லையானால், தாம்செய்த நற்பணிகளின் பயனாக, எற்றமடைந்து பிறர் புகழ, கோதில் யாக்கையொடு இறக்கலாம். எனவே எவ்வாற்றானும் நல்வினை செய்க! செய்ய வல்லோமோ என்று ஐயம் கொள்ளற்க!" என்ற பொருள் அமைந்த புறநானூற்றுப் 'பாடலை ஈண்டு நினைவுபடுத்திக் கொண்டால் எத்துணை நன்மை பயக்கும்!

'செய்குவங் கொல்லோ நல்வினை எனவே
ஐயம் அறுர் கசடீண்டு காட்சி
நீங்கா நெஞ்சத்துத் துணிவில் லோரே!
யானை வேட்டுவன் யானையும் பெறுமே
அதனால், உயர்ந்த வேடத்து உயர்நிதி
சினோர்க்கு
செய்வினை மருங்கின் எய்தல் உண்டெனின்
தொய்யா உலகத்து நுகர்ச்சியும் கூடும்
தொய்யா உலகத்து நுகர்ச்சி இல்லெனின்
மாறிப் பிறப்பின் நன்மையும் கூடும்
மாறிப் பிறவாராயினும் இமயத்துக்
கோடுயர்ந் தன்ன தம்இசை நட்டுத்
தீதில் யாக்கையொடு மாய்தல்
தவத்தலையே"

கண்ணபிரானின் கீதைப் பேருரைபின் சாரமும், இயேசு பெருமானின் விவிலிய வேதக் கருத்தும், முகம்மது நபியின் குரான் போதிக்கும் நெறியும் மேற்கண்ட பாட்டிலே எதிரொலிக்க வில்லையா?

எனவே தமிழ்ப்பெருமக்களே! நல்லன செய்மின்! நாட்டிலே வளம் கொழிக்க நல்லன செய்மின்!!

Koviloor Digital Library

பாரதியார் வகுத்திட்ட பாதை

விரைக்கவிஞர்

பாரதியார் வகுத்திட்ட பாதை தன்னில்
பசுமரங்கள் தளிர்த்தவழி சோலை தன்னில்
சீரதிகம் கொண்டஇளந் தென்றல் வீசும்
தோகைமயில் நடமாடும் திரியு மானும்
காரதிக மின்னல்மழை கலந்து பெய்யும்
காசுலுயர் பெருவாழ்வு கனிந்து கூடும்
பேரதிகம் கொள்ளபிர யாணம் செய்வீர்
புதியநலந் தருங்காட்சி பொருந்தக் கொண்டே

கரடுமுர டில்லாது வகுத்த பாதை
காதவழி கணத்தினிலே கடக்க வாகும்
திரடில்லை பள்ளமில்லை தொலைவு மில்லை
சோர்வில்லை களைப்பில்லை தேர்வீர் மேலும்
திறமையோ டவ்வழியே செல்வீ ராகில்
சுகமுண்டாம் துணிவுண்டாம் சிறந்த வாழ்வுத்
தரமுண்டாம் தளிர்வுண்டாம் தகையுமுண்டாம்
தலைமைபெறு நிலையுண்டாம் தரணி தன்னே

வாழ்வென்னும் ஊருக்குப் போகும் பாதை
வழிகாட்டி நம்மையும்வாழ் விக்கும் பாதை
தாழ்வென்னும் சிறுமைநிலை தவிர்க்கும் பாதை
சங்கடமில் நடமாடச் சமைந்த பாதை
ஏழமைநிலை யகற்றிடற்கே ஏற்ற பாதை
யாவருமே ஓரினமா யியங்கும் பாதை
ஆள்கின்ற மேன்மைநலம் அருளும் பாதை
அப்பாதைக் கொப்பாமோ? அவனி தன்னே

சாதிமத பேதமிலாத் தன்மைப் பாதை
சழக்கென்னும் வழுக்கில்லாச் சமைந்த பாதை
நீதிநெறி ஒழுக்கமெலாம் நேர்ந்த பாதை
நிமிர்ந்துநலை நடக்கின்ற நியாயப் பாதை
ஓதுபுகழ் வாழ்க்கைநிலை உயர்த்தும் பாதை
உளமகிழ இன்பநிலை ஊக்கும் பாதை
தீதில்லா அறநெறியைச் சேர்ந்த பாதை
தியாகிபா ரதிபாதை சிறந்த தாமே

Koviloor Digital Library

சமய வாழ்வு

★ வித்வான் வி. சிவக்கொழுந்து தேசிகர் ★

இன்று உலகில் எத்துறையிலும் மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளது. கலையிலே, விஞ்ஞானத் துறையிலே மற்றெங்கணும் மறுமலர்ச்சியடைந்திருக்கக் காண்கின்றோம். கலை ஒருசிலருக்கேயுரியது என்ற எண்ணமகன்று மக்களின் கவலையைப் போக்கும் கவர்ச்சி வலையாகிவிட்டதைக் கண்டு களிப்படைகின்றோம். அதே போன்று விஞ்ஞானமும் அழிவுச் சக்தியை நோக்கி விரைவாகப் பயணம் செய்துகொண்டிருந்ததைத் தடுத்து நிறுத்தி ஆக்க வேலைக்கான முறையில் அதனைப் பயன்படுத்த வேண்டுமென்று, பேச்சாலும், எழுத்தாலும், செயலாலும் பணிபுரிபவர்களைக் கண்டு அளவிலா ஆனந்தங்கொள்கிறோம். ஆனால் இவற்றைவிட அரியதொரு சக்தி-சமுதாயம் நன்கு வாழப் பயன்படும் சக்தி-மறுமலர்ச்சி யடைந்துள்ளதைக் காண மறுக்கிறோம்.

சமுதாயம் சீர்பெற-சமுதாயத்திலே நிலவும் பேத மகல-சமயம் மக்களின் மனதிலே உருக்கொள்ள வேண்டும். எத்தகைய சமயம்? விரிந்த மனப்பான்மையும், பரந்த உயிர்க் கொள்கையுமுடைய சமயமாக இருத்தல் வேண்டும். எல்லாச் சமயங்களும் விரிந்த மனப்பான்மை யுடையது தான். ஒவ்வொன்றும் தன்னகத்தே உயரிய கொளகைகளைக் கொண்டுதான் இலங்குகிறது. எனவே ஒவ்வொருவரும் சமயநெறியினைப் பின்பற்றுதல் அவசியமாகும். அத்தகைய சமய நெறியினைப் பின்பற்றும் முறையினில் இன்று நம் நாட்டில் சிறப்பாகத் தமிழ் நாட்டில் சமயநெறி மறுமலர்ச்சியடைந்துள்ளது.

சமயநெறி மனித வாழ்விற்குத் தேவையானதா? சமயநெறியினைப் பின்பற்றாத மனிதன் உலகில் வாழமுடியாதா? என்ற வினாக்களைக் கேட்போருளர். சமயநெறியின்றி மனிதன் வாழமுடியாதா? என்ற வினாவிற்கு, முடியும், முடியாது என்ற பதிலைவிட, முடியுமா? என்று வினாவாக இல்லாமல் வினயமாகக் கேட்க ஆசைப்படுகிறேன். முடியுமானால் அவன் உலகப் பற்றற்றவனாக; விருப்பு வெறுப்பில்லாதவனாக; வேண்டுதல் வேண்டாமை யில்லாதவனாக இருத்தல் வேண்டும். எனவே சராசரி மனித வாழ்வினை நடாத்துகின்ற நாம் சமயநெறியினைப் பின்பற்றுதல் அவசியமாகும். சமயநெறிகள் என்ன கூறுகின்றன? நல் ஒழுக்கம் வேண்டாமென்று கூறவில்லை. மனங்கனியப் பேசும் இன்சொல் பேசாதே என்று மறுக்கவில்லை. பிறர் முன்னேற்றங்கண்டு பொறாமைப்படு என்று பொல்லாங்கு பேசவில்லை. அடுத்தவனைக் கெடுக்க உன் நயவஞ்சக வலையினை விரித்துப் பாழ்படுத்து என்று பழிச்சொல் கூறவில்லை. இத்தகு குணங்களைக் கண்டால் எத்தகு சமயமும் அஞ்சிநடுங்கும்.

மனிதாபிமானம் எவை யெவையென்று போற்றப்படுகின்றனவோ அவற்றினையெல்லாம் மனித சமுதாயத்திற்குத் தந்த பெருமை சமயங்களுக்கு உண்டு. எனவே சமயம் வேறு, வாழ்வு வேறு அல்ல. சமயமும் வாழ்வும் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்புகொண்டவையாகும்.

சிலர் கூறலாம் நல்லொழுக்கங்கள் என்று பேசப்படுகின்ற நெறிகளனைத்தையும் என் வாழ்வில் கொண்டுள்ளேன். பிறருக்கு என்னாலான உதவியை எதிர்பாராது செய்கிறேன். மற்றும் மாசிலாக் குணங்களை மறுக்காது என் வாழ்வில் ஏற்றுக்கொள்ளுகிறேன். ஆனாலும் நான் ஏதாவதொரு சமயத்தினைப் பின்பற்றித்தான் ஆகவேண்டுமா? நீங்கள்தானே கூறுகிறீர்கள் நல்லொழுக்கங்களே சமயத்தின் உயிர்நாடியென்று. அக்கொள்கைகளைப் பின்பற்றுகிறேன். பின்பற்றுவதோடு அமைந்துவிட்டால் மட்டும் போதாதா? சமயப் பொறியினையும் நான் சுமக்க வேண்டுமா? என்கின்றனர். அவர்களின் விவாதம் மிக நன்று. அன்னாரை நாம் அவமதித்தல் கூடாது. அவர்கள் நாத்திகரிலே ஆத்திகராவர், ஆத்திகரிலே நாத்திகர் இருப்பது போன்று.

அத்தகைய நல்லவர்களுக்கு நாம் கூறும் விளக்கம் இதுவேயாகும். ஒருவன் அழகான பூஞ்சோலை யமைக்க எண்ணுகிறான். தேடித் தேடி அலைந்து கண்ணைக் கவரும் முறையிலும், கம்மென்று மணம்

வீசும் வகையிறும் பல நல்ல பூஞ்செடிகள் வைத்துப் பயிராக்குகின்றான். செடிகள் வளர்கின்றன; கொடிகள் பூத்துக் குலுங்குகின்றன. ஆனால் அவன் செய்த ஒரு குறை தோட்டத்துக்கு வேலியமைக்க மறந்துவிட்டான். மறந்துவிடவில்லை மற்றவர்களிடத்து அவனுக்குள்ள அசைக்க முடியாத நம்பிக்கை 'நம் தோட்டத்தை யாரும் பாழ்படுத்த மாட்டார்கள்' என்பதாகும். மனிதர்கள் அந்த நச்சு எண்ணம் கொள்ளாவிட்டாலும் சிந்திக்கத் தெரியாத மற்றைய விலங்கினங்கள் பாழ்படுத்தாமலா விட்டுவிடும். அது போன்று எத்துணைத் தூய உள்ளம் கொண்டவனாயினும், அவன் தன் வாழ்வெனும் தோட்டத்திற்குச் சமயமெனும் வேலியமைக்க மறப்பானாயின் - மறப்பானாயின் அவன் வாழ்வு வளமாக நீண்டநாள் அமைய முடியாது. இதனைத்தான் நெடு நாட்களுக்கு முன்பிருந்தே சமயக் குரவர்கள், தலைவர்கள் விளக்கி வந்தார்கள்.

காலம் கடந்து சென்றது. வாழ்விற்குப் பாதுகாவலாக விளங்கிய சமயம் இடைக்காலத்திலே ஏற்பட்ட சில மாறுபாடுகளால் தன் இடத்தை மாற்றிக்கொண்டுவிட்டது. மாறுபாடுகள் என்னென்ன என்று ஆராயப் புகுவோமாயின் பெருகும். சுருங்கிய அளவில் ஒன்றை மட்டும் கூறலாம். அதுவும் நாலடியார் செய்யுள் ஒன்றின் கருத்தைக் கூறினால் மட்டுமே நன்கு விளங்கிவிடும்.

தட்ப வெப்ப நிலைக்கேற்பப் பசுக் கூட்டங்களின் நிறம் இடத்திற்கு இடம் மாறுபட்டிருக்கின்றன. ஆனால் அவை தரும் பாலின் நிறம் வெண்மையாகும். அது போன்று பல்வேறு நாடுகளில் பல்வேறு சமயங்கள் தோன்றினும் . அச் சமயங்கள் சொல்லிச் செல்லும் செம்பொருள் ஒன்றுதான் என்ற உண்மையை உணர மறுத்தார்கள். உண்மையை உணர மறுத்ததால் உண்டான நிகழ்ச்சிகள் உள்ளத்தை உலுக்குவனவாகும். இந்த நிலை வந்தபின் வாழ்வு-தோட்டம் என்ற நிலை மாறி-சமயமே தோட்டம், வாழ்வே அதற்கு வேலி என்ற நிலை வந்து மக்கள் மனத்தினை மாற்றிவிட்டது. சமயம் நம் வாழ்வை வளப்படுத்துவது என்ற எண்ணமகன்று சமயத்தைக் கட்டிக் காக்கும் நிலைவந்தது. இச் சமயத்தில்தான் ஆத்திகரிலே நாத்திகர் சிலர் தோன்றினார்கள். பொதுமக்கள் சமயம் என்றாலே சாமான்ய மக்கள் பின்பற்றமுடியாத ஒன்று என்று பிழைபடவே உணர்ந்தார்கள்.

இந்நிகழ்ச்சியினை மட்டுமே அடிப்படையாகக்கொண்டு சமய வாழ்வினை வெறுத்தொதுக்குதல் அறிவுடையோர் செயலன்று. சமய வாழ்வு அன்பான வாழ்வு - அடிமை வாழ்வன்று. சமயத் தலைவர்கள் ஆண்டவனை எட்டாத கனியாக, அண்ட முடியாத பயங்கரப் பொருளாகக் கருதவில்லை. உள்ளத்தில் கள்ளமில்லாமல் உவகையோடு இறைவனைத் தம்மிச்சைப்படியெல்லாம் தொழுது உறவாடியிருக்கிறார்கள். நாமும் நினைத்தால் அத்தகைய உயரிய நிலையை அடையமுடியும்.

கானிடைத் திரியாது, அந்தமூலங்களைப் புசியாது, தீயிடைக் குளிக்காது பெறலாம். அப்பேறு பெறுவதற்கு நல்ல மனம் வேண்டும், அன்பு கனிய இனிய முறையில் இறைவனைத் தொழுதல் வேண்டும். அத்தகு நிலை பெற்றால் அவனை மறக்காத நிலை பெறலாம். இறைவா நான் உன்னை மறந்துவிட்டேனென்று என்னை நீ தண்டித்தல் சரியன்று; ஏன் உன்னை மறவாத நிலையை எனக்கு நீ தரவில்லை எனக் கேட்கலாம், "அம்மையே" என்று அன்பொழுக அழைக்கலாம்; "அப்பா! நான் வேண்டும் பொருள்களைத் தந்தருளல் வேண்டும" என்று கேட்கலாம். "அன்புடைய மாமனும் மாமியும் நீயே யாவய், ஆகவே என் வாழ்விற்குகந்த முறையில் விருந்தோம்புவதில், கறவுதலும், இரவுதலும் இல்லாத ஒரு பெண்ணை என் வாழ்க்கைத் துணைக்குத் தந்திடுக" என உரிமையோடு கேட்கலாம். பெற்றோரிடமும் உற்றோரிடமும் பெற முடியாத பல உரிமைகளை மனைவி கணவனிடத்தில் பெறுகிறாள். ஆகவே நாமும் இறைவனை "எனை மணந்த மணவாளா" என அழைத்து "உன் அருட்சோதி உலகெலாம் பரவும் வகைசெய்ய எனக்கு ஆற்றலைத்தந்திடுக" எனக் கேட்டுப் பெறலாம்.

சமய வாழ்வு - அன்பு வாழ்வு, உரிமை வாழ்வு, இன்ப வாழ்வு அவ் வாழ்வு வளர வேண்டும. வளம்பெறல் வேண்டும். அதற்காகத் தொண்டாற்றும் குரவர்கள் அனைவரும் மக்கள் மன்றத்தின் மதிப்பிற்குரியராவர்.

Koviloor Digital Library

இறைத் தன்மை

வித்வான் சிதம்பரம்

○

இறைவன் என்ற சொல் அரசன், தலைவன், கடவுள் என்னும் பொருள்களைத் தரும். பார்க்குமிடமெங்கனும் நீக்கமற நிறைந்திருப்பவன் இறைவன் காணமுடியாத கடவுளை எவ்வாறு உண்டு என்று கேட்கின்றனர் சிலர். காற்று அடிக்கிறது அதைக் காணமுடிவதில்லை; அக் காற்றே இல்லை என்று கூறமுடியுமா? ஆனால் அதை உணர்கிறோம். அதைப்போல கடவுள் உண்டு என்று உணர்தல் வேண்டும்.

இறைவன் ஒருவனே. அவன் நிலவேறு பாட்டிற்கேற்பப் பெயரிடப் பெற்றான். குறிஞ்சிநிலக் கடவுளுக்கு முருகன் என்றும், பாலை நிலக்கடவுளுக்கு கன்னி (தேவதை) என்றும், முல்லை நிலக் கடவுளுக்குத் திருமால் என்றும், மருத நிலக் கடவுளுக்கு இந்திரன் என்றும், நெய்தல் நிலக் கடவுளுக்கு வருணன் என்றும் நம் பண்டைத் தமிழ்ப் பெருமக்கள் வழங்கி வந்தனர்.

"இறைவன் கண்களில் மை தீட்டப்பட்ட உமாதேவியாரைக் கொண்டிருக்கும் சிவபெருமான், காஞ்சிமாநகரில் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ளவன். நீண்ட சடையை உடையவன். எலும்பு மாலைகளைக் கழுத்தில் அணிந்து கொண்டு சுடுகாட்டில் திரிபவன். என்னைக்காட்டிலும் நல்ல நல்ல தன்மையையுடையவன். ஒப்பற்றவன். ஒருவன் அன்று. ஓர் ஊரில் வாழ்பவனும் அன்று. உவமைகளால் கூறவியலாத தன்மையையுடையவன் அவன், அருளே நிறமாகத் திகழ்பவன். இத்தன்மையுடையவன் இறைவன். இந்நிறத்தையுடையவன் இறைவன். இவனே இறைவன் என்று எழுதிக்காட்ட இயலாது" என்று பாவுக்கரசராகிய நாவுக்கரசர் பகருமாற்றான் இறைத்தன்மை நன்கு புலனாகின்றது.

மைப்படிந்த கண்ணாளுந் தானுங்கச்சி
மயானத்தான் வார்சடையான்
என்னி னல்லான்
ஒப்புடைய னல்லன் ஒருவனல்லன்
ஒரூர னல்லன் ஒருவம னில்லி
அப்படியும் அந்நிறமும் அவ்வண்ணமும்
அவனருளே கண்ணாகக்
காணின் அல்லால்
இப்படியன் இந்நிறத்தன்
இவ்வண்ணத்தன் இவனிறைவன்
என்றெழுதிக் காட்டொணாதே

இத்தெய்வத் திருப்பாடலாகிய தேவாரம், சைவசித்தாந்த சாரமாகவும், கடவுள்த் தன்மையை விளக்கும் சான்றாகவும் மிளிர்கிறது.

ஒரு பெண் காலை புலர்ந்ததும் எழுந்திராமல் உறங்குகிறாள். அவளைத் தோழியர் வந்து எழுப்புகின்றனர். ஆனால், அவள் படுக்கையை விட்டு எழுந்திருக்கவில்லை. தோழியர் அப்பெண்ணைப் பார்த்து, "முத்துப்போன்ற பற்களையுடைய பெண்ணே! உனக்கு இன்னும் விடியற்காலம் ஆகவில்லையா? படுத்து உறங்குகிறாயே" என்று கேட்கின்றனர். அதற்கு அப் பெண், கிளிபோன்ற மொழியினையும் அழகினையுமுடைய எல்லாப் பெண்களும் இங்கே வந்திருக்கின்றனரா? எண்ணிச் சொல்லுங்கள் என்று கேட்கிறாள். அதற்குத் தோழியர்கள், 'விண்ணாட்டிற்கு ஒப்பற்ற மருந்து போன்றவனை, வேதங்களின் சிறந்தவனை, காட்சி இன்பம் தருபவனை, நாங்கள் இம் மார்கழித்திங்கள்க் காலையில் உள்ளம் நெக்குருகப் பாமாலை சூட்டி மகிழ வேண்டும். நீயே வந்து எண்ணிப் பார்த்துக்கொள்; வீணாகக் காலத்தைப் போக்காதே; நீயும் எங்களோடு பரமன் புகழைப் பாடி மகிழ்வதே எங்கட்கு இன்பம் நல்கும்" என்று கூறுகின்றனர்.

இம்மொழி மணிமொழி (திருவாசகம்) இதை அருளிய பெரியார் மணிமொழிப் பெருமான் (மாணிக்கவாசகர்) அம் மணிமொழி வருமாறு:-

ஒண்ணித் திலநகையாய்
இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார்
எல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொண் டுள்ளவா
செல்லுகோ மவ்வளவும்

Koviloor Digital Library

பவுன் ஆபரண மாளிகை

கியாரண்டியுள்ள பவுன் நகைகள்
வெள்ளிப் பாத்திரங்கள் கிடைக்கும்

ந. நா. நந்தகோபாலன் செட்டியார்

நடுபஜார் ரோடு, தேவகோட்டை

குறிப்பு:- ஆர்டர்களுக்கு எல்லாச்சாமான்களும் குறித்த நேரத்தில் செய்துகொடுக்கப்பெறும்.

அமோனியம் சல்பேட் சீமை உரம்வைத்து அமோக விளைவை அடையுங்கள்

விவசாயப் பெருமக்களுக்கோர் நல்லறிவிப்பு

அமோனியம் சல்பேட் ரஸாயன உர உப்பு (சீமை உரம்) சர்க்கார் நிர்ணய விலைக்கு தேவையான அளவு மொத்தமாகவும் சில்லரையாகவும்; எங்களிடம் கிடைக்கும்.

224 பவுண்ட் மூடை 1-க்கு விலை ரூ. 34-0-0

(விற்பனை வரி தனி)

எஸ். மகாலிங்கம் பிள்ளை

(திருப்பத்தூர் தாலுகாவிற்கு அங்கீகாரம் பெற்ற விற்பனையாளர்)

காரைக்குடி விற்பனை கிளை டிப்போ:

ஸ்ரீமுனியாண்டிவிலாஸ் மில்டேரிஹோட்டல் எதிருள்ள பழயரயில்வே அவுட் ஏஜன்ஸிகட்டிடம்

கோவிலூர் ரோடு, காரைக்குடி.

தலைமை விற்பனை நிலையம்: திருப்பத்தூர். கிளை: சத்துருசங்காரக்கோட்டை, சிங்கம்புணரி, கல்லல், நெற்குப்பையில் கிளை விரைவில் திறக்கப்படும்.

Koviloor Digital Library

கண்ணைத் துயின்றவமே
காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை
வேதவிழுப் பொருளைக்
கண்ணுக் கினியானைப்
பாடிக்கசிந்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருக
யாமாட்டோம் நீயே வந்து
எண்ணிற் றுறையிற்
றுயிலேலோ ரெம்பாவாய்.

கொடுமைப் படுத்தும் கோடை காலம். மாலை நேரம். மலர்கள் நிறைந்த சோலை. மலரோடு கூடிய மணத்துடன் தென்றல் வீசுகிறது. பால் போன்ற நிலவு மனமகிழ் வூட்டுகிறது. மல்லிகைப் பந்தர். ஒரு சாய் மேடை. அம் மேடையின்கண் அழகே உரு வெடுத்த அணங்கு ஒருத்தி உட்கார்ந்து கொண்டு வீணையை மீட்டுகிருள். அவ் வீணுகானம் சோலை முழுதும் பரவி கேட் போரை இசை இன்பத்தில் ஆழ்த்து கிறது. அங்கே வருகிருன் அவ்வணங்கின் கணவன். அவ்விசை இன்பத்தில் உளந் தோய்ந்தவனுய் அவ் வணங்கின் அருகில் அமர்கிருன். பிறகு அவ்விருவரும் ஒரு வராய் கூடல் இன்பத்தில் ஆழ்கின்றனர். அவ்விருவரும் கண்ட இன்பத்தை எவ் வாறு சொல்ல இயலாதோ அதைப் போல, இறைவனே! உன்னைக் கண்டவர் களும் உன் தன்மைகளைச் சொல்ல இய லாது; என்று வயித்தியநாதப் பெரு மானைக் கேட்கிருர் அருட்டிரு, இராம லிங்க அடிகளார்.

இளவேனில் மாலையாய்க்
குளிர்சோலை யாய்மலர்
இலஞ்சிபூம் பொய்கை யருகாய்
ஏற்றசந் திராகாந்த
மேடையாய் அதன்மேல்
இலங்கும் அரமிய அணையுமாய்
தளவேயு மல்லிகைப்
பந்தராய்ப் பால்போல்
தழைத்திடு நிலாக் காலமாய்த்
தனியிளந் தென்றலாய்
நிறைநரம் புளவீணை
தன்னிசைப் பாடலிமாய்
களவே கலந்தகற்
புடையமட வரல்புடை
கலந்தநய வார்த்தை யுடனுய்க்
களிகொள இருந்தவர்கள்
கண்டசுகம் நின்னடிக்
கழனிபுற் சுக நிகருமே
வளவேலை சூழுலகு புகழ்கின்ற தவசிகா
மணியுலக நாத வள்ளல்
மகிழுவரு வேளூரி லன்பர்வ ரோகமற
வளர் வயித்திய நாதனே.

இப்பாடல் இறைத் தன்மையத் தெளி வுறுத்தி மகிழ்வூட்டுதல் காண்க.

இயேசு கிருஸ்து பெருமானின் "மலைச் சொற்பொழிவு" என்னும் அருள் மொழி யில் 'சிறுவர்கள் (கள்ளங்கபடமற்றவர் கள்) என்னிடத்தில் வருவதற்குத் தடை செய்யாதீர்கள்; அவர்கள் பரலோக இராஜ் யத்திற்கு உரியவர்கள்' என்று இறைத் தன்மையை இளஞ் சிருர்களும் கொள்ள வேண்டுமென்று கூறுகிருர்.

"பகைவனுக்கு அருள்வாய் நன்னெஞ்சே" என்று பாடிய பாவலர் சுப்பிரமணிய பாரதியார் பின்னர்க் கூறியதை, முன்னரே இயேசு பெருமான் தன்னைச் சிலுவையில் அறைந்து, இரத்தம் சிந்துகின்ற நேரத் திலும் அத் தீய செயல் புரிந்தவர்களை மன்னித்திடுக என்று கூறினராம். இத ஞல் பகைவனையும் நண்பகனுகப் பாராட் டும் பண்பு, அருள்த் தன்மையுடையவர் கட்கே உண்டு என்பது நன்கு விளங்கு கின்றது.


கடவுள் பக்தியுடையவர்களாய் உலக மக்கள் யாவரும் திகழவேண்டும்; அதுவே அருள்நெறி; சைவ சமயம் வேறு,வைணவ சமயம் வேறு என்ற வேறுபாடுகள் இல்லை; என்பதை அண்மையில், அகிலம் யாவும், அருள்நெறி பரப்பி, அல்லும், பக லும் அயராதுழைக்கும், அருள்நெறிக் கழகத் தலைவர், அருட்டிரு (திருக்கைலாய பரம்பரை, தெய்வசிகமாணி அருணசல தேசிக சுவாமிகள்) அடிகளார், ஆழ்வார் திருநகரில் உழவாரப்பணி புரிந்து உல குக்கு மெய்ப்பித்தார்கள்.

உலக மக்கள் யாவருக்கும் படிப்பினுல் ஏற்படும் பயன் பரமனை வழிபடுதலாகும். பற்றற்ற இறைவனைப் பற்றி நிற்பவர்கட்கு எப்பொழுதும் பிறவியில் ஏற்படும் துன் பங்கள் ஏற்படாது. என்னும் கருத்துக் களடங்கிய வள்ளுவப் பெருந்தகையாரின் வாய் மொழியுடன் இக் கட்டுரையை முடிக்கின்றேன்.

"கற்றதனு லாய
பயனென் கொல் வாலறிவன்
நற்ருடொழா அ ரெனின்"

Koviloor Digital Library

குன்றக்குடியான்



சா. கணேசன், அருள்நெறித் திருக்கூட்ட பொதுச்செயலாளர்.

"உலகம் யாவையும் தாம்உள ஆக்கலும்
நிலைபெ றுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யார்அவர்
தலைவர் அன்னவர்க் கேசரண் நாங்களே!"
— கம்பன்

மன்று தமிழ்மொழிக்கு மா.க.தி.யாய்த் தாம்விளங்கும்
முன்னைப் பெரும்புலவர் மூவர்க்கு அடிமையிவன்
என்னைத் தன்னடிமை என்றேற்று அருள்சுரக்கும்
கன்னித் தமிழின் கவிச்சக் கரவர்த்தி
கம்பனுடன் வள்ளுவனை காசில்மணி வாசகனை
இன்பமுடன் ஓதி இருமாந் திருப்பதல்லால்
நானும் ஒருகவிஞன் நற்றமிழர் தாம்உவப்பத்
தேனுய்க் கவிசமைப்பேன்; தித்திக்க வேபடைப்பேன்
நின்று சுவைபெருக நீங்களெல்லாம் உண்டிடுவீர்
என்று கவியரங்கம் ஏறியதே இல்லையில்லை.

முன்னர் ஒருநாள்என் முன்னைப் பழவினைக்கு
என்னைப் பழிவாங்க எண்ணினன்போல் தஞ்சைக்
கலைக்கூடம் தன்னை கவிஞுறவே ஆக்கி

Koviloor Digital Library

நிலைபெறச் செய்தகலை நேயனவன் பாஸ்கரன்தான்
என்னைக் கவியரங்கில் ஏற்றிவிட்டான்; அப்பொழுது
ஆங்குப் பெருந்தலைமை ஆசனத்தில் வீற்றிருந்த
எங்கள் தனித்தலைவர் ஈசனடி காட்டும்
அருள்நெறியை நாட்டில் அழகாய்ப் பரப்பிவரும்
குருமகா சந்நிதியாம் குன்றக குடிஅடிகள்
என்ன மனத்தகத்தில் எண்ணினரோ யானறியேன்.

வைகாசித் திங்கள் விசாகத் திருநாளில்
குன்றக் குடிநகரில் கூடும் கவியரங்கில்
வேனில் கருதி விருந்தினனாய் வந்திருக்கும்
ஆறு முகத்தோன் அமர்ந்தகொலு மண்டபத்தில்
நின்று பொழியும் நெடுங்கவிஞர் தம்முடனே
நீயும் இடைபுகுந்து நின்பாட்டை ஓதென்று
இட்ட பணியினைநான் ஏற்கத் தயங்கிடல்கண்டு
அப்பா கணேசாஎன் "ஆணை-இது-ஆணை" என்றார்.

எப்படிநான் மீறிடுவேன்? என்ன பதிலுரைப்பேன்?
பாட்டோ வரவில்லை; பாடோ குறைவில்லை;
மாட்டேன் எனஉரைக்க மாட்டாதே வந்துவிட்டேன்
ஒருநாளும் தான்சிரியான் ஓங்கு பெருங்கூட்டத்
திருநாளில் வந்து சிரித்த கதைபோல
இன்று கவியரங்கில் ஏறிவிட்டேன்; ஆனாலும்
அஞ்சவில்லை என்னப்பன் ஆனைமுகப் பெருமான்
கஞ்சமலர் செஞ்சரணம் கால்காட்டிக் காத்திடுமால்.

ஐயா ஆறுமுகவா, அருணா சலமுனிவா
மெய்யாக் கவிபாடும் வித்தகரே தாய்மாரே,
அண்ணன்மார், தம்பி, அனைவோர்க்கும் என்வணக்கம்.

செந்தமிழ் நாட்டில் சிறந்த முதலிறைவன்
அந்த அடிநாள அருளியதும் எங்கியாரோ?
கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வேலோடு
முன்தோன்றி வெற்பின் முடிஅமர்ந்த நீயன்றோ?

அண்டம் முழுவதையும் ஆட்டிவைக்கும் ஆற்றலதைக்
கண்ட பெரியோர்கள் கட்டுரைத்த உண்மையது
ஆருதா ரச்செவ்வி அத்தனையும் நாம்உணர
ஓராறு நன்முகங்கள் உள்ளவனும் நீயேதான்.
அப்பா திருமுருகா, ஆதிப் பெருமானே,
இப்பா ருலகில்உனக்கு எத்தனையோ பேரன்பர்
வாகனமாய்ப் பொன்னார் மயிலைச் சமைத்திருப்பார்
ஆனாலும் இந்த அருமைத் தலத்தினர்போல்
வானோர் பெருமான் வடிவேலன் உன்றனுக்கு
ஞாலமெங்கும் இல்லாத நல்ல படிஉயர்ந்த

கோல மயிலாகக் குன்றத்தை யேஆக்கி
நின்ற பெருமை நிலவுவதும் உண்டோசொல்!
ஆகவே எம்குமாரா ஆறுமுகப் பெருமாளே
போகவே தீமை; பொலிகவே நல்லறங்கள்
என்றே அருள்சுரக்க என்றென்றும் வேண்டுதுமே
குன்றக் குடியான் குளிர்ந்து.

Koviloor Digital Library

பன்மணித்திரள்

எழில்

சுடர்விட்டுக் காட்டுகின்ற கதிரோன் தோன்றச்
சுருக்கவிழ்ந்து சிரிக்குமுகத் தாம ரைக்குள்
கடன்பட்ட மாந்தரிடம் வட்டி கேட்கக்
கடைதோறும் புகுந்துவரும் கணக்க னைப்போல்
இடம்விட்ட மலர்தோறும் சென்று தேனை
இனிதுறிஞ்சி இசைபாடிச் செல்லும் தும்பி
அடைபட்டுக் கிடக்கவெனக் குவிந்து கொண்ட
அல்லிமலர்க் கூட்டத்துள் அழகு கண்டேன்

நிலவு

நிலவணங்கே! உனைக்கதிரோன் கூடுங் காலை
நீலமுகிற் குழல்தளரக் கட்ட விழ்ந்து
பொலபொலவென் றுதிர்ந்தநறு மலர்கள் தாமோ
பூத்திருக்கும் விண்மீன்கள்? வானம் நீங்கள்
நலம்நுகரும் பஞ்சணையோ? கதிரோன் எங்கே
நடந்துவிட்டான்? உதிர்மலரை மீண்டும் சேர்த்துக்
குலமாலை யாக்குதற்கு மின்னல் நாணைக்
கொண்டுவரச் சென்றனனோ? கூறாய் தோழி!

ஆறு

ஊர்மக்கள் வெறுத்தொதுக்கும் கழிநீர் எல்லாம்
ஓடிவந்து கலந்தாலும் மாசு நீங்கி
ஊர்விட்டு நீங்குகையில் தூய்மை யாகி
ஊர்ந்துசெலும் ஆறுகண்டு தமிழைக் காண்பாய்!
சார்பற்றுத் தனித்தியங்க வல்ல என்றன்
தமிழ்மொழியில் பிறமொழிகள் கலந்த போதும்
நேர்வுற்று மாசின்றி இயங்கும் பண்பை
நினைப்பூட்டும் ஆற்றுக்கு வாழ்த்துக் கூறு!

கடல்

தங்கத்தைப் பவழத்தை ஒளிமுத்தைத்
தளிர்க்கரும்பை நெல்லை எல்லாம்
துங்கத்தன் கைநீட்டித் தருகின்ற
தூயதமிழ் நாட்டை விட்டுச்
சிங்கத்தை நிகர்தமிழர் கூலிகளாய்ச்
சீர்கெட்டுச் செல்லுகின்ற
வங்கத்தைக் கண்டேயோ பொங்குகிறாய்?
வாய்திறந்து கத்து கின்றாய்?

"முடியரசன் கவிதைகள்" என்ற நூலிலிருந்து தொகுக்கப்பெற்றவை.

Koviloor Digital Library

இருளும் ஒளியும்

வி. திருநாவுக்கரசு III B. A.
செயலாளர். தமிழ்நாடு மாணவர் அருள்நெறி மன்றம்.

ஒளி நிறைந்த உலகத்தை இருள் எப்படியோ பற்றிவிடுகிறது. இருளுக்குப் பின் ஒளி எழுவதும் இவ்வுலக இயற்கை. ரஷ்யாவிலே ஜார் மன்னனின் கொடுமைக்கு ஓர் முற்றுப்புள்ளி வைத்துத் தன் நாட்டு மக்களுக்குக் குடியரசு வாங்கித் தந்த லெனின், அமெரிக்காவிலே அடிமை வாழ்வில் அல்லல்பட்டுக் கிடந்த மக்களுக்கு விடுதலை வாங்கித் தந்த ஆப்ரகாம் லிங்கன், சீன மக்கள் துயர் துடைத்த சன்-யாட்-சன், உலகத்தின் நோய் எனப் பெற்ற துருக்கி மக்களுக்கு நல்வாழ்வு வகுத்துத்தந்த கமால்பாஷா, பல ஆண்டுகளாகப் பாரதத் தாய்க்குப் பூட்டப்பெற்றிருந்த அடிமை விலங்கினை அஹிம்சை, அன்பு, சத்தியம் என்ற ஆயுதங்களால் உடைத்தெறிந்த உத்தமர் காந்தியடிகள் அவர்களும், இன்னும் வரலாறு காட்டும் இவர்களின் பரம்பரையினரும் அரசியல் துறையிலே இறங்கிநின்று அயராது பணி செய்து இருள் சூழ்ந்த வாழ்வில் உழன்ற தம் நாட்டு மக்களுக்கு ஒளி வழங்கிய உத்தமர்கள்.

ஷெல்லி, வால்டேர், ரூசோ, இங்கர்சால், மாஜினி, மாக்ஸிம் கார்க்கி, ஷேக்ஸ்பியர், பெர்னர்ட்ஷா, தாகூர், மாணிக்கவாசகர், வள்ளுவர், கம்பன், விவேகானந்தர், பாரதி இன்னும் இவர்கள் போன்ற பலர் தம் சொல்லாலும், எழுத்தாலும், கருத்தாலும், சிந்தனைச் சிற்பங்களாலும் எண்ணிறந்த மக்களை, இருளிலிருந்து ஒளிக்கு அழைத்து வந்துள்ளனர்.

இவர்களின் சொற்களும், எழுத்துக்களும், கருத்துக்களும் இவர்கள் நாட்டு மக்களுக்கு வாங்கித் தந்த விடுதலையும் மக்கள் கைக்கொண்ட சமய வாழ்வால்தான் நீங்காது நின்று ஒளிவிடுகின்றன. இதைப் பலர் புரிந்துகொள்ளத் தவறிவிடுகின்றனர். நபிநாயகம் வகுத்துத் தந்த இஸ்லாம் மதமும், ஜீசஸ் கிருஸ்து வழங்கிய கிருஸ்துவ மதமும், புத்தர் வழங்கிய பௌத்த மதமும், வடநாட்டுத் தலைவர்களால் வகுத்துத் தரப்பெற்ற இந்து மதமும், தென்னாட்டு சைவசமய நால்வர்களாலும், சமய நாயன்மார்களாலும் வகைப்படுத்தி அளிக்கப்பெற்ற சைவ சமயமும், அந்தந்த மதத்தை, சமயத்தை கைக்கொண்ட மக்களுக்கு கடவுள் நம்பிக்கையென்ற சிறந்த கருவியால் நீதியையும், நேர்மையையும் உணர்த்தியிராவிட்டால், அன்புள்ளத்தை ஆக்கித் தந்திராவிட்டால், பண்பாட்டைப் பற்றிப் பறைசாற்றியிராவிட்டால், ஒழுக்கத்தை அம்மக்களிடையே ஊட்டியிராவிட்டால், நாட்டு மக்கள் விலங்கினங்களாக மாறியிருப்பார்கள் என்பது அடிப்படை உண்மை. மத நம்பிக்கையோ, வாழ்வோ, அறியாத மக்களிடத்தில் சென்று இந்த விடுதலை வீரர்கள், அறிஞர்கள் எந்த இருளையும் போக்கியிருக்க முடியாது; ஒளியையும் கண்டிருக்க முடியாது. இது முற்றிலும் உண்மை.



ஒழுக்கத்தையும், நீதியையும், நேர்மையையும், அன்பையும், அறத்தையும், பண்பாட்டையும் மக்கள் மன்றத்தில் நிலைபெறச் செய்ய அயராது உழைக்கும் சமய வாழ்வை, மத நம்பிக்கையைக் குறை கூறுகின்ற ஒரு சிறு கூட்டம் இன்று நம் தமிழ் நாட்டிலே சுற்றித் திரிந்து ஓலமிடுகிறது. வெட்கம்! வெட்கம்!! வெட்கம்!!! இந்தத் தீய சக்திகள் வளரவும் ஆரம்பித்துவிட்டன. சுருக்கமாகக் கூறினல் இருள் கவிழ்ந்துவிட்டது மக்கள் மன்றத்தில். இருளைக் கிழித்துத் தமிழர் வாழ்வில் ஒளியை ஊட்ட பல சமய ஸ்தாபனங்கள் இருந்தும், கோயில்கள் இருந்தும், அவை

தம் கடமையை மறந்து வாளாயிருந்தன ஒரு சிறிதுகாலம். அந்நேரத்திலே மக்கள் கடவுளை மட்டும் அல்ல, அத்துடன் மனிதப் பண்பாடுகளையும் மறந்து வந்தனர்.

மாணவர்களின் புது உள்ளங்கள் அந்த நாத்திகர்களின் நச்சுக் கொள்கைகளை விரும்ப ஆரம்பித்தன. தினம் ஒரு கதை எழுதினார்கள். அவைகளில், கணவன் மனைவியின் கழுத்தை நெறிக்கின்ற கருத்துக்கள், ஒருவன் குடித்துவிட்டு கூத்தாடும் நிகழ்ச்சிகள், தந்தை தனயனைக் கொன்ற கற்பனை, தனயன் தாயை அவமானப்படுத்திய நிகழ்ச்சிகள் ஏராளமாய்க் குவிந்திருந்தன. இவைகளைப் படித்துத் தெளிவுபெற இயலாத இளைஞர்கள் அவர்கள் பக்கம் திரும்பினர். ஆசிரியர்களிடம் மோதக் கற்றுக்கொண்டனர் மாணவர்கள். கல்வியோ "நோட்ஸ்" படிக்கின்ற அளவோடு முற்றுப்புள்ளியை அடைய ஆரம்பித்தது.

இந்நிலையில்தான், மக்களின் அறிவு செல்லரிக்கப்படுவதைக் கண்டும் மனம் கலங்காத, சமயவாழ்வு செத்து மடிந்து வருவதைக் கண்டும் அதைப் பற்றிக் கவலைப்படாத இடைக்கால சைவ மடாதிபதிகளின் பரம்பரையை மாற்றியமைக்க அவர்களின் கடமைமை உணர்த்த, அவர்கள் பரம்பரையிலேயே ஓர் சிந்தனைச் சிற்பி, அருள் வள்ளல், அறிவின் சிகரம், சைவ சமயத் தனிப்பெருந் தலைவர் திருப்பெருந்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் தோன்றினார்கள்.

மடாதிபதிகள் இடைக்காலத்தில் வெளியில் வந்து பொதுமக்களிடம் பழகுவது கூட இல்லை. ஆனால் இந்த அருட் தந்தை நாள்தோறும் பல பொதுமேடைகளில் தோன்றுகிறார்கள். சைவ சமயத்தின் தத்துவங்களை அழகாக விளக்குகின்றார்கள். திருவாசகத்தையும், தேவாரத்தையும் அதன் உண்மைப் பொருளுடன் ஓத மக்களுக்கு ஆர்வத்தை உண்டாக்கிவிட்டார்கள். அதன் பயனாய் நாடெங்கும் திருவாசக விழா! நாட்டு மக்கள் சாரி சாரியாக கோயிலில் சென்று ஆண்டவனை வழிபடுகின்றனர்.

அருள்நெறி மருள்நெறியைக் கிழித்து புத்துணர்ச்சியுடன எழுந்தது. பல அறிஞர்கள் இன்று அருள்நெறியில் ஆர்வம் கொண்டு உழைக்கத் தலைப்பட்டுவிட்டார்கள். நாடு நல்லறப் பாதையில் மீண்டும் அடியெடுத்துவைக்க ஆரம்பித்துவிட்டது.

மாணவர் உலகம் மட்டுமென்ன இதற்கு விதிவிலக்கா? இல்லை. மீண்டும் தீவிரமாக அருள்நெறி வளர்க்க - மருள்நெறியினை மறந்து மாணவர்கள் முன்வந்துவிட்டனர். "தமிழ்நாடு மாணவர் அருள்நெறி மன்றம்" என்ற பெயருடன் ,அருள் நெறியினை ஆர்வமுடன் வளர்க்க ஓர் சிறந்த இயக்கம் ஆரம்பமாகிவிட்டது. ஏறத்தாழ ஐம்பது கிளை மன்றங்கள் ஆரம்பித்த இரண்டு மாதங்களுக்குள் ஆங்காங்கு மருள்நெறியினை மாய்த்து அருள்நெறியினை வளர்த்து வருகின்றன. அன்பினை நிலைநாட்டி வருகிறது. கடவுள் நம்பிக்கையை ஊட்டி வருகிறது. இவ்வுலக வாழ்வில் அமைதியையும், இன்பத்தையும், மக்களிடையே நிலைநாட்ட சமய பொருளாதார, கலாசாரத் துறைகளில் பாடுபட்டு வருகிறது. சுருங்கக் கூறினால் இருளை அறவே ஒழித்து புது ஒளியைப் பரப்பி வருகிறது.

ஆகவே, மாணவ நண்பர்களே! பொது மக்களே! இன்றே சேருங்கள் அருள்நெறியில்! நன்றாய் வளர்ப்போம் நம் சமய வாழ்வினை! அன்பாய்ச் சேவை செய்வோம் நாட்டு மக்களுக்கு! எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஓர் இனம் என்ற அடிப்படையில் நல்லனவே காண்போம் நாட்டில்! இருளை ஒழிப்போம்! ஒளியைப் பரப்புவோம்! அதோடு அருளையும் வளர்ப்போம்! வணக்கம். ✵

அறம் வென்றது

* தமிழண்ணல் *

[மனிதனின் சிந்தையிலே தீய பண்புகள் தலைதூக்கும்போது அறவுணர்வு எங்ஙனம் அவற்றை அழித்து விடுகிறது என்பதை சிறுகதையொன்றின் மூலம் சித்தரித்துக் காட்டுகிறார் லியோடால்ஸ்டாய். இங்கே அதைத் தமிழாக்கித் தருகிறார் தமிழண்ணல்.]

★

பழங்காலத்தில் பண்பும் அன்புமுள்ள மனிதன் ஒருவன் வாழ்ந்துவந்தான், அவன் இவ்வுலக வாழ்வின் நலங்களை யெல்லாம் பெற்று, தன்னிடம் வேலைபார்ப்பதற்குப் பல பணியாட்களையும் பெற்றிருந்தான். அப்பணியாட்கள் இத்தகைய தலைவனிடம் பணிபுரியும், பேறு பெற்றமைக்காகத் தங்களுக்குள் பெருமைகொண்டார்கள்.

“இவ்வுலகில் நம் தலைவரைவிடச் சிறந்தவர் எவருமில்லை. நமக்கு நல்லமுறையில் உண்ணவும், உடுக்கவும் கொடுத்து, நம் பலத்திற்குத் தகுந்த வேலையும் கொடுக்கிறார். அவரிடம் உள்ளப் பகைமை கிடையாது; யாரிடமும் எப்பொழுதும் அவர் கடுஞ்சொல் சொன்னதில்லை. விலங்குகளைவிடக் கேவலமாக நடத்துகிற மற்றைய செல்வர்களைப் போன்றவரல்லர் அவர். மற்ற சில தலைவர்கள் தங்கள் பணியாட்கள் தவறு செய்தாலும், செய்யாதிருந்தாலும் தண்டிப்பார்கள்; அன்பான சொல்லொன்றும் சொல்ல மாட்டார்கள். நம் தலைவரோ நம் நன்மையை வேண்டுகிறார், நன்மையே செய்கிறார். அன்பாக நம்மிடம் பேசுகிறார். இதைவிடச் சிறந்த வாழ்வை நாம் விரும்பவில்லை”- இவ்வாறு அப்பணியாட்கள் தங்கள்பிரபுவைப் புகழ்ந்தார்கள்.

இங்ஙனம் இவர்கள் தங்கள் தலைவனுடன் ஒற்றுமையாகவும், அன்புடனும் வாழ்ந்தது காணச் சைத்தானுக்குத் தொந்தரையாக இருந்தது. அதனால் அப்பணியாட்களில் ஒருவனாகிய ‘மாடன்’ என்பவனைத் தன் ஆற்றலுக்குள் அணைத்துக் கொண்ட சைத்தான், அவன் மூலம் மற்றைய பணியாட்களையும் தூண்டிவிடக் கட்டளை பிறப்பித்தது. பிறகு, ஒருநாள் அவர்களனைவரும் ஒய்வாக ஒன்றாய் உட்



கார்ந்துகொண்டு தங்கள் தலைவனின் நற்பண்புகளைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கையில் மாடன் தன் குரலை எழுப்பினான். அவன், ‘நம் தலைவனின் நல்ல குணங்களை இவ்வளவுதூரம் புகழ்வது முட்டாள்தனம். சைத்தான்கூட, அதற்கு வேண்டியதை யெல்லாம் நீங்கள் செய்தால், உங்களிடம் அன்பு காட்டும். நாம் நம் தலைவனுக்கு நன்கு வேலைசெய்கிறோம், அவனை எல்லா வகையிலும் மகிழச் செய்கிறோம். அவன் எதை நினைத்தாலும், முன்கூட்டியே குறிப்பறிந்து, அவன் நினைத்தபடி செய்கிறோம். அன்பு காட்டுவதைத் தவிர அவன் நமக்கு வேறு என்ன செய்யமுடியும்? அவனை மகிழ்ச்சிப்படுத்துவதற்குப் பதிலாகச் சிறிது துன்பப்படுத்திப் பாருங்கள் உடனே என்ன நடக்கிறது என்று? மற்றவர்களைப் போலவே அவனும் பழிக்குப் பழி செய்ய முற்படுவான். குணங்கெட்ட பிரபுக்களைப்போலவே நடந்துகொள்வான்” என்று கூறினான்.

மாடன் கூறியவற்றை மற்றவர்கள் மறுத்தார்கள், பந்தயமும் கட்டினார்கள். மாடனே, தானே தலைவனுக்குக் கோபமூட்டிவிடுவதாக ஒப்புக்கொண்டான். பந்தயத்தில் மாடன் தோற்றால், தலைவன் பொங்கலுக்குத் தரும் புத்தாடையை இழக்க வேண்டும். அவன் வெற்றிபெற்றால் மற்றவர்கள் தங்களின் பொங்கற் புத்தாடைகளை மாடனுக்குக் கொடுத்துவிட வேண்டும். மேலும் மாடனைச் சிறையிற் மூடவோ, விலங்கு பூட்டவோ தலைவன் முயன்றால், அவனை விடுவிப்பது தங்கள்

A. 45787
LIBRARY KOVILOOR

பொறுப்பு என்று மற்றவர்கள் அனைவரும் உறுதி கூறினார்கள். இவ்வாறு பந்தயங் கட்டி மறுநாட் காலையில் தலைவனுக்குக் கோபமூட்டுவதாக மாடன் வாக்களித்தான்.

மாடன் ஒரு இடையன். அவன் பொறுப்பில் விலைமதிப்புள்ள ஆட்டுமந்தை ஒன்று இருந்தது. நல்ல முறையில் பேணிவளர்க்கப்பட்ட அம் மந்தையிடம் பிரபுவுக்கு மிகுந்த பிரியம் உண்டு. மறுநாட் காலையில் சிறந்த ஆடுகளைக் காட்டுவதற்காக பிரபு தம் நண்பர்கள் சிலருடன் ஆட்டுக் கிடைக்கு வந்தான். அப்போது மாடன், தன் தோழர்களைப் பார்த்து, "நம் தலைவனை எவ்வளவு கோபக்காரனாக ஆக்குகிறேன் பாருங்கள்" என்று சொல்வதுபோலக் கண்சாடை காட்டினான். வேலைக்காரர்கள் அனைவரும் கதவு வழியாகவும், வேலிமேலே ஏறிநின்றும் வேடிக்கைபார்த்தார்கள். சைத்தானும் அங்கு நின்ற மரமொன்றில் ஏறிக்கொண்டு தன் அடிமையாகிய மாடனின் செயலைக் கவனித்தது. தலைவன் வேலியைச் சுற்றி நடந்து ஆடுகளையும், ஆட்டுக்குட்டிகளையும் நண்பர்களுக்குக் காட்டிக்கொண்டு வரும்போது, தலைசிறந்த செம்மறிக் கன்றை அவர்களுக்கு உடனே காட்டிவிட வேண்டுமென விரும்பினான். அவன், "எல்லாச் செம்மறியாடுகளும் விலைபெற்றவை. ஆனால், விலைமதிப்பற்ற இணைந்து முறுகி வளர்ந்த கொம்புகளையுடைய 'பொருதகர்' ஒன்று என்னிடமிருக்கிறது. அதை நான் என் கண்ணுள் மணிபோற் கருதுகிறேன்" என்று நண்பர்களிடம் கூறினான். அப் பொருதகரை-ஆட்டுக்கடாவை-நண்பர்கள் நன்றாகப் பார்க்க முடியாதபடி, புதியவர்களைக்கண்டு துணுக்குற்ற ஆடுகள் வேலியைச் சுற்றி ஓடிக்கொண்டிருந்தன. அவைகள் அமைதியாக நின்றபோது மாடன், அவைகளைப் பயமுறுத்தவே அவை மீண்டும் கலந்து ஓடின. நண்பர்களால் அச்சிறந்த கடா எதுவென்று கண்டுபிடிக்க இயலவில்லை. தலைவரும் காட்ட முயன்று களைப்படைந்து விட்டார்.

அவர் மாடனைப் பார்த்து, "மாடனே, அன்பா, தயவுசெய்து இணைந்து வளைந்து வளர்ந்த கொம்புகளையுடைய அச்சிறந்த செம்மறிக் கடாவைப் பிடி! மிக்க கவனமாகப் பிடித்து, ஒரு நிமிடம் அமைதியாக-அது துன்புறாத வகையில் காட்டு" என்றார்.

இவ்வாறு தலைவன் சொன்னதும், மாடன், சிங்கம்போல ஆடுகளிடையே பாய்ந்து அச்சிறந்த கடாவை வலிது இழுத்துப் பிடித்து, அதன் உரோமத்தை வேகமுடன் பற்றி, அதன் பின்னங்கால்களில் ஒன்றை, தலைவனின் கண்களுக்கு முன்னால் உலர்ந்த குச்சியை ஒடிப்பது போல ஒடியுமாறு இழுத்துக் குலுக்கினான். கால் ஒடிந்து, இரத்தம் பீறிட அந்தக் கடா அவன் காலடிகளில் வீழ்ந்தது. இவ்வாறு இடதுபின்னங்கால் ஒடிந்து நொண்டியாக தொங்கும் நிலையிலே சுழல அவன் வலது பின்னங்காலைப் பிடித்துத் தூக்கினான். நண்பர்களும், பணியாட்களும் கிலி கொண்டார்கள். மரத்தின் மேலிருந்த சைத்தான் மாடன் தன் வேலையைச் சரியாக முடித்துவிட்டான்என்று மகிழ்ந்தது.

தலைவன், மேகத்தைப் போல முகம் கருத்து நோக்கினான், நெற்றியில் சுருக்கம் விழுந்தது, தலை குனிந்தான் - ஆனால் ஒரு சொற்கூடப் பேசவில்லை. நண்பர்களும், வேலையாட்களும் அமைதியாக நின்றபடி என்ன நடக்கப்போகிறதோவென்று கவனித்தார்கள். பிறகு தலையை உயர்த்தி அவன் மாடனைப் பார்த்துப் புன்னகை பூத்து,

"ஆ! மாடன்!! உன் தலைவன் உனக்கு என் மீது சினத்தை உண்டாக்கினான். ஆனால் என் தலைவன் உன் தலைவனைக் காட்டிலும் ஆற்றல் மிக்கவன், உன்னிடம் எனக்குக் கோபமில்லை. உன் தலைவனுக்குத்தான் என்னிடம் கோபம்வரும். நான் தண்டிப்பேனென்று நீ பயப்படுகிறாய். உன் சுதந்திரத்தை விரும்பிக்கொண்டிருக்கிறாய். ஆகையால்நான் உன்னைத் தண்டிக்கப்போவதில்லை. மாடன்! நீ விடுதலைபெற விரும்புவதால் இங்கேயே, இப்போதே, என் நண்பர்கட்கு முன்னால் நான் உன்னை விடுவிக்கிறேன். நீ விரும்புமிடத்திற்குப் போ, போகும்போது உன் பொங்கற் புத்தாடையையும் வாங்கிக்கொண்டுபோ!" என்று கூறினான்.

பிறகு, அன்பு வடிவான அத் தலைவன் தன் விருந்தினர்களுடன் வீட்டிற்குத் திரும்பிச்சென்றான். சைத்தானோ பல்லைக் கடித்துக்கொண்டு, மரத்திலிருந்துவிழுந்து மண்ணுள் புதைந்து மண்ணாகியது.

["செல்லிடத்துக் காப்பான்
சினங்காப்பான் அல்லிடத்துக்
காக்கிலென்? காவாக்காலென்?"]

Koviloor Digital Library

வாழிய அருள்நெறி

கி. வா. ஜகந்நாதன்

O

உருள்நெறிச் சகடம் போல்
உருண்டிடும் வாழ்க்கையிலே
இருள் நெறி படராமல்
எவரையும் உய்விக்க
அருள்நெறித் திருக்கூட்டம்
அன்பெனும் பறைசாற்றி
மருள்நெறி மாற்றுதற்கு
வந்தது வந்ததுவே.

இன்றிது வந்ததல
இதன்வர லாறு மிகத்
தொன்று முதற்புகழில்
தோய்ந்து சிறந்ததுவாம்;
மன்றுறை வாணரடி
வாழ்த்திய நால்வர்களும்
அன்று வளர்த்தகுழு
அருள்நெறித் திருக்கூட்டம்.

தெய்வ மணம் பரவச்
செந்தமிழ் நாடுயர
வைவது வேகலையா
வாழ்பவர் அறிவுபெற
நைவுடை அன்பர் குலம்
நாளும் வளர்ச்சியுற
மெய்வழி காட்டுவதிவ்
வித்தக அருட் கூட்டம்.

கடவுள் இதன் தலைவர்;
கருதிய பிறரெல்லாம்
அடியவர்; தொண்டு செய்வார்.
அவருளும் ஓர் தலைவர்,
படிமிசை அருணை மடம்
பயில்வுறு குரவர் சடை
முடிஅரு ணாசலமா
முனிவரர்; அவர் வாழ்க!

●

வாழி அருள்நெறி

கா. சீ. திருவாழ்மார்பன்

O

இராகம் : கேதாரம் — தாளம் : ஆதி

முதனிலை

அருள்நெறி வாழியவே - அடிகளின்
அருள்நெறி வாழியவே (அருள்நெறி

இடைநிலை

கனிமொழி கூறிடும் - அடிகளின்
மணிமொழி தன்னையே
பாடிப்பரவியே நாம் - அன்பில்
கூடிக் கலந்திடவே (அருள்நெறி)

முடிநிலை

சாதிகள் மாய்ந்திடவும் - தீமைப்
போதைகள் மறைந்திடவும்
வாய்மையைக் காத்திடவும் - இன்பச்
செய்மையில் வாழ்ந்திடவும் (அருள்நெறி)

வாராய் மாமணி

ச. கிருஷ்ணமூர்த்தி, B. A.

O

இராகம் : சௌராஷ்டிரம். தாளம் :

பல்லவி

உலகெலாம் தோன்றும் ஒருவனே வாராய்
உலப்பிலாத் தேவே ஒப்பில் மாமணியே
(உலகெலாம்)

அனுபல்லவி

கலைபல அருள்வாய் கனிவுடனே
கருணையின் உருவே களிப்பின் திருவே
(உலகெலாம்)

சரணம்

பூமிசெழித்திட புனலெங்கும் வழிந்திட
புள்ளினம் பூமதுஉண்டு களித்திட
நேம அருள்நெறி நெஞ்செலாம் நிலைத்திட
நன்மையும் இன்பமும்நாடெலாம் திளைத்திட
(உலகெலாம்)

[இசை அமைப்பு : தமிழ் இசை மணிரத்னசபாபதி]

●

ஆன்றோர் சென்ற அருணெறி

பண்டித, மு. முத்து வேங்கடாசலம்

ஆடுநர் பாடுநர் யாவரும்-பெற
அள்ளிப் பொருளை வழங்கினன்-மிகத்
தேடுபுகழ் வள்ளல் பாரியும்-தேரில்
செல்லும் வழி முல்லை நற்கொடி-கொம்பு
நாடித்தரையில் துவண்டிட-நெஞ்சு
நைந்துதன் தேரையும் நல்கினன்-இவை
"கூடும் அருள்நெறி வாழ்ந்தவன்-இந்தக்
கோமகன்''என்று விளக்குமால்

மண்ணினில் வாழுமுயிர்க்கெலாம்-விழி
மணியும் உயிருமாங் காவலன் இன்பம்
விண்ணகத்தார் பெற வேண்டியே-பல
வேள்விகள் செய்து விளங்கினன்-மலர்
கண்ணும் இருவழிபாடுசெய்-துயர்
நன்னகர் ஆரூரையாண்டவன்-நிதங்
கண்ணுதலான் கழல் போற்றுவோன்-புவி
காத்தருளும் மனுச் சோழனே.

கன்றை இழந்திட்ட ஓர்பசு-மிகக்
கண்ணீர் வடிந்திடக் கோயிலின்-வாயில்
சென்று மணியைப் புடைத்தலும்-மன்னன்
செவியில் ஒலிவந்து தாக்கவே-அரி
துன்றும் அணையில் இருந்தவன்-வந்து
சோர்ந்து நிகழ்ச்சியுணர்ந்தனன்-அங்கு
நின்ற பசுத்துயர் கண்டனன்-மிக
நெஞ்சினில் வேதனை கொண்டனன்.

என்னே! வினைவந்ததே! என-மிக்க
இடருற்றரங்கியே ஏங்குவான்"-அந்தோ!
தன்னிளங் கன்றினைக் காண்கிலா-இந்தத்
தாய்முகம் எங்ஙனம் காண்குவேன்-இதன்
மன்னு துயர் போக்க மாட்டிலேன்-நான்
மகனையிழந்திடர் எய்துவேன்''-என்று
மன்னவன் தன்குல மைந்தனின்-மரு
மத்தில் தேராழி செலுத்தினன்.

சோழன் அருள்நெறி ஈதரோ-அப்பர்
தூய அருள்நெறி கேண்மினோ-அன்று
வாழும் வகை யறியாமலே-வெம்மை
வாய்ந்திடு நீற்றறை தள்ளியும்-விடம்
தாழும் அடிசிலை யூட்டியும்-யானை
தன்னைச் சினத்துடனேவியும்-கடல்
பாழும் அமணர்கள் வீழ்த்தியும்-அவர்
பக்கல் அருளுள்ளம் விஞ்சினர்.

அப்பூதியார், மகன் தன்னையே-மறைத்
தனுகி உணவுண்ண வேண்டலும்-விரைந்
தப்பர் உளந்தடுமாறினர்-நம்பர்
அருளால் அறிந்தனர்; கோயிலில்-வந்
தொப்பிலா"ஒன்றுகொல்" பாடியே-பிள்ளை
உணர்ந்தெழச் செய்து மகிழ்ந்தனர்-இது
செப்பருஞ் சீர்மொழிக்கொற்றவர்-பொழி
சிந்தையருள் வளங்காட்டுமால்.

மண்ணினில் மாரி சுருங்கியே-மிக
வற்கடம் வந்துற்ற காலையில்-நிதம்
நண்ணி மிழலை இறைவனார்-தரும்
நற்படிக்காசுகொண்டந்நகர்த்-தங்கும்
எண்ணி லடியவர் யாவரும்-உண்ண
இனிய அமுது படைத்தருள்-காழி
யண்ணல் வாகீசனார் தஞ்செயல்-எழும்
அருளில் விளைந்த செயலரோ.

மெய்யெலாம் வெண்ணீறு பூசியே-கள்ள
வேணி முடித்துவந்துற்றவன்-கொடுஞ்
செய்கை புரிந்தவன் வேடமே-கண்டு
சிந்தையருள் நனிபொங்கியே-அவன்
உய்ந்துசெல் ஆணையுரைத்தனர்-தாம்
உற்ற துயர் மறந்தாரரோ-அம்
மெய்ப் பொருளார் அருள் தோய்ந்திடும்-நெறி
மேன்மையுரைத்திட லொண்ணுமோ.

இன்னவர் வாழ்வில் நடாத்திய-அருள்
ஏய்ந்த நெறியினிற் செல்லுவோம்-பிறர்
இன்னல் காணச்சகியாமலே-உடன்
எய்தித் துடைத்தின்ப மூட்டுவோம்-என்றும்
அன்பு பெருக்கி இம்மாநிலம்-அவ்
வமரர் உலகென ஆக்குவோம்-இங்கு
மன்னுயிர்த்தொண்டு புரிகுவோம்-அருள்
வளரும் நெறிபாடி வாழ்வமே.

Koviloor Digital Library

அன்றும் இன்றும்

"இளைஞன்" ஆசிரியர் P. K. நடராஜன் RKV

"ராமா உன் அப்பா வீட்டில் இருக்கிறாரா?

"இல்லை ஐயா! வெளியில் போயிருக்கிறார். வந்துவிடுவார்.

இது பெரியவர் ஒருவர் கேட்ட கேள்விக்கு வாலிபன் ஒருவன் பணிவுடன் அளித்த பதில்-இன்றல்ல-அன்று-அதாவது அந்தக் காலத்தில்.

"கோபாலா! உன் தகப்பனார் வீட்டில் இருக்கிறாரா?

"யாருக்குத் தெரியும்? என்னிடம் கேட்டால்? போய் பாருங்கள்" இது பெரியவர் ஒருவர் கேட்ட கேள்விக்கு வாலிபன் துடுக்காக அளிக்கும் பதில்- அன்றல்ல-இன்று-அதாவது இந்தக்காலத்தில்.

ஏன் இந்த வித்தியாசம்? எப்படி ஏற்பட்டது? என்று கேட்டால் கால மாறுபாடு என்று கைவிரித்து விடுகிறார்கள். காரணம் அதன் காரணத்தைச் சிந்திக்க சூழ்நிலையோ சூக்ஷமபுத்தியோ இல்லாததால்.

மனிதன் எண்ணுகிறான் - எழுதுகிறான்-எடுத்துச் சொல்கிறான் - அதிலிருந்து எழுச்சி உண்டாகிறது. அந்த எழுச்சிக்குத்தக்க சமுதாயமும் அரசாங்கமும் உருவாகிறது. ஆகவே எண்ணம் நல்லதாக இருந்தால் நல்ல விளைவுகளை ஏற்படுத்துகிறது. கெட்டதாக இருந்தால் கெட்ட விளைவுகளை ஏற்படுத்துகிறது எப்படி கத்தி மாம்பழம் அறுக்கவும் மனிதனைக் குத்தவும் உபயோகப்படுத்தப்படுகிறதோ அதைப்போல்.

ஆகவே இதிலிருந்து என்ன தெரிகிறது? காலமாறுபாடு அதாக உண்டாவதில்லை. மனிதன் தான் உண்டாக்குகிறான்.

ஆகவே ஒரு மனிதன் எந்த சூழ்நிலையில் இருக்கிறானோ அதற்குத்தக்கவாறு தான் அவன் குணம், பண்பு ஏற்படுகிறது. இது மனிதனுக்கு மட்டுமல்ல, முரட்டு சுபாவம் படைத்த மிருகங்களுக்கும்தான்.

வீட்டில் வளர்க்கப்படும் எருமை சாந்தமாக இருக்கிறது. காட்டில் திரியும் எருமை முரட்டு சுபாவம் உடையதாக இருக்கிறது. காரணம் வீட்டு எருமை மனிதப் பண்புக்கு மத்தியில் வசிக்கிறது.

ஆகவே ஒரு மனிதனுக்கு எந்த சூழ்நிலையில், ஏன்? எண்ணத்தில் நல்ல பண்புகள் ஏற்படுகிறது என்பதை சற்று சிந்திக்கவேண்டும்.

பணிவு ஒரு மனிதனுக்கு பல விஷயங்களை கற்றுக்கொள்ள இடமளிக்கிறது. பல விஷயங்களைக் கற்றுக்கொண்டவன் மனப்பண்பாடு அடைகிறான். அந்த பண்பைப் பெற்றதும் நேர்மை அவன் நெஞ்சத்தில் தலைமை வகிக்கிறது. நீதி அவன் வாழ்வுக்கு கொடியேற்றி வைக்கிறது. ஒழுக்கம் அவன் இதயத்துக்கு திறப்பு விழா நடத்தி வைக்கிறது. இரக்கம் அவன் மனமேடையில் சொற்பொழிவாற்றுகிறது. இப்போதுதான் அவன் மனிதனாக பரிமளிக்கிறான், மனிதனை மனிதனாக்குவது நாம் மேலே கூறிய எல்லா குணங்களையும் ஏக காலத்தில் வழங்கும் ஆஸ்திகம்.

தப்பு செய்யக்கூடாது. செய்தால் அதற்குரிய தண்டனை உண்டு என்ற நெறியைக் காட்டி மனிதனை நல்வழியில் வாழச்செய்யும் நல்ல வாசகம்தான் ஆஸ்திகம்.

ஆனால் நாஸ்திகம்?

தெய்வமுமில்லை-தீர்ப்புமில்லை. தண்டனையுமில்லை. நீ வாழப்பிறந்தவன்-மாளஅல்ல-உனது சுய நலத்துக்கு முன் இந்த ஊரும் உலகமும் ஒன்றுமில்லை-சுரண்டு-சுட்டுப் பொசுக்கு-வஞ்சித்தால் தான் மஞ்சம் உண்டு. கூடிக்கெடுத்தால் மாடமாளிகை உண்டு. அண்டிக் கெடுத்தால் அறுசுவை உண்டி உண்டு என்று போதித்து மனித சமூகத்தை சுடுகாட்டாக்கும்.

இதில் மனித சமூகத்துக்கு வேண்டுவது எது? ஆஸ்திகம்-ஆம்- அன்றுபேணி வளர்க்கப்பட்ட அருமையான தத்துவம்.

ஆகவே நமக்கு தேவையானது "இன்று" அல்ல; "அன்று" ஆம் என்றும் தான்.

Koviloor Digital Library

திருக்கூட்டம் சாதித்தது.

செங்கோல் தமிழ்நாடு அறிந்த நல்ல வார்த்தை. உயர்ந்த செங்கோலுக்கு அடிப்படை மக்களின் மனநிலை. மக்களின் மனநிலைக்கு அடிப்படை சமயம். சமயத்தை வளர்க்கமட்டுமல்ல. மக்களுக்கு சேவை செய்யவும்தான் திருமடங்கள் தோன்றின. நம்முடைய சைவத்திற்கு தாழ்வே இல்லை. ஒரு வரையறைக்குள் அகப்பட்டு வளராமல் இருக்கும் தன்மையுடையதுமில்லை நம் சமயம். ஆகவே சைவம் வளராமல் தாழ்ந்துவிட்டது எனக்கூறஇல்லை. இதை வளர்க்காமல் அயர்ச்சியில் இருந்து விட்டால் மடாலயங்களுக்கு நிச்சயமாய் பழிச்சொல் வரத்தான் செய்யும். அருள்நெறித் திருக்கூட்டம் ஆரம்பித்து இதுவரை எந்தப் புதிய சாதனையையும் செய்து விடவில்லை. ஆனால் தமிழ்நாட்டுத் திருமடங்கள் தூங்கவில்லை என்ற செய்தியைத் தான் திருக்கூட்டம் பரப்பி வந்திருக்கிறது.

- குன்றக்குடி அடிகளார்

ஏ. டி. ஏ. என். கம்பெனி
காரைக்குடி.

புதிதாய்த் திறந்துள்ள
எங்கள் பிராஞ்சில்
உத்தரவாதமுள்ள
பவுன் கவரிங்
ஆபரணங்கள்

எல்லாவித டிசைன்களிலும் ஏராளமாகத் தயார் செய்திருக்கிறோம். ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள்

A. T. A. N. & Co.
KARAIKUDI.



பெரியாரும், தவத்திரு அடிகளாரும்



அச்சன் கோயிலில் அடிகளார்



குமரிமுனையில் அடிகளார்



வித்வான் இராமனுசம்

Koviloor Digital Library

செட்டிநாடு வாட்சு ஹவுஸ்

கல்லுக்கட்டி கீழ்கரை,
காரைக்குடி.

நீடித்த உழைப்பு உறுதியான வேலைப்பாடு மனதிற்குப் பிடித்த டிசைன்களில் ரெஸ்ட்வாட்ச்சுகள், அலாரம் டயம்பீசுகள், வால் கிளாக்குகள் கிடைக்கும்.

உரிமையாளர்.
சுப. அ. அருணாசலம்.

குறிப்பு:- ரிப்பேர்கள் கெடிகாரங்களுக்கு ஒரிஜனல் ஸ்பேர் பார்ட்ஸ்கள் போட்டு பழுது பார்த்துத்தரப்படும்

S. A. சாமி ஸ்டோர்ஸ்

10 கோவிலூர்ரோடு-காரைக்குடி.

எங்களிடம் உயர்ந்த ரக எஸ்ஸென்ஸ் வகையாராக்கள் 550 சாக்ரீன் கலர், பவுடர்கள், பால்பவுடர் சோடாகாஸ் சிலிண்டர்கள் சோடா மெஷின் டார்ஷ் மிஷின் & ஸ்பேர்பார்ட்ஸ் எம்டிபாட்டில் வகையராக்கள் சார்க்குகள் வாசனைத் திரவியங்களும் மற்றும் ஸ்டேஷனரி சாமான்களும் விலை சகாயமாய்க் கிடைக்கும்

ஹெட் ஆபீஸ்:-
வெள்ளையன் ஊரணி கிழக்கு,
தேவகோட்டை

S. அழகர்சாமி செட்டியார்,
புரோப்ரைட்டர்.

N. B:- சோடா கலர் ரொட்டி மிட்டாய் கூல்டிரிங், சோப்பு, பன்னீர், தைலம், புகையிலை தயாரிப்போர்க்கு வேண்டியசாமான்கள்கிடைக்கும்.

காரைக்குடி கூட்டுறவு பால் விற்பனை சங்கம் லிமிடெட் R. 69

கீழ ஊரணி தென்கரை :: காரைக்குடி

பால், தயிர், வெண்ணெய், கோவா, ஆடைத் தயிர் கிடைக்கும்.
பால் கறக்கும் டிப்போக்களில் காலை மாலை பால் விற்பனை செய்யப்படும்.
காரைக்குடி கல்லுக்கட்டி தென்கரையில் உள்ள

காபி ஸ்டாலில்

காபி, பால்கோவா, ஆடைத்தயிர் கிடைக்கும்.
மாலை 6½ மணி முதல் காய்ச்சிய பசுவின்பால் கிடைக்கும்.
கூப்பன்தாரர்களுக்கும் டிபாசிட்டர்களுக்கும் சலுகை உண்டு.

ச. துரைசாமி.
காரியதரிசி.

ஆரு. ஆ ராம. சொக்கலிங்கம் செட்டியார். M. L. A.
தலைவர்.

குறிப்பு:- ஆர்டர்களுக்கு பால் சப்ளை செய்யப்படும்.

Koviloor Digital Library

தங்கள் அன்பை விரும்பும் முறையில் தங்கநகைகள் கல்நகைகள் வெள்ளிப் பாத்திரங்கள் இங்கு விற்பனைக்குக் கிடைக்கும். நீண்டகாலத்து அன்பர்கள் என்ற முறையில் விஜயம் செய்யுங்கள்

மீ. சு. ராஜமாணிக்கம் செட்டியார்.

பவுன், வெள்ளி வியாபாரம். காரைக்குடி.

தபால் மூலம் அருள்நெறிப் போதனை

அருள்நெறிப் போதனை அலுவலகம், குன்றக்குடி, இராமநாதபுரம் மாவட்டம்.

அருள்நெறிப் போதனை பாடங்கள் ஒன்பது வெளிவந்துவிட்டன. ஒவ்வொரு பாடத்திலும் திருப்பெருந்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களின் கருத்தோவியங்களும், திரு. க. வஜ்ரவேல் முதலியார், B A., L. T., திரு. S. மீனாட்சிசுந்தரனார், B A., L. T., திரு. வி. சிவக்கொழுந்து, திரு. T. M. ஐயாமணிக் குருக்கள் முதலியோரின் அருள்நெறிப் பாடங்களும் இடம்பெற்று வெளிவருகிறது. எட்டாம் பாடத்திலிருந்து அச்சிட்டே பாடங்கள் வெளிவருகின்றன. இன்றே சந்தாதாரர்களாகச் சேருங்கள். புதிய சந்தாதாரர்களுக்கும் முதல் பாடத்திலிருந்து கிடைக்கும். 24 பாடங்கள் முடிந்ததும் தபால்மூலமே ஓர் தேர்வு சந்தாதாரர்களுக்கு நடைபெறும். தேர்வில் வெற்றிபெறுவோர்க்கு "அருள்நெறிச் செல்வர்" "அருள்நெறிச் செல்வி" என்ற தகுதிப் பத்திரங்கள் திருப்பெருந்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களால் வழங்கப்பெறும்.

ஆண்டு சந்தா ரூபாய் இரண்டு.

பழைய சந்தாதாரர்கள் 1-0-0 கட்டியுள்ளார்கள். பெருத்த நட்டம் ஏற்படுவதையும், இனி பாடங்கள் அச்சிடப்பெற்றே வெளிவரப்போவதையும் உணர்ந்து தங்களாலான பொருளுதவியை, கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி அருள்நெறியினை வளர்க்கும்படி கேட்டுக்கொள்கிறேன். வணக்கம்.

வி. திருநாவுக்கரசு,
அருள்நெறிப் போதனை அலுவலகம்,

சிறந்த சோடா, கலர் பானங்களுக்கு

வீனஸ் சோடாபாக்டரி

போஸ்ட்ஆபீஸ் ரோடு
தேவகோட்டை.

PRO:- A. செல்லம் பிள்ளை.

Koviloor Digital Library

கல்யாணமா? புதுமையா?

விஜயம் செய்யுங்கள்

★ புத்தம் புதிய சரக்குகள்

★ கலை யழகுமிக்க கரைகள்

★ கண் கவரும் வர்ணங்கள்

அசல் கொள்ளேகால், காஞ்சிபுரம், பங்களூர் 6, 7, 8, 9 கஜம் பட்டுச் சேலைகளும், பென்னி மில் கிரேப் சேலைகளும், ஜரிகை, நூல், ஜவுளிகளும், 10 × 6, வெண்பட்டுகளும், மதுரை வேஷ்டி, துப்பட்டாக்களும், கர்னாட்டிக் பக்கிங் ஹாம் மில் ஷர்ட்டிங்குகளும், இங்கிலீஷ் ஷர்ட்டிங்குகளும் சகாயமான விலைக்குக்கிடைக்குமிடம்.

ரங்கூன் ஹால்

அம்மன் சந்நதி :: காரைக்குடி

பிராஞ்சு: கீழச்சிவல்பட்டி, புதுக்கோட்டை.

Regd. No. M. 6504.

Koviloor Digital Library

தந்தி: "RAMBROS" தபால் பெட்டி எண். 31

பிலிப்ஸ் ரேடியோ

PHILIPS
radioplayers
give
you ...

QUALITY
SERVICE
GUARANTEE

எல்லா மாடல்களும் குறைந்த விலைகளில் கிடைக்கும்
ஒருமுறை எங்கள் ஷோ ரூமிற்கு விஜயம் செய்யுங்கள்

ராம் பிரதர்ஸ்

கல்லுக்கட்டி வடகரை :: காரைக்குடி

ஆசிரியர், வெளியிடுவோர்: வி. கிருஷ்ணன், மணிமொழிப் பதிப்பகம், திருப்புத்தூர்
இராமநாதபுர மாவட்டம். அச்சிடுவோர்: கலைமகள் பிரஸ், காரைக்குடி, போன்: 12